
தமிழீழ ஆவணக் காப்பகம்




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அன்புடன் ஆசிரியருக்கு,

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடி" என்ற சிறப்பு பெற்ற தமிழ்ச் சமுதாயம் இப்பொழுது தன் பழம் பெருமைகளை மட்டுமே பேசி கொண்டிருக்கின்றது. ஆக்கபூர்வமான வளர்ச்சிகளுக்காக உழைப்பதை மறந்து தேவையற்ற கனவுகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இருக்கின்றது.

இந்த வருத்தமான சூழ்நிலையில் நாங்கள் எரிமலை என்ற தங்களது இதழை எங்கள் உதக மண்டலம் மாவட்ட தலைமை நூலகத்தில் வாசிக்க நேர்ந்தது எங்களது நற்பேறு என்றே கூற தோன்றுகின்றது.

நம்முடைய சமுதாயத்திற்குத் தேவையான பல நல்ல புதிய கருத்துக்கள் அவ்விதழில் இருந்தன கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம்.

இருபதாம் நூற்றாண்டில் கூட பொழுதுபோக்கு படைப்பு என்று எண்ணிக் கொண்டிருக்கும் எங்கள் பெண் இனத்தின் வளர்ச்சிகளும் சாதனைகளும் மிக, மிகப் பாராட்டத்தக்கன. சோர்ந்து கிடக்கும் மனங்களை, இவ்விதழ் உண்மையிலேயே தட்டி எழுப்பும் நல்ல மருந்து.

வாழ்க தமிழ்! வளர்க அதன் புகழ்! பெறுக தமிழ் மண் இன்றே.

மு. ஜனக்
தமிழ்நாடு

★★★


அன்புடன் ஆசிரியருக்கு,

இங்கு ஈழப்பிரச்சனை பற்றி மக்கள் மத்தியில் தொடர்ந்து பிரச்சாரங்கள் நடத்தி வருகின்றோம். இந்திய தமிழக அரசுகளால் பல இன்னல்களுக்கும், தொல்லைகளுக்கும் ஆளானாலும் எம் பணி தொடர்ந்து நடந்தேறிக் கொண்டிருக்கின்றன. ஆயிரம் அடக்குமுறைச் சட்டங்களுக்கும் துன்பங்களுக்கும் உள்ளான போதும் தியாகம் செய்து தமிழீழம் பெற போராடுவோம். விடுதலைப்புலிகளுக்கு ஈடானவர்கள் எவரும் இல்லை. தாய்மண் காணப் போராடும் அவர்களது போராட்டம் வெற்றிபெற செய்வது உலகதத்தில் வாழும் தமிழர்களின் கடமை.

தமிழ் செல்வன்
தமிழ்நாடு.

★★★

அன்புடன் ஆசிரியருக்கு,




## அக்கறைப் பூக்கள்

எங்கு பிறப்பினும் தமிழன் தமிழனே, இங்கு பிறப்பினும் அயலான் அயலானே.

'ஆகஸ்ட் 95' எரிமலை கண்ணுற்றேன். நீண்டதொரு யுத்தத்திற்கு நாம் தயாராவோம் என்ற தலையங்கத்தை கண்டதுமே என் உள்ளம் உலுக்கி உடைபட்டுவிட்டது. வெறும் ஏக்கத்தில் மட்டும் தமிழன் என்ற ஒரு சொல்லோடு விளம்பரம் ஒட்டப்பட்டவர்களாக வாழ்ந்து வருகிறோம் இந்திய தமிழர்களான நாங்கள். எங்களுடைய மனக்குமுறலை உங்களுக்கு எரிமலை வழியாக தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

தமிழீழ விடுதலைக்கான மூன்றாம் கட்ட ஈழப்போர் நடக்கும் இந்தக்கால சூழ்நிலைக்கு உலகே வியக்கும்; உலகே எதிர் நோக்கும் உலகமே ஆதரவு, உதவி கருத்து, கூறும்போது நாங்கள் மட்டும் இந்திய பார்ப்பன ஆரிய ஆட்சியின் அடக்குமுறையாலும் தமிழக அரசாலும், கைவிலங்கு, கால் விலங்கு, வாய்க்கட்டு, கண்மறை போன்ற தடைகள் இடப்பட்டு எங்கள் ஈழச்சகோதரனின் வரலாற்றை வாய் திறந்து கூற முடியாத நிலையை அடைந்திருக்கின்றோம். இந்த இந்திய தமிழக அரசுகளின் அடக்குமுறையையும் கடந்து துண்டறிக்கைகள், செய்திகள், பொதுக்கூட்டங்கள், பிரச்சார ஆர்ப்பாட்டங்கள் போன்ற போராட்டங்கள் வழியாக ஈழப்போரின் நிலையையும், அதில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தியாகம், போர் நடவடிக்கைகளையும் தமிழக தமிழர்களுக்கு எடுத்துரைத்து வருகிறோம். பல தடைகள் - தடா சட்டம், தேசிய பாதுகாப்பு சட்டம், உணர்வாளர்களை அடிப்பது, சிறையில் அடைப்பது, விசாரணை என்ற பெயரில் கொடுமைகள் செய்வது, வீடு, உடமைகளை சோதனை செய்வது, கடித போக்குவரத்து செல்லும் இடங்களில் எல்லாம் உளவாளிகளின் பின் தொடர்பணிகளுக்கு ஆளாக்கப்பட்டு அடக்கப்பட்ட சுதந்திர நாட்டு தமிழர்களாக வாழ்ந்து வருகின்றோம்.

எங்கள் உணர்வுகளுக்கு எந்த அரசும் எந்த இன எதிரியும் போடும் கட்டில் நிற்க மாட்டோம். எங்களுக்கும் மானம், வீரம், இனஉணர்வு உண்டு. உணர்வுகள் ஒரு போதும் சாகாது தமிழச்செல்வன்

தர்ம்புரி
தமிழ்நாடு

★★★

தோழமையுள்ள நண்பரீர், வணக்கம்!

ஏற்கனவே சில கவிதைகள் எழுதியுள்ளேன். ஒரு இன விடுதலைப் போராட்டத்தில் என்னால் முடிந்த காரியங்களை இங்கு தனியொருவனாக நின்று செய்ய முடிந்ததை செய்கிறேன். முன்பு, ஈழத்து எழுத்தாளர் கே. டானியல் மூலமாக பல நண்பர்களின் நட்பு கிடைத்தது. எம் மொழி பேசுபவர்கள் களத்தில் நிற்கும் போது நானும் நின்றேயாக வேண்டும்.

தமிழகத்தில் எல்லா இலக்கியப் பத்திரிகைகளிலும் கவிதைகள், சிறுகதைகள் எழுதியுள்ளேன். ஈழநண்பர்கள் நடத்தும் இதழ்களிலும் வெளியாகிறது. அண்மையில் வந்த பாரிஸ் 'மௌனத்'தில் என் சிறு கட்டுரை ஒன்று வெளியாகியுள்ளது. புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு நான் சொல்லும் சில கருத்துக்கள் சர்ச்சையை எழுப்பியது. சொந்த மண்ணில் போராடிக் கொண்டிருக்கும் போது அவர்களோடு நிற்கத் துணிவின்றி புலம் பெயர்ந்து வசதி வாழக்கையோடு இருந்து கொண்டு, 'என் கலாச்சாரம்', 'என் மொழி' முதலியவற்றை இழந்து விட்டேன் என்று புலம்புவது பெட்டைப்புலம்பல் அல்லவா?

இந்த என் ஈழ ஆதரவு அடிக்கடி பொலிஸ் விசாரணைக்கு என்னை ஆளாகியிருக்கிறது. தடா கைதிகள் சிலரிடமிருந்து எனக்கு கடிதம் வருகிறது. பதில் எழுதுகிறேன். அது குற்றமாகச் சித்தரிக்கப்படுகிறது. இதற்கெல்லாம் நான் அஞ்சவில்லை. இது என் கடமை.

நா. விஸ்வநாதன்.
கும்பகோணம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எரிமலை

கலை பண்பாடு
அரசியல் சமூக ஏடு

★

பதினைந்தாம் ஆண்டு
ஜனவரி 1996

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42

# உலகத் தமிழரின் எழுச்சியோடு பிறந்த புத்தாண்டு

சிறிலங்கா அரசாங்கத்தின் சூரியக் கதிர் நடவடிக்கையின் முக்கிய விளைவு என்று கூறினால், அது தூங்கிக் கொண்டிருந்த உலகத் தமிழினத்தை விழிக்கச் செய்து எழுப்பி விட்டதுதான். சூரியக் கதிர் நடவடிக்கையின் போது, நடத்தப்பட்ட கொலைகளும், வரலாற்றுப் பெருமை மிக்க யாழ் நகரில் சிங்கக் கொடி ஏற்றப்பட்டதும், 5 இலட்சம் மக்கள் அகதிகள் ஆக்கப்பட்டதும் உலகத் தமிழர் நெஞ்சங்களில் ஆறாக் காயமாகப் பதிந்தன. சிங்கள அரசு தமிழர்களின் துயரங்களை வெற்றி விழாவாகக் கொண்டாடி அவர்களின் சடலங்கள் மீது ஆட்சியை நிறுவ முயன்றது. இது தமிழர் அனைவரது நெஞ்சங்களிலும் கோபக்கனலை ஊட்டியது. சூரியக் கதிர் நடவடிக்கை, ஈழத் தமிழர்களுக்கு மட்டுமல்ல, உலகத் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கையாக அமைந்தது. சந்திரிகாவின் இரட்டை வேடமும் இதன்போது உரிந்தது. தமிழ் தீவிரவாதம், சிங்கள இனவாதம் ஆகிய இரண்டுக்கிடையில் நின்று, நடுவழிப்பாதையைத் தெரிந்து சமாதானத்தைக் கொண்டு வரப்போவதான அவரின் மயக்குத் தோற்றம் மெல்ல மறையத் தொடங்கியது. இனஒடுக்குமுறையின் சூத்திரதாரியும், இராணுவ அடக்குமுறையைத் தீர்வாகக் காண முயலும் இராணுவவாதியும், தமிழினப் படுகொலையை நடத்தி முடிக்க எண்ணும் இனவாதியும் இவரே என்ற உண்மை வடிவம் வெளிப்படத் தொடங்கியது.

விடுதலைப் போராட்டம் வெற்றிப் பாதையில் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்குக் கை கொடுக்க உலகத் தமிழினம் முன்வந்துள்ளது. சிங்கள இனவாத அரக்கன் விரைவில் தோற்கடிக்கப்படுவான். தாயக மண் முழுமையிலிருந்தும் சிங்கள இராணுவம் துரத்தியடிக்கப்படும். தமிழர்தம் தேசிய உரிமைகள் மீட்கப்படவும், தாயகம் விடுதலை பெறவுமான சூழ்நிலை விரைவில் ஏற்படும். தாயக விடுதலையை நிலைநாட்டப்போகும் எமது தலைவனுக்கும் எமது வீரர்களுக்கும் முழுமையான ஒத்துழைப்பை உலகத் தமிழினம் வழங்க முன்வரும்போது மூன்று விடயங்கள் அவதானிக்கப்படல் வேண்டும். ஒன்று, விடுதலை அணிகள் சிங்கள இராணுவத்துக்கு ஈடுகொடுப்பதாக ஆயுதமயப் படுத்தப்பட வேண்டும். இரண்டாவது, அகதிகள் பிரச்சனையை சிறிலங்கா அரசாங்கம் தனது இராணுவ நோக்கிற்கு பயன்படுத்தாதவாறு தடுத்தல் வேண்டும். அத்தோடு, புதிய நாட்டுக்கான கட்டுமானங்களும் அங்கிருந்து முகிழ்த்தல் வேண்டும். மூன்றாவது, சந்திரிகாவின் முகமூடி உலக அரங்கில் அம்பலப படுத்தப்படல் வேண்டும். மேலும், தமிழீழ விடுதலைப் போருக்கு உலக சமூகம் ஆதரவு வழங்குமாறு செய்தல் வேண்டும். உலகத் தமிழினத்தின் தமிழீழ விடுதலைப் போருக்கான ஆதரவு, ஒன்றிணைவு மட்டுமல்ல, முழுமையான பங்குபற்றல் விடுதலையை விரைவுபடுத்தும்.

யாழ்குடாநாட்டினுள் இராணுவம் புகுந்துவிடாது காவல் தெய்வமாகப் பாதுகாத்து நின்ற கேணல் கிட்டுவை, அவரது காலத்தை நினைவு கூருகிறோம். அதேவேளை, யாழ்குடாநாடு மட்டுமல்ல, முழுத் தமிழீழமும் மீட்கப்பட்டு, நிரந்தர பாதுகாப்புக்கு உட்படுத்தப்படல் வேண்டும், அதுவும் விரைவில் நடந்தேற வேண்டும் என்ற தந்திரோபாயத் திட்ட அடிப்படையிலான தேசியத் தலைவரின் திண்ணிய, நுண்ணிய உத்திகளைக் காண்கிறோம், பிரமித்து நிற்கிறோம்.

புதிய வருடம் பிறந்துள்ளது. தமிழீழ மக்கள் ஒளிமயமான எதிர்காலத்தை வழிநோக்கியுள்ளனர். தேசியத் தலைவரின் திறமையிலும், கொள்கை உறுதியிலும், தளராத நம்பிக்கை வைத்துள்ளனர். புது வருடத்தில், அவரது வழிகாட்டலில் தமிழீழம், உலகம் பெருமை கொள்ளத்தக்க விதமாக பெரும் சாதனைகளை நிலைநாட்டும் என்று நிச்சயம் நம்பலாம், அது விடுதலைக்கு வழிவகுக்கும் என்பதும் திண்ணம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# சமூக நீதிக்கு முதன்மை கொடுக்க வேண்டும்

எமது தேசிய இனத்தின் பண்பாட்டிற்கு அமையவும் மாறி வரும் உலகின் நவீன அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்றதாகவும் எமது சட்டமுறை உருவாக்கபட வேண்டும். எமது தேசத்தை அடிமைப்படுத்திய அந்நியர்கள், எமது வாழ்க்கைமுறையில் மாற்றத்தை கொண்டு வர முயன்றார்கள். அவர்கள் கையில் பலம் இருந்ததாலும் நாம் அடிமையாக வாழ்ந்ததாலும் அவர்கள் தமது சட்டங்களையும் எம்மீது திணித்த வேளைகளில் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டோம்.

இப்பொழுது நாம் சொந்த பலத்தின் மூலம் எமது மண்ணை மீட்டு வருகின்றோம். ஆகையால் எமது தேசத்தில் எமக்கேற்ற சட்ட நிர்வாக ஒழுங்கை கட்டியமைத்து வருகின்ற வேளையில், தமிழீழ நீதி நிர்வாகத்துறை திறம்படச் செயற்பட்டு வருவதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எனினும் நீதி நிர்வாக்த்துறை மேலும் விரிவாக்கம் செய்யப்படவேண்டும். போராளிகளாகிய நீங்கள் உணர்வுகளுக்கும் உறவுகளுக்கும் அடிமைப்படாது, சமூக நீதிகளுக்கு முதன்மை கொடுக்க வேண்டும்.

எமது சமூகத்தில் பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறைகள், அநீதிகள் தொடர்ந்து ஆணாதிக்கக் கொடுமைகள் வளர்கின்றன. இந்தச் சமூக அநீதிகளில் இருந்து பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் சட்டங்கள் உருவாக்கப்படுவதோடு, சீதனம் போன்ற பாதிப்பை ஏற்படுத்துகின்ற முறைகளும் சட்டத்தினால் நீக்கப்பட வேண்டும்.

(20-05-1995 அன்று தமிழீழ நீதிமன்றுகளின் நீதியாளர்கள், மேன்முறையீட்டு நீதிமன்றின் நீதியாளர்கள், சட்டவாளர்கள் உறுதிப்பிரமாண நிகழ்வின்போது தமிழீழத் தேசியத் தலைவர் ஆற்றிய உரையிலிருந்து....)

மனதின் ஆழத்து உள்ளுணர்வுகளை வார்த்தைகளில் சித்தரிப்பது கடினம். அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் உணர்வுப் பூகம்பத்தை மனித மொழியில் விபரிக்க முடியாது. எனது அன்புத் தம்பி கிட்டுவின் இழப்பும் அப்படித்தான். அவனது மறைவு எனது ஆன்மாவைப் பிழிந்த ஒரு சோக நிகழ்வு. அதனைச் சொற்களால் வார்த்துவிட முடியாது.

நான் கிட்டுவை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, தளபதியாக, எனது சுமைகளைத் தாங்கும் இலட்சியத் தோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது. ஒரே இலட்சியப் பற்றுணர்வில், ஒன்றித்த போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்துகொண்ட அனுபவத்தில், ஒருவரை ஒருவர் ஆழமாக இனங்கண்ட புரிந்துணர்வில் வேரூன்றி வளர்ந்த நேயம் அது.

அவனுள் ஓர் அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்திலிருந்தே கண்டுகொண்டேன். அது அவனது அழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்துச் சிறப்பியல்புகளும் அவனிடம் இருந்தது. அதனால் அவன் ஓர் அற்புத இலட்சியவாதியாக வாழ்ந்தான்; போராடினான்; அனைத்து மக்களினதும் இதயங்களையும் கவர்ந்தான். போர்க்களத்தில் வீரனாகவும், பொதுமக்களின் தோழனாகவும் எங்கும், எல்லாவற்றிலும், எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது.

கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட, ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு.

வங்கக் கடலில் பூகம்பமாக அவனது ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலையால் எமது தேசமே விழித்துக்கொண்டது.

கிட்டு, நீ சாகவில்லை;

ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கிறாய்!

**வே. பிரபாகரன்**

தமிழீழத் தேசியத் தலைவர்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கிட்டண்ணா வந்திட்டார்

- சுபாஸ்



வெயில் அகோரமாய் எறித்துக்கொண்டிருந்த ஒரு நாளில்நகருக்குள்ளே ஒரே சனம். தேர்த்திருவிழா மாதிரி இருந்தது. கடைகளுக்குள்ளே இருந்து சினிமாப் பாடல்கள் ஒலித்துக்கொண்டிருந்தன. பஸ் தரிப்பு நிலையத்துக்குள் நிரைநிரையாக சனங்கள் பஸ்ஸுக்குத் தவம் கிடந்தார்கள். ஆஸ்பத்திரிக்கும், ரீயூட்டரிக்கும், தேநீர்கடைக்கும், மளிகைக்கடைக்கும், தியேட்டர்களுக்குமாக சனங்கள் முண்டியடித்துக் கொண்டு சென்று கொண்டிருந்தார்கள். பல இடங்களில் இருந்தும் நகரின் மையப்பகுதிகளில் கூடும் மக்களில் சிலர், ஒருவரை ஒருவர் கண்டு குசலம் விசாரித்தார்கள். சிலர், தங்களின் கஸ்ட துன்பங்களைக் பகிர்ந்து கொண்டும் நின்று கொண்டிருந்தார்கள்.

குண்டுச் சிதறல்களாலும், எரிந்த நெருப்பினாலும் பட்ட தழும்புகளைச் சுமந்தபடியிருக்கிற சுவர்களின் கீழே சில மனிதர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

யாழ் நகரம் களைகட்டியிருந்தது. எல்லோரும் ஏதோ ஒரு வகையில் இயங்கிக்கொண்டிருந்தார்கள். பொருள் கொள்ளுதலும், கொடுத்தலும், பேரம்பேசுதலும், கூவி விற்றலுமாக சந்தை பரபரப்பாகக் காணப்பட்டது. குழந்தைகள் மிட்டாய்களுக்காகவும் அழுதார்கள்; வீதியில் அக்குரல்கள் ஆங்காங்கே கேட்டது. தாயைத் தேடி அழுகிற குழந்தையின் குரலாகவும் அந்த அழுகை இருந்தது. ஒரு குழந்தை தாயின் நெஞ்சுச் சட்டையைப் பிய்த்துப் போடுகிறமாதிரி அடம்பிடித்தழுதது. ஒரு வானம் பாடியின் அல்லது ஒரு குயிலின் குரலாக அந்தக் குரல்கள் நெஞ்சைப் பிழிந்தன.

காதலின் வசீகரத்தில் அதன் மாயைத் தோற்றத்தில் ஈடுபட்டவனாக ஒரு இளைஞன் வீதியில் யாரோ ஒருத்தியின் தரிசனத்துக்காக காத்து நின்றான்.

ஒரு இளைஞர் கூட்டம் குதிரைகளில் செல்லும் படைவீரர்களைப் போன்ற வேகத்தில் சைக்கிள்களில் போனது. ரியூட்டரிக்குச் செல்லும் பெண்களை பலமுறை தரிசிக்கக் கூடியதான வாய்ப்புக்களை அவர்கள் ஏற்படுத்தியிருந்தார்கள். அல்லது



அவர்கள் பெண்களைக் கட்டியங்கூறி அழைத்துப் போவது போல் சென்றார்கள். சிலர் சில பெண்களிடம் வாங்கிக் கட்டிக்கொண்டார்கள்.


வெயிலின் அகோரம் தாங்க முடியாதவர்கள் தெருவோர மர நிழல்களில் ஒதுங்கி காற்று வாங்கிக் கொண்டிருந்தார்கள். பசிய இலைகளைச் சுமந்த கிளைகள் அசைந்து, மந்த மாருதத்தைப் பூமிக்கு கொணர்ந்தன.

களிப்புடனும், சந்தோஷத்துடனும் வெற்றிலையைக் கிழித்து

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வாயில் போட்டுக் கொண்டிருந்த முதியவர் கூட்டம் சந்தைக் கட்டிடத்தின் குந்தொன்றில் இருந்து, கூட்டமாய் போய்கொண்டிருந்த பெண்களைக் கண்டு தேவாரப்பாடல் ஒன்றினைப் பாடியிருக்க வேண்டும். முன்னுக்கு கூட்டமாகப் போன இளைஞர்கள் "நைன்ரியளின்ர சேட்டையைப் பார்" என்று தங்களுக்குள் கதைத்துச் சிரித்துக்கொண்டு போனார்கள். பண்ணைப்பாலத்தின் கரையில் இருந்து காற்று இதமாக வீசியது. தாளை, சேற்று மணங்களையும் அது இறைத்தது. நகரின் அழகை ரசிப்பதற்காக, நக



ரினை நோக்கி பண்ணைப் பாலத்தில் ஒரு இசையை எழுப்பியபடி பஸ் வண்டிகளில் மக்கள் படைபடையாக வந்து கொண்டிருந்தார்கள். பூக்களை நாடும் தேனீக்களைப்போல, கடலைச்சேரும் நதியைப்போல, மக்கள் பெருவெள்ளம் நகரில் வந்து திரண்டது; கலைவிழாவுக்காக, இசைவிழாவுக்காக, ஒரு கலந்துரையாடலுக்காக; நூல் நூலாக பின்னப்பட்ட உறவுகளை ஆய்ந்து கொண்டிருக்கேலாது... மக்கள் பெருவெள்ளம் நகரில் வந்து சேர்ந்து கொண்டிருந்தது.

நல்ல தண்ணியில் ஆரையோ வாய்க்கு வந்தபடி பேசிக் கொண்டு வீதியில் நடுத்தர வயதானவர் போனார். "இவங்களுக்கு காசைக் கண்டால் பிடிக்காது விட்டெறிஞ்சு செலவழிக்கோணும். நாளைக்கு இந்தக் குந்தில ஒண்டுமில்லாமலிருந்து காய்வார் பார்" அவனைத் தெரிந்த ஒருவன் அவனது சினேகிதனாகத்தான் இருக்க வேண்டும்; பொரிந்து தள்ளினான்.

ஐஸ் பழக்கடைகளுக்குள் சோடி சோடியாக போய் வந்து கொண்டிருந்தார்கள் புதுமணத்தம்பதிகள்; வீதியில் யாரையும் கவனிக்க மாட்டார்களாம். பஸ்வண்டி ஒன்று சந்தித் திருப்பத்தில் திரும்புவதற்காக வேகத்தைக் குறைக்கையில் ஒரு இளைஞன் சடுதியாய் குதித்து சைக்கிளில் வந்து கொண்டிருந்த யுவதியோடு மோதப் பார்த்தான். பஸ்சுக்குள் இருந்தும் சனங்கள் திட்டின. அவனை வெளிநாட்டுக்கு அனுப்புகிற ஏஜென்சிக்காரனை சடுதியாய் கண்டு கொண்டதாலேயே அவன் அப்படி ஓடியிருக்கிறான்.

நாளைக்கு வெளிக்கிட வேணும் எல்லா ஆயத்தங்களையும் முடித்துப் போடும் என்றும் பழக்க வழக்கங்கள் பற்றியும் ஒரு தோரணையாக எடுத்து விளக்கியபடி ஒரு கோழித்தீன் கடைக்குள் புகுந்தார்கள். அங்கு அவனைச் சந்திப்பதற்காக சில இளைஞர்கள் கனவுகளோடும் காத்துக் கொண்டு நின்றார்கள்.

"இனி இங்க இருக்கேலாது. இந்தக் கிழமைக்குள்ள அனுப்பாட்டி நான் வேற ஏஜென்சியைப் பார்க்கப் போறன்" என்று ஒரு இளைஞன் தனது இறுதி முடிவைப் பற்றித் தெரிவித்தான். 'நீ சுத்துமாத்துக்காரன்' என்றும் அவன் மேலும் சொன்னான். ஏஜென்சிக்காரனுக்கு முகம் கறுத்து விட்டது.

"ஒண்டுக்கும் யோசிக்காதையும் இப்ப ஒரு குறூப் போயிருக்கு; அடுத்த குறூப் போகயிருக்கு; அதோட உம்மைக் கட்டாயம் அனுப்பிவிடுறன், கொஞ்சம் கூட முடியும் பரவாயில்லையே?" எனக் கடுப்பாகக் கேட்டான்.

"காணியைப் பூமியை வித்தெண்டாலும் அப்புவும் அம்மாவும் அனுப்பிறதெண்டு முடிவெடுத்த பிறகு இதெல்லாம் பார்க்கேலாது. நீர் என்னை அனுப்புற அலுவலைப் பாரும்" என்றான் அந்த இளைஞன். எங்கையென்றாலும் ஓடித்தப்ப வேணும் என்ற உணர்வில ஒட்டும் இல்லாது உறவும் இல்லாது அந்நியர்களைப் போல அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

துடிப்பும், இளமையின் அழகும் ஒளிரும் இளைஞர்கள் சிலர் ஏசியா சைக்கிளில் ஒற்றை ஒற்றையாகச் சென்று கொண்டிருந்தார்கள். ஓட்டை ஒடிசல் கொள்ளுகிற ஒருவர் ஆளளவு உயரத்துக்கு பிளாஸ்ரிக் சாமான்களுடன் ஒரு முடக்கு வீதியைக் கடந்து கொண்டிருக்கையில் அகப்பட்டிருக்க வேண்டும். சில தடயங்களும், அவனின் நடத்தையுமே சந்தேகத்தைக் கிளப்பியிருக்க வேண்டும்; சாட்டுப்போக்குச் சொல்லப் பார்த்தான். அவர்கள் அப்படி ஒன்றையும் கேட்பதாயில்லை; பெரிய ஆபத்தொன்று அவனால் நேர்ந்திருக்கும் என்பதை அந்த வீரர்களின் முகங்கள் விளக்கின. அந்த ஆபத்தை அவர்கள் முன் கூட்டியே கண்டு கொண்டதின் சந்தோஷமும் அவர்களின் முகத்தில் தெறித்தது.

விசாரணைகளை அவர்கள் வழியில் மேற்கொள்ள மாட்டார்கள் என்று தெரிந்தும் அவன் தனது வரலாறு முழுவதையும் எடுத்துச் சொல்வதில் ஆர்வமாய் இருந்தான். அற்பமாகவும், மோசமாகவும், காசை நோக்காகக் கொண்டும் வாழ நேர்ந்ததை நொந்தவனாக அக் கணத்தில் அவன் இருந்தான்.

வழியில் பெரிய பூதம் மாதிரி ஆக்கிரமிப்புச் சின்னம் படுத்துக் கிடந்தது. யாருடைய உயிரையும் எப்பவும் விழுங்கும். அல்லது யாரையும் எப்பவும் பிடித்துக் கொண்டு போகும்; கோட்டை இராணுவத்துக்கு உளவு சொல்கிறவர்களில் இவனும் ஒருவன்.

கோட்டைப் பூதத்தைச் சுற்றி வாழ்க்கை நடந்தது. செல் வந்து விழும் அல்லது விசர் பிடித்தவனைப் போலாகிய ஒரு ஆமிக்காரனின் துப்பாக்கி சடுதியாய் இயங்கும்.

ஒரு ஹெலிகொப்ரர் ஆத்திரத்தோடு தாளப்பறந்து மேலெழுந்தது. தங்களுக்கு துப்புச் சொல்லுகிறவனைப் பிடித்துவிட்டார்கள் என்ற கோபம். புலிகளின் துப்பாக்கி ரவை தாக்கி விடக்கூடும் என்ற அச்ச உணர்வு அதன் சமநிலைப் பறப்பைக் குலைத்திருக்க வேண்டும். கட்டிடத்தின் உச்சி ஒன்றில் தொங்குகிற நிலையைக் கடந்து கோட்டைக்குள் இறங்கியது.

கோட்டையின் சகல பார்வைத் தூண்களும் விழித்திருந்தன. நடுக் கடலைச் சுற்றியுள்ள வீதிகளை, வீதிகளில் போவோர் வருவோர்களை வெறுக்கும் பார்வைகளை, அவை உமிழ்ந்தன. 'கோள் மூட்டி' கோட்டைக்குள் இறங்கியதும் ஆமிக்காரங்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கள் நகருக்குள் வர ஆயத்தமானார்கள்.

வாகன உறுமல் சத்தங்களும், வெடியோசைகளும் பலமாய் எழும்பின.

நகரைச் சுற்றிப் பார்க்கின்ற ஆசை; சனங்களை சுடுகிறதுக்கான வெறி; யாராவது ஒருத்தியை பயங்கரவாதி என இழுத்துச்செல்வதற்கான அல்லது ஒரு இளைஞர் கூட்டத்தை இழுத்துச்செல்வதற்கான வெறியின் உச்சம்.

தகிக்கிற வெயிலில் மக்கள் நன்கு களைத்துப் போயிருந்தார்கள். ஒரு இளம் கர்ப்பிணிப் பெண் தன் கையில் இன்னொரு குழந்தையுடன் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறிச் சென்று கொண்டிருந்தாள். அவளால் ஓடவும் முடியாது சென்று கொண்டிருந்தாள். வயதான தன் தாயை அணைத்தவாறு ஒரு இளைஞன் மணிக்கூட்டுக் கோபுரத்தைக் கடந்து சென்று கொண்டிருந்தான். மினிபஸ்கள் உறுமிக் கொண்டு திக்குத் திசையின்றி பறந்தன. இளைஞர்கள், யுவதிகள் பறந்தார்கள். ரியூட்டரிகளில் எல்லோரும் சடுதியாக வெளியேறினார்கள். கடைகள் சடுதியாக அரைக்கதவுகளில் இறங்கின.

மின்னல் அதிர்வாய் யாழ்ப்பாணம் முற்றுகையில் தப்ப முயலும் நடவடிக்கையில் இறங்கியது. விழுந்து கால்களில் அடிபட்டகாயத்தோடு இரத்தம் வழிய வழிய ஒரு இளைஞன் பல்லைக் கடித்தபடி ஆஸ்பத்திரி வீதியைக் கடந்து மறைந்தான். அன்றைய வியாபாரப் பணத்தோடு சில முதலாளிகள் போய்விட்டார்கள்.

அழகிய பெண்கள் கைகளில் புத்தகங்களை காவியபடி வீதி நீட்டுக்குமாக ஓடினார்கள். யாரோ ஒருத்தியின் புத்தகம் வழியில் அனாதரவாய் விழுந்து கிடந்தது. வேறுசில பொருட்களும் உடைந்தும் நொருங்கியும் போய்கிடந்தன. உயர்தர வகுப்பு மாணவர்கள் சைக்கிளில் குதிரை வேகத்தில் ஓடி மறைந்தார்கள்.

ஆமிக்காரன் என்றால் பயம்; எருமை வாகனத்தில வாற இயமன் மாதிரி, உறுமிக்கொண்டு ஆமட் காரில் வருவாங்கள். திக்குத் திசை பாராமல் பயத்தில்தான் ஆமிக்காரன்கள் ரிகரை அழுத்திப்பிடிக்கிறது என்ற விடயம் மக்களுக்குத் தெரியும்.

பலாலியில இருந்தும் இராணுவம் வெளிவருவதற்குப் பயம்; வெளிய வருவதென்றாலும் பெரிய அடுக்குகளோடு வரவேண்டும். அப்போது புலிகளின் நிலக்கண்ணி வெடி தாக்குதல் பற்றிய கதைகளை, அதிலிருந்து தப்பிப் போகிற இராணுவத்தினர் மற்றவர்களுக்கு சொல்லுவார்களாம். பனை அளவுக்கு டிறக்கை தூக்கிப் போட்டது. இஞ்சின் பாகங்கள் ஆகாயக்கல்லுகள் மாதிரி வந்து விழுந்தன. எரிமலை மாதிரி ஏதோ எழும்பின கணத்தில் தங்களின் ஆட்களில் கனபேரைக் காணவில்லை என்ற பயம் அவர்களை ஆட்டிப்படைத்தது. தேவையில்லாமல் அநியாயமாக சாக நேரிட்ட அவர்களின் தோழர்களை நினைத்து மீதியாய் தப்பிச் செல்கிற இராணுவத்தினர் வருந்தினர். அதனால் அவர்கள் வெளியே புறப்படுவதைத் தவிர்த்தனர்.

டிறக்குகளுக்குள் இரும்புத் தொப்பியைப் போட்டுக் கொண்டு மிரளுகிற மிரளலும் பரபரப்பும் சிரிப்பைக் கிளப்பும்; நிலக்கண்ணி வெடிகளை புலிகள் இந்த இடத்தில் தான் வைத்திருப்பார்களோ என்று சதா அவர்களுக்குள் எண்ணம் எழும் கணங்கள் தோறும் செத்துச் செத்து பிறந்தார்கள். இதனாலேயே யாழ்ப்பாணத்தை அவர்கள் வெறுத்தார்கள்.

அந்த வெறுப்பும் ஆத்திரத்துடனும் கிளம்பிய ஆமிக்காரன்களுக்கு நல்ல அடி விழுந்து கொண்டிருந்தது. பதிலுக்கு அவர்களும் சுட்டுக் கொண்டிருந்தார்கள்.

"அங்க கிட்டர் வந்திற்றார்"

ஒரு கடைக்காரன் கண்டு கொண்டான்; ஒரு சிரிப்போட, வழியில் போன ஒருவரை 'அண்ணை உங்களைத்தான் என அழைத்து எத்தனை மாம்பழம் வேணும்" என்று கேட்டபடி கடையைப் புதிதாய் பரப்பத் தொடங்கினான்.

சனங்களுக்கு கொள்ளை சந்தோஷம். எங்கிருந்துதான் வீரம் முளைத்தது என்று தெரியாது. ஒரு நிமிர்த்து நிமிர்த்திக்கொண்டு போனார்கள். வீரகேசரியை ஒரு தட்டு தட்டியபடி அடுத்த பக்கத்துக்கு போகிற தோரணையில் ஒருத்தர் ஆறுதலாக இருந்து கொண்டிருந்தார்.

மேளவாத்தியக் கச்சேரியோட ஏதோ ஒரு விலாஸ் திறந்து கொண்டது.

வெளிக்கிட்டு வந்து முகத்தைக் காட்டின ஆமட்காரில றொக்கட் தாக்கி பலத்த சத்தத்தோடு வெடித்தது. இராணுவ அணிவகுப்பு கடுமையாக, மோசமாக குலையத் தொடங்கியது.

காயமடைந்த இராணுவத்தினர் ஒருவரை மீட்டுக் கொண்டு ஓடுவதில் அவர்கள் கவனம் சென்றது. வாழ்க்கையின் இறுதிக் கணங்களை தரிசித்து ஞானம் பெற்றவர்களாக அவர்கள் முகாமுக்குள் திரும்பத் தொடங்கினார்கள். ஆத்திரமும் இயலாமையும் ஒரு சேர நின்று நின்று சிங்களத்தால் தூசித்துக்கொண்டு துப்பாக்கியால் பொழிந்து தள்ளி



## சுதுமலை முற்றுகை முறியடிப்பு

**கிட்டு தங்கி இருந்த சுதுமலை முகாம் மீது சிங்கள இராணுவத்தினர் ஒரு கமாண்டோ அதிரடித் தாக்குதலை நடத்தினார்கள். மூன்று உலங்குவானூர்திகளில் திடீரென வந்திறங்கி கிட்டுவின் முகாமை சுற்றிவளைத்தனர். ஓரிரு நிமிடங்களில் முகாமிற்கு மிக அருகில் சண்டை தொடங்கியது. கிட்டு கொஞ்சமும் கவலை அடையவில்லை. வாக்கி டாக்கி மூலம் அருகிருந்த முகாம்களில் உள்ள புலிகளை வரவழைத்தார். எந்தெந்த வழியில் வந்து எதிரிகளைத் தாக்கவேண்டும் என்பதற்கான ஆணைகளைப் பிறப்பித்தார். சிறிது நேரத்தில் புலிகளை வளைக்கப் போன சிங்களப் படைகளைப் புலிகள் சுற்றிவளைத்தனர். எதிரிகளின் கமாண்டோத் தாக்குதல் முறியடிக்கப்பட்டது.**

**"தன்னிடமுள்ள குறைந்த ஆயுத பலத்தையும் ஆள்பலத்தையும் சரியான முறையில் பயன்படுத்தித் துணிவுடன் எதிரியைச் சந்திப்பதில் கிட்டுவிற்கு நிகர் அவரேதான்."**

**- பழ. நெடுமாறன், 'காவியநாயகன் கிட்டு'.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

னார்கள். கிட்டண்ணாவின் கட்ட ளைகளை ஏற்று புலிவீரர் செயற் பட்டுக் கொண்டு நின்று கொண்டி ருந்தார்கள். புலிவீரர்களின் துணிச் சல் மிகுந்த தாக்குதலால் அவர்கள் கோட்டைக்குள் இருந்து வெளியேற முடியாது போனது. மக்கள் உச்சி மோந்து பாராட்டுகிறதுக்கான, அன்பைக் கொட்டுவதற்கான சமிக்கை ஒலிகளை சைகைகளை புலிவீரர்களிடம் வெளிப்படுத்திய படி சென்று கொண்டிருந்தார்கள்.

ஒரு வயதான முதியவர் கூட்ட ணிக்கால அரசியலோடு நின்று அடியாய் அடித்து உழைத்த மனி தன் தான். "கிட்டு எங்கையும் முன் னுக்குத்தான் நிற்கும்" என்ற தன் சகபாடிக்கு சொல்லியபடி வின்சர் தியேட்டரடியில் வந்து ஏறினார்.

"ஆமிக்காரங்கள் எண்டாப் பயமே" நல்ல வயதானவர் வெற்றி லையைத் துப்பியபடி சொன்னார். "எங்கட பெடியளிட்ட இன்னும் நல்ல ஆயுதங்கள் இருக்குமெண் டாத் தெரியுமோ!"

"பெடியள் விடமாட்டாங்கள்!" ரியூட்டரிகளுக்குள்ளும் விவாதங் கள் எழுந்தன.

"அடியைப் போல ஒண்டும் வராது" உறுதியாகச் சொன்னான் ஒருவன்.

"புலியள் ஆமியைத் திருப்பி அனுப்பிப் போட்டினம்" ரியூட்டரி இயக்குனர் தெரிவித்தார்.

"கிட்டர் நிற்கிறார் என்றும் அவங் களுக்கு தெரிஞ்சு போட்டுதாம், வோக்கி ஒட்டுக் கேட்கிறாங்களாம்" மாணவர்களுக்குள் நடந்த காரசா ரமான மோதலுக்குள் சத்தமாகக் கேட்டது.

இன்னும் தற்காப்புப் போராட் டம் பற்றியும், அரசியல் விழிப் புணர்வு பற்றியும், கட்டுப்பாட்டு நிலைமைகள் நீடிப்பது பற்றியும் அங்கு சிலாகிக்கப்பட்டது. இரா ணுவ முகாங்களை தாக்கியழிப்பது பற்றியும், அதிலுள்ள கஸ்ட துன்பங் கள் பற்றியும் ரியூட்டரி ஆசிரியர்கள் சிலர் நம்பிக்கையிழந்து பேசினார்கள்.

போராட்டம் என்றால் இழப்புக் களும், துயரங்களும் இருக்கும் என் றும், மக்களும் இணைந்து போரா டுவது பற்றியும் அங்கு சிலாகித் தார்கள்.

வழியில் போவோர் வருவோரி டம் ஆமி வெளிக்கிட்டது பற்றிய பேச்சும் அவர்களை அடித்து மீளத் துரத்தியது பற்றிய பேச்சும் முதன் மைச் செய்தியாக இருந்தது.

கிட்டர் சிறந்த போர் வியூகங் களை வகுத்துச் செயற்பட்டார் என் றும் ஒரு இளைஞர் கூட்டத்தினர் பேசியபடி மனோகராத் தியேட்ட ருக்குள் நுழைந்தார்கள்.

கிட்டண்ணை தாளப் பறந்து வந்த ஹெலிகொப்ரருக்கு 50 கலிப ரால் சுட்டது பற்றியும் அவர்கள் அன்று வியந்து பேசினார்கள். தாங்களும் இணைந்து செயற்பட விரும்பி அரசியற் பிரிவுப் பொறுப் பாளராய் இருந்த திலீபனைச் சந் திப்பதற்காக யாழ் பல்கலைக்கழக முன் வீதியில் காத்து நின்றார்கள்.

கிட்டண்ணா மயிரிழையில் உயிர்தப்பியது பற்றியும் மக்கள் கவலைபட்டார்கள்; ஏதாவது நேர்ந் திருந்தால்..... என்ற கேள்வியை மக் கள் பலமாய் எழுப்பினார்கள்.

தமக்கு ஆபத்தும், துன்பமும், துயரமும் நேரிடுகையில் எல்லாம் தம்மோடு நின்று, தங்களை உயிரி னும் மேலாக நேசித்து, தங்களின் நலனை கருத்தாகக் கொண்டு நின்று, துடியாய் துடித்து இயங்கி நிற்கும் வீரத்தை வியந்து நின்றார்கள். இயங் காது தரித்து நின்ற வாழ்க்கைச் சக்கரத்தை மீளவும் இயங்கும் வண் ணம் சுற்றி விடுவதையும் மக்கள் எண்ணிக் கலங்கினார்கள்.

ஏறத்தாள பத்து வருடங்களின் பின், 'சூரியக் கதிர்' எனும் பெயர் சூட்டிக் கொண்டு இன்று இராணு வம் அந்த பெருமையும், புகழும் மிக்க நகரத்தை ஆக்கிரமித்து நிற்கிறது.

அந்த நகரத்தில் சூரியனுக்குக் கீழே நடந்த நாசத்தை கிட்டண்ணா வின் நினைவோடும், எண்ணத்தோ டும் மக்கள் எதிர்கொள்வர். அவரது இலட்சியத்தை, அவர் கண்ட கனவை, அவரது வீரத்தை கண்டு அநுபவித்த மக்கள் அவரைப் போலவே எழுந்து மீளவும் தமது வாழ்க்கைச் சக்கரத்தைச் சுற்ற வைப்பார்கள். கிட்டண்ணாவைப் போலவே தான் அதோ பல ஆயி ரம் புலிவீரர்கள். காத்தலோடு நிற்காமல், தடைகளை அகற்றிக் காற்றாய்ப் பாயும் தலைவனை மக்களும் போராளிகளும் நோக்கி நின்றனர். பண்ணைப்பாலத்தில் அமைதியான ஒரு மாலைப் பொழுதில் கிட்டண்ணாவைப் பற் றிய புலிவீரர்களைப் பற்றிய பாடல் களைப் பாடியபடி ஒரு மினிபஸ் வேகமாக காற்றில் புரவியைப் போல ஓடும்.

பண்ணைக்கடலில் சூரியன் சிரிப்பான். பறவைகள் சூரியனைச் சுற்றி நின்று சிறக்கை அடித்துப் பறக்கும்.

★★

**நாம் தமிழீழம் என்னும் தனிநாட்டுக்காகவே போராடுகின்றோம். ஆனால் அதேவேளை உலகில் நடைபெறும் புதிய அரசியல் மாற்றங்களையும் பார்க்கின்றோம். பல தேசிய இனங்கள் தமது இறைமையைப் பேணும் வகையில் சேர்ந்து வாழமுடியும் என்பதையும் பார்க்கின்றோம். அதனால் நாமும் இறைமையுள்ள சுதந்திர அரசை அமைத்துக்கொண்டு, மற்ற அரசான சிறிலங் காவுடன் சேர்ந்து வாழமுடியும். அதை விடுத்து சிறிலங்காவின் அதிகாரத்துக்குள் எமது பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமென்றால் அது யாராலும் முடியாத விடயம். அதை நாம் ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை.**

**வெளிநாடுகளிலே ஏராளமான தமிழர்கள் அகதிகளர்க வாழ்ந்துகொண்டி ருகின்றனர். சுவிஸ் நாட்டில் மாத்திரம் இருபதாயிரம் தமிழர் இருக்கின்றார்கள். இப்படியாக ஐரோப்பிய நாடுகளில் உள்ள தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கு அந்நாடுகள் முனைந்து வருகின்றன. ஜேர்மன், சுவிஸ் போன்ற நாடுகளில் எமது மக்களூக்கு எதிரான உணர்வு தலைதூக்கியுள்ளது. பல இடங்க ளில் எம்மவர்கள் தாக்கப்படுகின்றனர். இதனால் இந்த நாடுகள் இவர்களைத் திருப்பியனுப்ப முயல்கின்றன. வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் கூட நிம்மதியாக வாழமுடியாது. எங்கும் சுதந்திரமில்லை. எமக்கென்றொரு நாடு அமையும்போதுதான் நாம் எங்கென்றாலும் கௌரவமாக வாழமுடியும். எமது போராட்டத்திலே எத்தனை இன்னல்கள் வந்தாலும் நாம் தாங்கிநின்று போராடி வெற்றி பெறவேண்டும். மக்களின் அவலங்களும், கஷ்டங்களும் என்னை மிகவும் வாட்டுகின்றன. ஆனால், இப்போது கஷ்டப்படுவதற்குப் பயந்து போராட்டத்தைக் கைவிட்டால் எமது இனம் என்றைக்குமே நிம்மதியாக வாழமுடியாது. எமது இனமே வாழமுடியாத நிலையும் ஏற்படும். அதனால் நாம் எந்தக் கஷ்டத்தையும் தாங்கிப் போராடுவோம்.**

*ச.கிட்டு*
***20-10-1991***
**'என் இனியவளுக்கு...'**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மண்ணுரிமை !

நண்பா !

இன்று நான் ஏக்கப் பெருமூச்சோடும் ஏமாந்தப் பெருவுணர்வோடும் உன்னை சந்திக்க வந்துள்ளேன்.

உலகெங்கினும் உள்ள தமிழன் எதிர்நோக்கும் சிக்கல்களில் ஒன்று மண்ணுரிமையாகும் !

தமிழன் ஏமாளி தான். ஏமாந்தவன் தான் !

இல்லையென்றால் கண்டத்தோடு வாழ்வைத் தொடங்கியவன் இன்று காணாமல் போவானா !

உரிமை - உடமை என்ற இரு நிலைகளிலும் நம்பிக்கை இழந்து வாழ்ந்தவன் தமிழன். உரிமைக்காக ஒரு கோடு போடாமல் வாழ்ந்து விட்டான். உடமைக்காக ஒரு அடையாளம் இல்லாமல் இருந்து விட்டான்.

மடுவையும் மலையையும் கட்டி ஆண்டவன் மறுநாள் கணக்கை எண்ணிப் பார்க்க மறுத்துவிட்டான். யார் பறிப்பார்கள், எதற்கு இந்த வேலி ? கேள்விகளோடு தன்னைக் கேள்விக்குறியாக்கிவிட்டான். இருப்பதெல்லாம் தன்னுடைய இனி எதற்கு உரிமையும் உடமையும் என்ற சிந்தனையால் சிதைந்து விட்டோம். மண்ணுரிமைதான் இன்று இவ்வுலகத்திற்கு முன்னுரிமை ஆகிவிட்டது. மண்ணில்லாத மாந்தனையும் இனத்தையும் யாரும் மதிப்பதில்லை. இது போலியல்ல உண்மை.

தமிழுக்கும் தமிழனுக்கும் ஒரு சேர உலகில் ஒரு நாடு உண்டா !

மொழியிருந்தால் இனமில்லை ! இனமிருந்தால் மொழியில்லை !

இதுதானே நம் நிலை. கசந்தாலும், இனித்தாலும் இதை நாம் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும்.

பன்னெடுங்கால நித்திரைக்குப் பிறகு இப்பொழுதுதான் நாம் விழித்திருக்கின்றோம். நம் மொழிக்கும் நம் இனத்திற்கும் ஒரு நாடு வேண்டும் என்ற உணர்வு இப்பொழுதுதான் உயிராகியுள்ளது.

ஈழம் ! தமிழீழம் ! தமிழனின் தன்மானச் சின்னம் !

தமிழீழம் தமிழனுக்கே உரியது. வரலாறுகள் நமக்காக வரையப்பட்டுள்ளன ! வாழ்த்துவோம் ! மனமார வாழ்த்துவோம் ! உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் ஒருசேர இணைந்து கைகொடுப்போம் !

'உடுக்கை இழந்தவன் கைப்போல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்பது பிறருக்காக சொல்லப்பட்டதல்ல. முதலில் நமக்குள் நாமே உச்சரிப்போம். ஈழத் தமிழர்கள் எதிர்நோக்கும் இடுக்கணை களைவதற்கு நாம் கைகோர்த்து நடப்போம் !

நமக்கு மண்ணுரிமை வேண்டும் ! உலகின் ஒரு மூலையில் தமிழன் என்றொரு இனம் உண்டு. அவனுக்கும் மண்ணுண்டு ! நாளைய தலைமுறை தமிழனிடம் இன்றைய தமிழன் கொடுக்க வேண்டியது ஒருபிடி மண்ணாக வேண்டும்.

போராட்டங்கள் யாவும் நம்மோடு பொசுங்கட்டும். இன்னல்களும் இடர்ப்பாடுகளும் நம்மோடு முடியட்டும்.

கெட்டுப்போன தீனியை எந்த புலியும் தன் குட்டிக்காகச் சேர்த்து வைக்கவில்லை.

காய்ந்துபோன தளிரை எந்தச் செடியும் தன் பூவிற்கு மறைத்து வைப்பதில்லை.

கலங்கிப்போன நீரை எந்த மேகமும் தன் மண்ணிற்காக மறைத்து வைப்பதில்லை.

முறிந்துபோன வரலாற்று கரங்களை இளைய தலைமுறைக்காக நாம் விட்டுச் செல்லலாமா ?

எல்லா குறைபாடுகளும் நம்மோடு குழியை நாடட்டும்.

நம் பிள்ளைகளுக்கு இதுதான் தமிழ் மண்ணென்று அடையாளம் காட்டுவதற்குரிய தமிழீழம் வேண்டும். நாம் ஒன்றுபட வேண்டும். உணர்வு கொள்ள வேண்டும்.

ஒரு சேர கைகொடுப்போம் ! குறைந்தளவிற்கு ஒரு வாழ்த்துச் செய்தி கூறியாவது வழியனுப்புவோம் !

ஒரு பிடி மண்ணில் உன் வாழ்த்துப் போய்ச்சேரட்டும்.

அன்புடன்
ச. அருணாசலம்
பகாவ்
மலேசியா.

---

தமிழ் மக்களிடையே இனம், மொழி சார்ந்த புதிய விழிப்புணர்ச்சியையும் எழுச்சியையும் உருவாக்கி வருகிறது தமிழ்ச்சான்றோர் பேரவை. செயல் வேகச் சிந்தனைகளை முன்னிறுத்திப் புயல் வேகத்தோடு புறப்பட்டிருக்கும் அமைப்பு இது. 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்பது வெற்று முழக்கமாகக் காற்றிலே கரைந்து போகாமல் வெற்றி இயக்கமாக நாட்டிலே நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்துகிறது.

இப்பேரவையின் ஒருங்கிணைப்பாளர் சிலம்பொலி செல்லப்பனாருடனான நேர்காணலின் போது,

"முதல் சவாலாக இருந்ததே தமிழகத்தின் தாழ்வுற்ற நிலைமைதான். பெருமை மிக்க பிறந்த நாட்டின் பின்னடைவுகளைக் காணும்போது இமைகளிலிருந்து இரத்தம் வடிகிறது. தமிழனின் மொழி, இனம், கலை, பண்பாடு யாவும் சிதைந்து சீரழிந்து கொண்டிருக்கிறது.

ஒரு மொழியால் உலகாண்ட தமிழன் இன்று ஒற்றைவாடைத் தெருவுக்குள் குறுகிப்போன நிலைமை; தெருவெங்கும் பிறமொழிகள் முழங்கும்; வீட்டுத் திண்ணையிலே தமிழ் படுத்து உறங்கும் கொடுமை !

அரசாங்கத்தில் ஆட்சிமொழியாகத் தமிழில்லை; அலுவலகங்களில் தொடர்பு மொழியாகத் தமிழில்லை;

கல்வி நிறுவனங்களில் பயிற்று மொழியாகத் தமிழில்லை;

நியாய மன்றங்களில் வழக்காடு மொழியாகத் தமிழில்லை; திருக்கோயில்களில் வழிபாட்டு மொழியாகத் தமிழில்லை; இசை மேடைகளில் தமிழில்லை;

கடைப் பெயர்ப்பலகைகளில் தமிழில்லை..

பட்டிதொட்டியெங்கும் காளான்களைப்போல ஆங்கில மொழி மழலைப் பள்ளிகள்...

மாளிகையிலிருந்து மண் குடிசை வரையில் 'மம்மி - டாடி' கலாச்சாரம்...

அண்மையில் கவிஞர் பல்லவன் அருமையான கவிதை ஒன்றினை எழுதியிருந்தார்.

'மம்மி என்றது குழந்தை; அம்மா என்றது மாடு' பொட்டில் அடித்தாற்போல் இதைவிட மேலாக என்ன சொல்லிவிட முடியும்."

www.tamileelamarchive.com

# ஒரு தேசிய இனம் அழிக்கப்படுவதை விட இடப்பெயர்வு தற்காப்பானது



தமிழ் ஆவணக் காப்பகம்

"உப்புக்கு கூட அடுத்த வீட்டுக்கு போயிருக்க மாட்டோம்" என்று ஒரு தாய் இடம்பெயர்ந்தோர் முகாமை பார்வையிடச் சென்ற கிளிநொச்சி அரச அதிபருக்கு தமது துயரை விளக்கியிருந்தார். இடம்பெயர்ந்த இம்மக்கள் தங்கள் மனத்தாங்கல்களையும், உணர்வுகளையும் அவ்வப்போது வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள்.

சிறிலங்கா அரசின் இனவாத அழிப்பு சிந்தனையால் சிதைக்கப்பட்ட இம்மக்களது உணர்வுகள் ஆறாத்துயரில் புண்படுத்தப்பட்டுள்ளது. தேசியவிடுதலையை நோக்காகக் கொண்டுள்ள தமிழ் இனத்தின் எழுச்சியை முறியடிக்க சிங்கள அரசு இன அழிப்பை முதன்மைப் படுத்தி வருகிறது.

துயரமும்! கொடுமையும், சேர்ந்த வாழ்வியலில் இருக்கும் தமிழ் மக்களது இடப்பெயர்வு அர்த்தம் பொதிந்ததாக மாறி விட்டது. சிங்கள அரசபடைகளின் நோக்கமும் இலக்கும் முறியடிக்கப்பட்ட இடப்பெயர்வாகவே இதுவுள்ளது.

ஒரு தேசிய இனத்தின் முதன்மையான இலக்கு தேச விடுதலை. அத்தேச விடுதலை அடையப்பட வேண்டுமாயின் அத்தேசிய இனம் பாதுகாக்கப்பட வேண்டும். அப்போதுதான் தேச விடுதலைப் போராட்டம் நிலைபெறும்; உறுதியடையும். எப்போதும் எந்த நாட்டிலும் தேசிய விடுதலைப் போராட்டம் பல இடர்ப்பாடுகளுக்கூடாகவே வென்றெடுக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவரான யசீர் அரபாத் இடம்பெயர்ந்தோர் தங்கியிருந்த முகாமிலே பிறந்தவர். அவரது விடுதலைப் போராட்டமும் பி.எல்.ஓ. அமைப்பும் இடம்பெயர்ந்த மக்களாலேயே அமைக்கப்பட்டது. அவர்கள் இடம்பெயர்ந்த இடங்களிலும் நாடுகளிலும் இருந்துகொண்டே தமது தேச விடுதலையை முன்னெடுத்தார்கள்.

பொதுவாக கூறுவதாயின் இஸ்ரேலிய அரசின் 1967 யுத்தம் முழுப் பலஸ்தீன மக்களையும் இடம்பெயரச் செய்தது. அந்த இடப்பெயர்வும் பல நெருக்கடிகளையும், சிக்கல்களையும் கொடுத்தது. இந்திய - புலிகள் யுத்தத்தில் இடம்பெயர்ந்து தமிழ் நாட்டில் தஞ்சமடைந்த தமிழ் மக்களுக்கு, தமிழ் நாட்டிலிருக்கும் நெருக்கடியையும் விட மோசமான நெருக்கடியை பலஸ்தீனியருக்கு உலகநாடுகள் கொடுத்தன.

அண்டைய அரபுநாடுகள் ஆரம்பத்தில் ஆதரித்தாலும் காலப்போக்கில் நெருக்கடியைக் கொடுத்தன. அதன்போது, பலஸ்தீன மக்கள் தமது போராட்ட வேகத்தை தீவிரப் படுத்திக் கொண்டார்கள்.

இதேபோன்றுதான் எரித்திரிய விடுதலைப்போராட்டமும், நெருக்கடியாலும் பட்டினிச்சாவினாலும் அதிகம் பாதிப்படைந்திருந்தது.

எரித்திரிய விடுதலைக்காக 60,000ம் போராளிகள் தமது உயிரை தியாகம் செய்திருக்கிறார்கள். ஏறக்குறைய 40,000 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 10,000-க்கு மேற்பட்ட போராளிகள் இயங்க முடியாது பாதிப்படைந்திருக்கிறார்கள். எரித்திரிய விடுதலைக்கு அம் மக்கள் கொடுத்த விலை இது.

இவ்வாறு தான் தென்னாபிரிக்க விடுதலைப் போராட்டம், நைஜீரியன் விடுதலைப் போராட்டம் போன்றவை பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுத்தன. பட்டினியை எதிர்கொண்டும், எலும்புக்கூடாக இருந்தும் தங்கள் தேசிய விடுதலையை கைவிடாது தேசிய இனத்தை நேசித்தார்கள் இந்த மக்கள். போராட்டத்தை நெருக்கடிக்கு அஞ்சி கைவிடவில்லை. மாறாக தீவிர உத்வேகத்துடன் இலக்கை நோக்கி நகர்ந்தார்கள்.

எல்லா தேசிய விடுதலைப் போராட்டத்திலும் இடம்பெயர்ந்த மக்கள் அந்நிய நாடுகளிலும், முகாங்களிலும் தங்கி போராட்டம் நடத்தியுள்ளார்கள். ஆனால் எமது மக்களுக்கு அத்தகைய நிலையில்லை. முழுமையாக இயற்கை எமக்கு வாக்களித்த பூமி பாதுகாப்பும் தேசிய தனித்துவமும் கொண்டது. இது எங்களது விடுதலைக்கு மேலும் ஒருபடி மேன்மையானது.

எனவே தேசிய இனத்தின் சிதைவுகளைக் கடந்த இடம்பெயர்வு விடுதலைக்கு விதையாக அமையவேண்டும். அது எமது தேசிய இனத்துக்கும் சந்ததிக்கும் நாம் கொடுக்கும் அச்சாணி.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# சூரியனுக்குச் சொந்தக்காரர்கள்

மனித வரலாறு ஓர் ஒழுங்கு முறையில் எழுதப்பட்டு, ஒரு சில நூற்றாண்டுகளே ஆகியிருக்கின்றன. இருபதாம் நூற்றாண்டை நிறைவு செய்துகொண்டிருக்கும் உலகம், கடந்து வந்த நூற்றாண்டுகளைப் பெருமூச்சுடன் திரும்பிப்பார்க்கிறது. அங்கே ஒவ்வொரு நூற்றாண்டும் தனக்காக ஒரு சில மாமனிதர்களைத் தெரிவு செய்து, தன்னை உறுதியாக நிலைநிறுத்திக் கொண்டிருப்பதையும் வரலாற்றுப் புகைக்குள் மிகத் துலக்கமாகக் கண்டு கொள்கிறோம். பதிவாகியுள்ள அந்த மாமனிதர்களைத் தவிர்த்துவிட்டால் போதும் சரித்திர ஏடுகளில் அந்த நூற்றாண்டுகளும் இருப்பிழந்து போய்விடும்.

மானுடமே மானுடத்தின்மீது அணு குண்டுகளைத் தள்ளியதும், இரண்டு உலகப் போர்களை நிகழ்த்தி, கோடிக்கணக்கான உயிர்களைக் காவு கொண்டதும், மனிதர்களே மனிதர்களைச் சூழ்ந்துநின்று, ஒரு வாரத்தில் பத்துலட்சம் மக்களைக் கொன்றழித்த ருவாண்டா படுகொலைகளும், அந்தக் கொலை முறைமைக்கு தாய்வீடான சிறீலங்காவின் ஜூலைப் படுகொலைகளுமாக, இரத்த ஆற்றில் நனைந்து போனது இந்த நூற்றாண்டு. ஆனாலும் இந்த நூற்றாண்டும் தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்ள சில மாமனிதர்களை தனது ஏடுகளில் பதிவுசெய்துகொள்ளத் தவறவில்லையென்பதையும் நாம் மறுத்தல் முடியாது. அவ்விதம் இந்த நூற்றாண்டை நிலைநிறுத்தப்போகும் ஒளிகொண்ட மாமணிகளை ஓர் ஒழுங்கில் நிரல்படுத்தினால் அதில் வைரக்கற்களாக ஒளிர்வது மாவீரர்களே. அந்த மாவீர வைரங்களின் நடுவே தேசியத் தலைவரின் ஒரு அதி உன்னதமான படைப்பென்று தளபதி கேணல் கிட்டுவைக் கூறலாம்.

போராளிகள் குழாத்தில் அவர் எப்படி மகத்தான தோற்றமொன்றைப் பெற்றாரோ? அதே சிறப்பையே அவர் பொதுமக்கள் மத்தியிலிருந்தும் பெற்றுக்கொண்டார். இதுவே கிட்டு என்னும் சக்தியின் மைய ஆளுமை. அவரின் மூன்றாண்டு நினைவுகளைத் தரிசிக்கும் இவ்வேளை அவரைப்பற்றிய மூன்று நினைவுகள் எண்ணங்களில் மீண்டெழுந்து வருகிறது.

வல்வைக் கடற்கரையில் காட்டுவளவு என்னும் சிறு படகுத்துறை. அங்கு கடலின் நடுவே ஒரு விசேடமான பாறை உண்டு. இதனைக் கரையிலிருந்து பார்த்தால் பூனையின் பின்புறத் தலை போலத் தோற்றமளிக்கும். அதனால் அதற்குப் பெயர் பூனைக்கல். ஒருநாள் ஆக்கிரமிப்பு நோக்கத்துடன் கரையை நெருங்கிய கடற்படையினர் மீது கிட்டு அவரின் படையணியினர் திடீர்த்தாக்குதல் நடத்தினர். பூனைக்கல்லின் ஓரமாக நிலையெடுத்து நின்று கப்டன் லாலா வரலாற்றுப்புகழ் மிக்க அந்தச் சமரை நடத்தினார். கரையைத் தொட முடியாத கடற்படையினர் நாற்புறமும் சிதறி ஓடினர்.

**கி. செ. துரை**

அன்றிரவு முழுவதுமே அவ்விடத்தை பெரும் போர்மேகங்கள் சூழ்ந்து நின்றன. மறுநாள் விடிந்த போதே போர் நடந்த இடத்தையும் அதன் தடையங்களையும் மற்றவர்கள் சென்று பார்க்கமுடிந்தது. அந்த புதிய காலையில் எல்லோர் கண்களுக்கும் ஏதோ ஒரு மாற்றம் தெரிந்தது. ஆம்! அன்றைய பொழுதில் அந்தக்கல்லை நம்மால் வழமையான பூனைக்கல்லாகக் காணமுடியவில்லை; புலி படுத்திருந்து ஊரைக் காப்பது போன்ற வீரவடிவாக அது எம் கண்முன் எழுந்து நின்றது. நூறு நூறு ஆண்டுகளாக பதுங்கும் பூனையென்று பெயர் பெற்ற கல்லை ஒரே ஒரு பொழுதில் புலிக்கல்லாக மாற்றிய வீரரானார் லாலா. அந்த உயரிய இடத்தை நோக்கி அவரை உறுதியுடன் நடைபயில வைத்தார் கிட்டு. அவ்விதம் அவரின் நிறைந்த அன்பைப்பெற்ற லாலாவையும் ஒரு நாள் தமிழீழம் இழக்க நேர்ந்தது.

அந்த துயரமான நாள். ஆயுதங்களை எடுத்துச் செல்லும் வாகனத்தோடு கிட்டு. அதற்குக் காவலாக முன்புறம் மோட்டார் சைக்கிளோடு லாலா. அவர்கள் தொண்டைமானாற்றைக் கடக்கும் போது, எதிர்பாராத விதமாக முன்னால் வந்து

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

விட்டது இராணுவக் கவசவாகனம். என்ன செய்வது? ஆயுத வண்டியை எப்படியாவது காப்பாற்றியாக வேண்டும்! இராணுவத்தை வேறு வழிக்குத் திசை திருப்பிச் செல்லும் பணிக்காக, தன் உயிரை கொடுத்துப் போராடினார் லாலா. அதனால் பெருந்தொகையான ஆயுதங்கள் பாதுகாக்கப்பட்டன. ஆனால் போன லாலாவோ திரும்பிவரவில்லை. "லாலா மறுபடியும் வருவாரா?" ஏங்கிய உள்ளங்களோடு குழுமி நின்றோம்.

திகிலாடும் கணங்கள்.... அமைதியாக வந்து சேர்ந்தார் கிட்டு. "லாலா எங்கே? அவருக்கென்ன? அவர் வருவாரா?" "லாலா வருவார்! நீங்கள் அமைதியாக வீடு திரும்புங்கள்" என்று உறுதியான குரலில் தெரிவித்தார். அந்த இக்கட்டான நேரம் தோழனை இழந்து துவண்டுபோய் விடாமல் மக்களது நண்பனாக நின்று, கலங்காத நெஞ்சுடன் தன் கடமையைச் செய்தார் கிட்டு. ஆனால் இரண்டொரு நாட்களில் வெளியான லாலாவுக்கான வீர வணக்கச் சுவரொட்டிகள், சொன்ன செய்திகளால், தமிழீழமெங்குமே அவர் பிரிவு உறுதியாகிப் போனது. உண்மையில் "லாலா வருவார்!" என்பதை அன்று கிட்டு ஒரு வார்த்தையாகவே தெரிவித்திருக்கிறார் என்றே நினைத்திருந்தேன். ஆனால் சில மாதங்களின் பின் லாலா போலவே ஒரு போராளி அப்பகுதியில் நடமாடக்கண்டு அதிசயித்தேன். லாலா போல அல்ல அது லாலா என்றே சொல்ல வேண்டும். யாரிவர்? விசாரித்துப்பார்த்தேன். வேறு யாருமல்ல; அவரே லாலாவின் சகோதரன். அண்ணாவின் அடிச்சுவட்டில் அவன் தம்பி. ஒரு வேங்கை விழுந்த இடத்தில் இருந்து அதே வேகத்தில் இன்னொரு புதிய வேங்கையைப் பாயவிட்டிருந்தார் கிட்டு. அந்த இளைஞனைப் பார்த்தபடியே, "லாலா மறுபடியும் வருவார்!" என்ற கிட்டுவின் வாசகங்களை மீண்டும் ஒரு தடவை அசைபோட்டு பார்த்தேன்; மாண்டவரையே மீட்டெடுக்கும் வல்லமை அவர் சொற்களுக்குள் சுடர்வதைக் கண்டேன்.

இப்பேற்பட்ட அசாதாரண வீரர்களைக் கருப்பொருளாக்கி பாடியதால்தான் புறநானூற்றின் புகழ் இரண்டாயிரம் ஆண்டுகளையும் தாண்டி நிற்கக் காண்கின்றோம். இடையில் வந்த சோதனைகளால் நலிந்து போன தமிழர் தம் வீரவரலாறும் புறநானூற்றோடு அறுந்து போனது. அன்று விடப்பட்ட புறநானூற்றின் வீரத்தை இனித் தொடர்ந்து எழுதிச் செல்வதற்கான மகத்துவங்கள் இப்பொழுது தமிழீழ மண்ணில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வரலாறு தன்னை அழகுபடுத்திக் கொள்ளக் கூடிய இந் நாட்டுச் சாதனைகள் கிட்டு அவர்களின் வாழ்க்கையில் மறைந்து கிடக்கிறது. தமிழீழமெங்கும் கால் பதித்துக் களமாடிய அவரது வீரத்தை இன்று தெரியாத தமிழர் இல்லை. கிட்டு என்ற பெயரைக் கேட்டால் எதிரிகூட ஸ்தம்பித்து நிற்கக் காண்கின்றோம்.

அவரின் வீரம் செறிந்த வாழ்வில் மட்டுமல்ல; பிரிவில் கூட இலக்கியம் சிறைப்பிடித்துக் கொள்ளக் கூடிய அரிய செய்தியொன்று துலக்கமாகத் தெரிகிறது. இதுவரை இலக்கியம் நீரில் மூழ்கியோரை பாடுபொருளாக்கியிருக்கிறது. ஆனால் நீரில் நின்று உடலில் நெருப்பேற்றியவரை பாடும் பேற்றை அது இற்றைவரை அடைந்ததாகத் தெரியவில்லை. "முழங்கும் நாற்பது, ஊழையிடும் ஐம்பது போன்ற பெரும் தடக்காற்றுக்கள் வீசும் சமுத்திரத்தின் நடுவே நின்று நெருப்பு மூட்டி ஈகம் புரிந்தான் தமிழன்!" என்ற பெருமைக்கு இலக்கியத்தை மட்டுமல்ல, உலகத் தமிழினத்தையே சொந்தக்காரராக்கி வைத்திருப்பவர் கேணல் கிட்டு. அவரின் உயர்ந்த வீரத்தில் புறநானூறு மீண்டும் உயிர் பெற்று நிற்கிறது.

விடுதலை வீரனாக, சமுதாய நண்பனாக, சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவருக்குமே கிட்டு மாமாவாக ஆழ்ந்த சிந்தனையின் கருவூலமாக, தலைவரின் இதயத்தை தொட்டவராக குறுங்காலத்தில் அவர் காட்டிய தோற்றம் எவருக்குமே பிரமையூட்டுவதாகும். ஆகையால்தானோ! "அருமைக்கு அளவுதான் முக்கியம்!" என்ற பழமொழி அவரது அருமையான வாழ்க்கைக் காலத்தோடும் வலுவாகப் பொருந்திப் போனது.

இன்று சூரியனை விட்டுவிட்டு, வெறும் 'சூரியக்கதிர்' என்ற பெயருடன் எமது மண்ணில் இறங்கியுள்ள எதிரியானவனுக்கு "சூரியன் இருப்பது தமிழீழத்தில் தான்!" என்ற செய்தியை கிட்டு தனது ஆன்ம பலத்தால் எழுதி வைத்துவிட்டுச் சென்றிருப்பதைத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஆனால் தமக்கு விடுதலை தரும் சூரியனாக விடுதலைப்புலிகளை வரித்துக்கொண்டுவிட்டதாலேயே மக்கள் சிங்களத்தின் சூரியக்கதிரை வெறுத்து தமது வாழிடங்களை விட்டு வெளியேறிச் சென்றார்கள். உண்மையில் தமிழீழ மக்களே சுதந்திர சூரியனுக்குச் சொந்தக்காரர்கள் என்பதை ஆதிக்கவாதிகளும் அதன்பின்பே புரிந்து கொண்டார்கள். ஒரு சூரியனைச் சுற்றி ஒன்பது நவக்கிரகங்கள்! அது போல ஒரு கிட்டுவைச் சுற்றி ஒன்பது வேங்கைகள்! ஒப்பீடு செய்து பாருங்கள்! மாவீரர் வலம் வரும் விடுதலை வானில் கிட்டு ஒரு சூரியனாக ஒளிர்வதையும், தமிழீழ மக்களே அந்தச் சூரியனுக்கு சொந்தக்காரர் என்பதையும் இலகுவாகப் புரிந்துகொள்வீர்கள்.

கிட்டு அவர்களின் மூன்றாவது நினைவுகளில் நின்று, "சூரியனுக்குச் சொந்தக்கார இனம் ஒரு போதும் எதிரியின் 'சூரியக்கதிரு'க்கு சொந்தக்காரராக இருக்க முடியாது!" என்ற செய்தியைத் தவிர ஒரு தமிழீழ குடிமகனால் வேறெதைக் கூற முடியும்.

★★

**த**மிழீழ விடுதலைப்போராட்டத்தை இன்று உலகம் உன்னிப்பாக அவதானித்து வருகிறது. விடுதலைப் போராளிகளின் தியாக சீல உணர்வுகள் எவ்வாறு, எங்கிருந்து தோற்றம் பெறுகின்றன என்ற கேள்விகள் அவர்களுக்குள் எழுகின்றன. விடுதலைப்புலிகளின் தாக்குதல் திறன் எங்கும் காண முடியாத பல புதுமைகளைக் கொண்டிருக்கின்றன என்றும், அவர்களிடமிருந்து நிறைய கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது என்றும் கருத்துக்கள் எழுந்திருக்கின்றன.

மிக அண்மையில் சுசில் முனசிங்கா (ஐக்கிய தேசியக் கட்சி எம். பி) "உலகிலேயே மிகுந்த தந்திரோபாயம் மிக்க கெரில்லா படைகளுடன் மோதுவதை கருத்திற்கொண்டு நாம் கவனமுடன் செயற்படவேண்டும். எப்போதும் கிழக்கிலும், யாழ்ப்பாணத்திலும் போரிடுவதையே கவனத்திற்கொள்கிறோம். கெரில்லா தந்திரோபாயம் இப்போது எமது வாசல் கதவைத் தட்டுகிறது" என சிறீலங்கா அரசாங்கத்துக்கு ஒரு எச்சரிகையுடன் கூடிய ஆலோசனையை தெரிவித்துள்ளார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# ஒரு சண்டை முடிந்தது; விடுதலைப் போர் தொடர்கிறது

விடுதலைப் போராட்டம் என்பது ஆழமான அர்த்தத்தைக் கொண்டது. பாரதூரமானதும், நீண்டகால எல்லையைக் கொண்டதுமான தொடர்ச்சியான மனித உரிமை மீறல்களை எதிர்க்கும் நோக்குடனேயே ஆயுதப் போராட்டம் வெடிக்கிறது. சகல பாராளுமன்ற, ஜனநாயக, அகிம்சை வழிகள் தோல்விகண்ட நிலையில், இனப்படுகொலை வடிவத்தை எடுத்து நிற்கும் அடக்குமுறையின் உச்சக்கட்டத்திலேயே ஒரு மக்கள் தமது இருப்பை நிலைநாட்டுவதற்காக எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பிக்கிறார்கள். இது சாராம்சத்தில் தற்காப்புப் போராகவும் விடுதலைப் போராகவும் தோற்றம் பெறுகிறது. ஒரு தேசிய இனத்தை அழிக்கும் நோக்குடன், ஒரு அந்நிய தேசிய இனமானது மூர்க்கத்தனமாகவும், இராணுவ வன்முறையின் மூலமும், அடக்குமுறைப் போரின் மூலமும் அதனைச் சாதிக்க முனையும்போது, அடக்குமுறைக்கு உட்பட்ட மக்கள், தமது தேசிய அடையாளத்தைப் பாதுகாக்கவும், விடுதலையும், சமாதானமும், சுபீட்சமும் நிறைந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கும், ஒரு தேசத்தின் உயிரை அணையவிடாது நிலைநிறுத்தவும் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கிறார்கள். அது விடுதலைப் போராகப் பரிணமிக்கிறது. ஒடுக்குமுறை முற்றாக நீங்கி, அம்மக்கள் பூரண விடுதலை பெறும் போதுதான் அவ்விடுதலைப் போர் முற்றுப் பெறுகிறது. இவ்விடுதலைப் போர்க் காலத்தில் நடைபெறும் தாக்குதல்கள், எதிர்த்தாக்குதல்கள், சண்டைகள், மோதல்களில் ஏற்படும் வெற்றிகள், எதிரியைப் பலவீனப்படுத்தவும், போராட்டத்தை முன்நகர்த்தவும் உதவுகின்றன. தொடர்ச்சியான கெரில்லாத் தாக்குதல்களால், கூலிக்குச் செயல்படும் ஒழுங்கமைக்கப்பட்ட ஆக்கிரமிப்பு இராணுவம் மனவுறுதி குலைந்து, கட்டுப்பாடு சீர்கெட்டு எதற்காகப் போர் புரிகிறோம் என்ற குறிக்கோள் இல்லாது சிறப்பாகப் போரிடும் தகுதியை இழக்கிறது.

இந்நிலை, அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகளால் மேலும் மோசமடைகிறது. சிறிலங்கா இராணுவம் இத்தகு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்ற போதிலும், பல்வேறு வழிகளால் அதனை ஈடுசெய்ய முற்படுகின்றது. புதிய அரசியல் தலைமை, அரசியல் தலைமைக்கும் இராணுவத் தலைமைக்கும் இடையிலான ஒருங்கிணைப்பு, வெளிநாட்டு உதவிகளுடன் எண்ணிக்கை பலம் கொண்ட இராணுவத்தை நவீன ஆயுதபாணியாக்குதல், சுடுகலன்களின் பலத்தை (fire power) அதிகரித்தல், கள அனுபவம் கொண்ட இளம் இராணுவத் தலைமையை உருவாக்குதல், இனவாதத்தைக் கிளப்பி விட்டு தம்மின மக்களின் போருக்கான ஆதரவையும், நிதி வளங்களையும் பெறுதல், பிரச்சாரம், ராஜதந்திரம் என்பனவாகும். இந்திய உபகண்ட புவிசார் நிலைமையில், தமது மொழி, மத, கலாச்சாரப் பண்புகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற சிறுபான்மை மனவியல்பு சிங்கள மக்களுக்கும், இராணுவத்துக்கும் குறிக்கோளில் உறுதியைத் தருகின்ற உந்துசக்தியாக (Motivating force) அமைகிறது. இத்தகைய பின்னணியில், தன்னிடமுள்ள சகல மூல வளங்களையும் பயன்படுத்தி, பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினரை ஈடுபடுத்தி, நிறைந்த சுடுகலச் சக்தியோடு நடத்தப்பட்ட மரபு ரீதியான பாரிய இராணுவ நடவடிக்கையாகவே சூரியக்கதிர் நடவடிக்கையும், யாழ்ப்பாணப் நகர் கைப்பற்றப்பட்டமையும் காணப்படுகிறது. இதனை விடுதலைப் புலிகளையும், விடுதலைப் போரையும் முற்றாக அழித்தொழிக்கும் நிரந்தர வெற்றியாக ஆக்கவேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளது. எனவேதான் யாழ்ப்பாணக் கைப்பற்றலை சம்பிரதாய பூர்வமாகக் கொண்டாடியது. அதில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கும், தளபதிகளுக்கும் விருதுகளை வழங்கியது. தலைவர் பிரபாகரன் தென்னிந்தியாவுக்கும், பின்னர் வட ஆபிரிக்காவுக்கும் தப்பி ஓடி விட்டதாக அறிவித்தது. விடுதலைப்புலிகளிடையே மூன்று பிரிவுகள் தோன்றி விட்டதாகவும் அவற்றிடையே மோதல்கள் இடம்பெறுவதாகவும் செய்தி வெளியிட்டது. ஏராளமான போராளிகள் இறந்து, விடுதலைப் புலிகளின் அரசியல், இராணுவக் கட்டுமானங்கள் சிதைந்து சிதலமாகி விட்டதாக பிரச்சாரம் செய்தது. வெளிநாடுகளிலுள்ள விடுதலைப் புலிகளின் பணிமனைகள் அவ்வவ் அரசாங்கங்களால் மூடப்பட்டு, விடுதலைப்புலிகளின் வெளிநாட்டுச் செயல்பாட்டாளர் வட ஆபிரிக்காவுக்கு, சேர்த்த பணங்களோடு தப்பி ஓடிவிட்டதாக சர்வதேச செய்திநிறுவனங்கள் மூலம் பொய்த் தகவல்களைப் பரப்பி விட்டது. ஆயினும், முடிவடைந்தது ஒரு இராணுவ நடவடிக்கை அல்லது ஒரு சண்டை என்பதை அரசாங்கமும் நன்கறியும். போர் முடிவுறவில்லை என்பதை ஜனாதிபதி சந்திரிகாவும், இராணுவ அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும் ஒத்துக் கொண்டனர். போர் அரசியல் ரீதியாகத்தான் முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும் என்று கூறிக் கொண்டே, அடுத்தகட்ட இராணுவ நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் தயாராகி வருகின்றது. இராணுவத்துக்கு ஆட்திரட்டலிலும் ஈடுபட்டு வருகின்றது. இந்த நடவடிக்கைகளில், யாழ்குடாநாட்டில், வடமராட்சி, தென்மராட்சி ஆகியவற்றைக் கைப்பற்றலும், இராணுவத்துக்கு விநியோகங்களை மேற்கொள்வதற்காக வவுனியாவிலிருந்து தரைமார்க்கப் பாதை ஒன்றை குடாநாட்டுக்கு

**வளவன்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

திறந்து விடுதலும் முன்னுரிமை பெறுகின்றன. இம்முன்னெடுப்புகள், இராணுவத் தீர்வுக்கும், தனக்குச் சாதகமான போரின் முடிவுக்கும் வழி வகுக்கும் என்று அரசாங்கம் கருதுகிறது.

இராணுவத்தின் யாழ்ப்பாண நகர் கைப்பற்றலை ஒட்டை வெற்றி (hollow victory) என்று சர்வதேச பத்திரிகையாளர் கிறிஸ்தோபர் தோமஸ் வர்ணித்தார். இராணுவத் துக்கு உத்தி ரீதியான சாதகநிலை மட்டு (tactical advantege) என்று இன் னொரு ஆய்வாளர் குறிப்பிட்டார். தேசியத் தலைவர் தமது மாவீரர் நாள் உரையில் தற்காலிகப் பின்ன டைவு என்று அறிவித்தார். விடுத லைப்போர் என்ற நீண்டகாலக் கண்ணோட்ட அடிப்படையிலும், போர்த்தந்திரோபாய அடிப்படையி லும் (war strategy) இது சரியான கணிப்பென்றே கருதலாம். யாழ் நகர் மீதான தாக்குதலானது, 5 இலட்சம் மக்களை அகதிகளாக்கியதோடு, யாழ் நகர்மீது சிங்கக் கொடியை ஏற்றியதானது தமிழ் மக்களை என்று மில்லாதவாறு ஒன்றிணைத்துள்ளது. சிங்கள மேலாதிக்கம் மக்களால் நன் குணரப்பட்டுள்ளது மாத்திரமன்றி, தமிழ்மக்களின் தன்மானம் தாக்குத லுக்குள்ளாகி, பெரும் கோபத்தைக் கிளறிவிட்டுள்ளது. இந்நிகழ்வானது தமிழீழ மக்களின் ஒன்றிணைவை மட்டுமல்ல, வேற்று நாடுகளில் வாழும் தமிழ் மக்களையும் விடுத லைப்போராட்டத்துக்கு ஆதரவாகத் திருப்பியுள்ளது. இத் திருப்பத்தை, தமிழ்நாடு, தென்னாபிரிக்கா, மலே சியா ஆகிய நாடுகளில் மிகத் தெளி வாகவும் உறுதியாகவும் காணக்கூடி யதாக உள்ளது. பல்லாயிரக்கணக் கான போராளிகளையும், இவ் அவ லமும், தன்மானத் தாக்கமும் உரு வாக்கியுள்ளது. இளையவர்கள், யுவ திகள் மாத்திரமல்ல, வயது வந்தோ ரும், கல்விமான்களும், கலைஞர்க ளும் ஆயுதமேந்த முன்வந்துள்ளனர். வன்னிப் பெருநிலப்பரப்பை நோக் கிய மக்களின் இடப்பெயர்வால் இரண்டு முக்கிய பயன்கள் ஏற்பட் டுள்ளன. ஒன்று எல்லைப் புறங்கள் பாதுகாக்கப்படுகின்றன. வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் நோக்கிய சிங்களக் குடியேற்றப் பரம்பல் தடுக்கப்படுவதற்கான மனிதச் சுவர் ஒன்று கட்டியெழுப்பப்படுகின்றது. இச்சுவர், தமிழர் கிராமங்கள், நகரங் கள், தோட்ட வயல்கள், காடுகள் என்ற ரீதியில் அமையப்போகின் றன. அடுத்ததாக, பொருளாதாரத் தடை என்ற ஆயுதம் வலுவிழக்கப் படவுள்ளது. இராணுவ ஆக்கிரமிப் பில், மக்களை அடிபணியவைக்கப் பயன்பட்டு வந்த முக்கிய கருவியான உணவு, மருந்துத் தடையானது முறி யடிக்கப்படவுள்ளது. பொருளாதா ரத் தன்னிறைவுக்கான அடித்தள மும் இடப்படுகின்றது. தமிழீழக் கட்டுமானத்தில், சகல துறைகளும் சார்ந்த வளர்ச்சிக்கான நிலப்பரப் பாக வன்னிப் பெருநிலப்பரப்பே தமிழீழ நிர்மாணிகளால் அடையா ளங் காணப்பட்டிருந்தது. அது நிறை வேறுவதற்கான வாய்ப்பும் இரா ணுவ நடவடிக்கையின் எதிர்பாராத விளைவாக ஏற்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலை முற்றுப்பெற வேண்டுமெனில், தென் தமிழீழம் மீட்கப்படவேண்டும். அதுமாத்திர மல்லாமல், தமிழீழத்தின் தலைநக ரும், துறைமுகமுமான திருகோண மலை மீட்கப்படவேண்டும். இராணு வத்தின் யாழ் நோக்கிய பெயர்ச்சி யின் காரணமாக அச் சூழ்நிலை அங்கு உருவாகி வருவதாகக் கொள் ளலாம். தமிழீழம் முழுமையும் ஆக் கிரமிப்பாளரிடமிருந்து மீட்கப்படு தல் மாத்திரமின்றி, அவை, பறி போகாமல் பாதுகாக்கப்பட வேண் டும். அதற்கான ஆள், ஆயுத பல அதிகரிப்பு மாத்திரமில்லாமல் நவீன கருவிகளும், உத்திகளும், உயர் தொழில்நுட்பமும் கையாளப்படும் வேகப்பாய்ச்சலையும் அவதானிக்கி றோம். வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் துறைசார்ந்த அறிவுத் திறனும், நிதிப்பங்களிப்பும் இவற் றிற்கு துணை நிற்கின்றன.

யாழ்நகரின் இழப்பு என்ற தற் காலிகப் பின்னடைவை, விடுத லைப் போரின் வெற்றிக்கு இட்டுச் செல்லும் படிக்கட்டாக மாற்றும் திறமையும், ஆளுமையும் எம் தலை மையிடம் உண்டு. புலி பதுங்குவது பாய்வதற்கே தவிர, பணிந்து போவ தற்கு அல்ல. வெற்றி பெற்ற சகல விடுதலைப் போராட்டங்களையும் போன்று, எமது போராட்டமும், பின்னடைவின் காரணங்களை நன்கு புரிந்து கொண்டதன் பேரில் வேக மாக முன்னோக்கிப் பாய்வதாகவே இருக்கும்.

★★★

**1. விடுதலைப் புலிகளின் தற் போதைய அரசியல் நிலைப்பாடு பற்றி..**

தமிழ் தேசமும், சிங்கள தேசமும் சமமானவை என்றோ, அதனை நிலைநாட்ட நடைபெறும் போராட் டம் சட்டரீதியானது என்றோ, அதனை நடத்தும் விடுதலைப் புலி கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்றோ அங்கீகரிக்க சிறீலங்கா அரசாங்கம் தயாராக இல்லை. எனவே, சர்வதேச சமூகத்திற்கு எமது போராட்ட நியாயத்தை எடுத்துக் கூறி, அதன் மூலம் சிறீலங்கா அர சாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து, இவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு செய் தலே எமது அரசியல் நிலைப்பாடா கவும், அரசியல் செயற்பாடாகவும் உள்ளது. இந்த அங்கீகாரத்தின் அடிப்படையிலேயே, தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வும் நிரந்தர சமாதானமும் கிட்டும் என நம்புகிறோம்.

**2. தற்போதைய சூழ்நிலையில் சிறீலங்கா அரசுடன் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளில் ஈடு படுவார்களா?**

தற்போது, சிங்கள இனவாதப் பூதம் மேலும் மேலும் விஸ்வரூபம் எடுப்பதும், தமிழினப் படுகொலை நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், தமிழ் மண்ணை ஆக்கிரமிக்கும் சூழ் நிலையுமே காணப்படுகிறது. இப்ப டியான நிலை, சமமான அடிப் படையிலும், நன்நம்பிக்கை அடிப் படையிலுமான பேச்சுவார்த்தைக்கு உகந்ததாக இல்லை என்றே கருதுகி றேன்.


**3. அப்படியாயின் எந்த அடிப் டையில் பேச்சுக்கள் மீண்டும் தொடங் கப்படலாம்?**

முன்பு கூறிய விடயங்களை சிங்கள இனவாதமும், அதற்குத் தலைமை தாங்கும் சிறீலங்கா அர சாங்கமும் அங்கீகரிக்காத காரணத் தினால்தான், போர் நடவடிக்கைக ளினாலும், இராணுவத் தீர்வினாலும் அரசாங்கம் சிங்கள மேலாதிக்கத் தைத் திணிக்க முனைகிறது. எனவே, மேற்கூறியவை சிறீலங்கா அரசாங் கத்தால் அங்கீகரிக்கப்பட்டால் இரா ணுவத் தீர்வு முயற்சியோ, ஆக்கிர மிப்போ அவசியமாக இராது. அப் போது, ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து இராணுவம் வெளியேறவும், தமிழ் மக்கள் மீதான இராணுவ, பொருளா தார தாக்குதல்கள் நிறுத்தப்பட்டு,

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அவுஸ்திரேலியாவில் ஒலிபரப்பாகும் 'ரேடியோதொன்' வானொலிக்கு, விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினரும் சர்வதேசப் பேச்சாளருமான திரு. லோரன்ஸ் திலகர் அளித்த பேட்டி



**"ஆக்கிரமிப்புக்கு எதிராக தற்பாதுகாப்பு நடவடிக் கைகளை அதிகரிக்க வேண்டியுள்ளது. இதன் பொருட்டே, தற்காப்புப்படை அணிகள் பலப்படுத்தப் படவும், நவீன கருவிகளால் ஆயுதபாணிகளாக்கப்படவும் வேண்டிய தேவை அதிகரித்துள்ளது. இதன் மூலமே எமது மண்ணும், மக்களும் பாதுகாக்கப்பட்டு, விடுதலையும், நிரந்தர சமாதானமும் நிலைநாட் டப்படும் என்பது நிதர்சன உண்மையாக உள்ளது."**

மக்கள் தங்கள் இடங்களுக்குத் திரும்பவும் தானாகவே வழி ஏற்படும். அத்தகைய சூழ்நிலையை சிறீலங்கா அரசாங்கம் ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை இல்லை என்றே தோன்றுகின்றது. எனவே, சர்வதேச அழுத்தத்தை தற்போது பிரயோகிக்க வேண்டியுள்ளது. அடுத்தது ஆக்கிரமிப்புக்கு எதிராக தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டியுள்ளது. இதன் பொருட்டே, தற்காப்புப்படை அணிகள் பலப்படுத்தப்படவும், நவீன கருவிகளால் ஆயுதபாணிகளாக்கப்படவும் வேண்டிய தேவை அதிகரித்துள்ளது. இதன் மூலமே எமது மண்ணும், மக்களும் பாதுகாக்கப்பட்டு, விடுதலையும், நிரந்தர சமாதானமும் நிலைநாட்டப்படும் என்பது நிதர்சன உண்மையாக உள்ளது.

**4. யாழ் குடாநாட்டில் இருந்து மக்கள் பலவந்தமாக விடுதலைப் புலிகளால் வெளியேற்றப் பட்டதாக சிங்கள அரசு பிரச்சாரம் செய்கிறதே. இது பற்றி உங்கள் கருத்தென்ன?**

எமது மக்கள், இராணுவ ஆக்கிரமிப்பின் இராணுவ, அரசியல், பொருளாதார விளைவுகளை நன்கு உணர்ந்தே இருந்தனர். ஆயினும், அவர்களுக்கு எந்த நேரத்தில் எப்படியாக வெளியேற வேண்டும் என்ற ஆலோசனைகளும், அதனை நடைமுறைப்படுத்த தேவையான உதவிகளும் வழங்கப்படவேண்டியிருந்தது. தமிழ் மக்களைப் பணயக் கைதிகளாக வைத்து, அரசியல் சூதாட்டம் ஒன்று நடத்த அரசாங்கம் விரும்பியது. மேலும், இராணுவ நடவடிக்கையின் போதும், பின்னரும் ஏராளமான தமிழ் மக்களைக் கொன்றொழிக்கவும் விரும்பியது. இராணுவ ஆக்கிரமிப்பின் விளைவுகளை, இராணுவ ஆக்கிரமிப்பு நடைபெறும் ஏனைய பகுதிகளிலும், கடந்த கால அனுபவங்கள் மூலமும் மக்கள் நன்குணர்ந்திருந்தனர். எனவேதான் அவர்கள் வெளியேறினார்கள்.

**5. என்றுமே இல்லாதவாறு 5 லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் அகதிகள் ஆக்கப்பட்டுள்ளார்கள். இந்த நிலையில் அவர்களின் அன்றாட அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய நிலையில் விடுதலைப்புலிகள் உள்ளனரா?**

பெரும்பாலான நிவாரண, புனர்வாழ்வுச் சேவைளை விடுதலைப் புலிகள் செய்கிறார்கள் என்பதே உண்மை. ஆயினும், ஏனைய சர்வதேச நிறுவனங்களின் கட்டற்ற செயற்பாடுகள் உறுதிப்படுத்தப்படவேண்டும். மேலும் உள்ளூர் அரச சார்பற்ற உதவி நிறுவனங்களின் ஒத்துழைப்பும் அவசியமாகிறது. அரசாங்கம், சர்வதேச நிறுவனங்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து அகதிகள் நிலைமையை மோசமாக்க எண்ணுகிறது. எனவே, விடுதலைப் புலிகளின் புனர்வாழ்வு வேலை மேலும் விஸ்தரிக்கப்பட வெளிநாடு வாழ் தமிழ் மக்கள் துணைபுரிய வேண்டும். வெளிநாட்டு நிறுவனங்கள் கட்டற்ற சேவையைச் செய்ய அனுமதிக்குமாறு அரசாங்கம் மீது அழுத்தம் பிரயோகிக்குமாறு நாம் செயல்பட வேண்டும்.

**6. தற்போது தமிழீழத்தில் பணியாற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் எந்த வகையான நிவாரண, புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ளன?**

தங்குமிட வசதி, சுகாதார வசதி, உணவு, குழந்தைகளுக்கான, மகப்பேற்றுத் தாய்மார் அகியோர்களுக்கான சத்துணவு, மருத்துவ வசதி, கல்வி வசதி, போக்குவரத்து வசதி, காணி வசதி, தொழில்வாய்ப்பு, என்ற ரீதியில் வாழ்வின் சகல பரிமாணங்களையும் உள்ளடக்கியதாக புனர்வாழ்வு, நிவாரண வேலைகள் உள்ளன.

**7. இப்போது இங்கே ரேடியோதொன் மூலம் த.பு. கழகத்தின் அவசரகால தேவைகளுக்காக நிதி சேகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதைக்கேட்டுக் கொண்டிருக்கும் எமது நேயர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?**

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தேவைகளுக்காக அவுஸ்திரேலியாவில் நிதி சேகரிக்கப்படுவதாகவும் அதற்கு அவுஸ்திரேலியா வாழ் தமிழ் மக்கள் இலட்சக்கணக்கில் நிதி வழங்கி வருவதாகவும் அறிகிறேன். இத்தகைய செயற்பாடு குறித்து பெரும் மனநிறைவு அடைகிறேன். அதேவேளை, விடுதலை, பாதுகாப்பு, சமாதானம், சுபீட்ச வாழ்வு என்ற ரீதியில் அனைத்து தேவைகளுக்கும் மேலும் நிதிகளை வாரி வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பேரினவாதத்தின் அசல் பிரதிநிதி

சிறீலங்கா ஆட்சியாளர்களில் எவருமே சந்திரிகா பண்டார நாயக்கா அளவுக்கு பேரினவாத வெறியை செயலிற் காட்டியது கிடையாது. இதுவரை நாளும் முதலாம் நம்பர் இனவெறி ஆட்சியாளராக இருந்து வந்த ஜே. ஆர் ஜெயவர்த்தனா இப்போது இரண்டாம் இடத்துக்கு தள்ளப்பட்டுவிட்டார். 10 வருட காலமாக ஜே. ஆர் செய்து வந்த இனவெறி செயல்களை சந்திரிகா அம்மையார் ஒரு வருடத்துக்கு குறைந்தளவு காலத்தில் செய்து முடித்து ஜே. ஆரை வெற்றி பெற்றுள்ளார். 3-ம் ஈழப் போருக்கு முன்னர் பேச்சளவில் பிரேமதாசவை போலவும் செயலைப் பொறுத்தளவில் ஜே. ஆரைப் போலவும் இருந்து செயல்பட்ட சந்திரிகா அம்மையார் யாழ்ப்பாணச் சமர் நடந்த காலத்திலும் அதுக்கு பின்னரும் செயலைப் பொறுத்தளவில் வெலிக்கடை படுகொலை புகழ் சேபால எக்கநாயக்க போலவும் பேச்சளவில் சிறில்மத்தியூ போலவும் செயல்பட்டு வருகின்றார். சபுமல் குமாரய்யா யாழ்ப்பாண ராச்சியத்தைக் கைப்பற்றிய போதும் அல்லது பிரிகேடியர் வீரதுங்கா யாழ்ப்பாணத்தில் இராணுவ ஆட்சியை நடாத்திய போதும் ஏன் இந்திய ஆக்கிரமிப்பு காலகட்டத்தின் போதும் இப்போது நடந்துள்ளதை போன்றதொரு அவலத்தை குடாநாட்டு மக்கள் சந்திக்கவே இல்லை. 'யப்னா பீப்பிள்' என்று நுனி நாக்கால் ஆங்கிலம் பேசி, கல்வியை கடவுளாக வழிபடும் யாழ்ப்பாண சமூகத்தின் முன்னாள் மதிப்பிற்குரிய குடும்பப் பெண்ணாக காட்சி கொடுத்த சந்திரிகா அம்மையார் யாழ்ப்பாணத்தை சிங்களப் படைகள் கைப்பற்றியதும் 'யாப்பபடுன' என்று அடித் தொண்டையால் பேரினவாத மொழியில் தமிழினத்தை அச்சுறுத்தியுள்ளார். எல்லா இனக் கொலை வேளைகளின் போதும் தென் இலங்கையில் இருந்த தமிழர்களை நோக்கி யாழ்ப்பாணத்துக்கு ஓடு என்று இனவெறியர்கள் கூச்சலிட்டார்கள்.. யாழ்ப்பாணத்தவர்களது வாக்குகள் எனக்குத் தேவையும் இல்லை அவர்களைப்பற்றி எனக்கு கவலையும் இல்லை என்று ஜே. ஆர் கூறியிருந்தார். யாழ்ப்பாணத்தை உங்களுக்கு தர சம்மதித்தோம், ஆனால் கிழக்கை விட்டுத்தரமாட்டோம் என்று பிரேமதாசா பேச்சுவார்த்தைக் காலத்தில் புலிகளிடம் கூறியிருந்தார். எந்த ஒரு இனவாத ஆட்சியாளரும் அல்லது இனவெறிசெயல்களும் யாழ்ப்பாணத்தை அழிந்த நகரமாய் மாற்றுவதில் தான் சென்றது. இன்று அவர் யாழ்ப்பாணத்தை இல்லாது செய்து விட்டார். ஜனாதிபதி காலத்தில் தமிழர் வாக்குகளுக்கு தூண்டிலில் போடுவதற்காக யாழ் நூல் நிலைய எரிப்பை விசாரிக்க ஒரு விசாரணைக் குழுவை நியமிக்க இருப்பதாக சந்திரிகா அறிவித்தார்.

14 வருடங்களுக்கு முன் நடந்த நூல்நிலைய எரிப்பின் குற்றவாளிகள் யார் என்று அறிய ஒரு விசாரணையை நடாத்த இருப்பதாகக் கூறும் சந்திரிகா அம்மையார் முழு யாழ்ப்பாணத்தையும் எரித்து, அழித்து யாழ்ப்பாண மக்களை அடித்து விரட்டிய படையினருக்கு, படைத்தளபதிகளுக்கு பாராட்டு செய்து, அவர்களை கௌரவித்து அதை ஒரு வெற்றிவிழாவாக கொண்டாடி வருகின்றார். கொலை கருவி கொண்டு அடித்துக் கலைத்து விட்டு திரும்பி வருமாறு எசமான் அழைக்கும் போது அந்த அழைப்பை கௌரவமான ஒன்றாக அல்லது நியாயமான ஒன்றாக ஒரு அடிமை நினைப்பதைப் போலவே யாழ்ப்பாணம் வரும்படி சந்திரிகா விடுக்கும் அழைப்பை எற்றுக்கொள்ள வேண்டும் என்று கருதுவதும் ஆகும். கூட்டணி சிவசிதம்பரம் பேரினவாத பூதத்தின் ஒரு விசுவாசமான அடிமையாக இருக்கட்டும். தனது எசமானியின் அழைப்பை தன்னைப் போலவே தமிழினம் ஏற்க வேண்டும் என்று அவர் கோருவது இனக் கொலை புரிந்த ஒரு ஆக்கிரமிப்புப் படைக்கு வக்காலத்து வாங்கும் குற்றத்தைச் செய்வதற்கு ஒப்பானதாகும். மானம் காத்தல் என்பது அமைதிக் காலத்து சமாச்சாரம் அல்ல. அது நெருக்கடி வேளைகளில்தான் தேடப்பட வேண்டியது. எமது மக்கள் இனமானமுடையவர்கள். இனத்தின் விடியலுக்கான போராட்டத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் எதையும் எமது மக்கள் செய்ய விரும்ப மாட்டார்கள். அதைச் செய்வதை விட தாம் ஒரு வாழ்வியல் துன்பத்தையே அனுபவிக்க விரும்புவர். இது மானமுள்ள எமது இனத்தின் பண்பாடு. ★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கிழக்கில் அகலக் கால்பதிக்கும் விடுதலைப் புலிவீரர்கள்

யாழ்ப்பாணத்தை விட்டு விடுதலைப்புலிகள் பின் வாங்கியது ஒரு யுத்த தந்திரமே. விடுதலைப்புலிகள் பின்வாங்கும் போதும் இராணுவத்தினருடன் போரிட்டுக் கொண்டே பின்வாங் கினர். சுமார் 50 நாட்கள் நடந்த யுத்தத்தில் 1000-க்கும் மேற்பட்ட படைகள் கொல்லப்பட்டு 3000-க்கும் அதிகமான படையினர் காயப்படுத் தப்பட்டனர். விமானப்படையின் பலம் குறைக்கப்பட்டதுடன், தரைப் படையில் பல யுத்த டாங்கிகளும் அழிக்கப்பட்டன. இத்தனையும் தாண்டி யாழ்ப்பாணத்தை அடைந்த சிறிலங்காப் படைகள் தமது சிறி லங்காக் கொடியை ஏற்றும் நேரம் கிழக்கில் அந்தக் கொடி இறக்கப் படுவதற்கான நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்பட்டதானது சிங்கள அர சிற்கு பெரும் தடுமாற்றத்தை ஏற் படுத்தியுள்ளது.

கிழக்கில் மட்டக்களப்புப் பகு தியை தாம் கட்டுப்பாட்டில் வைத் திருப்பதாகத் தெரிவித்த சிறிலங்காப் படைகள் புதுக்குடியிருப்புத் தாக்கு தலால் கலங்கி நிற்கின்றன. உண்மை யில், கிழக்கின் 75 வீதத்திற்கும் அதி கமான பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.


பூகோள ரீதியாக போராட்டத் திற்கு மிகவும் சிக்கலான பகுதி எனக் கருதப்பட்ட மட்டக்களப்புப் பகுதி யானது விடுதலைப்புலிகளின் தந்தி ரமான நகர்வுகளால் இலகுவாக்கப் பட்டு வருகிறது. கடல்களும், ஆறுக ளும் நிறைந்த இயற்கைச் சூழமை வுகளைக் கொண்ட இப்பிரதேசம் கெரில்லாப் போராட்டத்திற்கு ஒத் திசைவாக இருந்த போதிலும், சிங்க ளக் குடியேற்றங்களால் சிக்கலைக் கொடுப்பதாய் அமைந்தது. எனி னும் விடுதலைப்புலிகள் இப்பிர தேசங்களில் மிக சாதுரியமான, நுணுக்கமான, நன்கு திட்டமிட்ட முறைகளைக் கையாண்டு வெற்றி யீட்டி வருகின்றனர் என்பது இரா ணுவ ஆய்வாளர்களால் விதந்துரைக் கப்படுவதையும் அவதானிக்கலாம். புதுக்குடியிருப்பு - சிறிலங்கா அதிர டிப்படை முகாமானது மிகவும் பாதுகாப்பான முறையில் அமைக் கப்பட்டிருந்தது. இந்தக் கொலைப் படையினர் ஜே. ஆர். ஜெயவர்த் தனா காலத்தில் உருவாக்கப்பட் டவர்கள். சிறிலங்காவின் இராணுவ உயர் மட்டங்கள், இம்முகாம் தாக்கு நிலைக்குட்படாத உயர் பாதுகாப் புக்களைக் கொண்டிருந்தன என்று கணித்திருந்தன. ஒருபுறம் கிழக்கே வங்கக் கடலும், மறுபுறம் மேற்கே நீண்ட வாவியும் வடக்கேயும் தெற் கேயும் சில கிலோமீற்றர் தொலை வில் ஏனைய அதிரடிப்படை முகாங் களையும் கொண்டமைந்ததுதான் புதுக்குடியிருப்பு அதிரடிப்படை முகாம்.

காலையில் சனநடமாட்டமும் வாகனப்போக்குவரத்தும் அதிகமா கக் காணப்படும் மட்டக்களப்பு - கல்முனை வீதி நண்பகலிற்கு பின் னர் 4.00 மணிவரை போக்குவரத்து ஓரளவு குறைந்து அமைதியாகக் காணப்படும். விடுதலைப்புலிகள் இந்த முகாமை இரவு வேளையில் தாக்க வருவார்கள் என்ற அச்சம் படையினர் மத்தியில் இருந்ததால் அவர்கள் இரவுப்பொழுதுகளில் மிக வும் பலத்த பாதுகாப்புக்களை ஏற் படுத்தி உசார்நிலையில் இருப்பதும் வழக்கமாக இருந்திருக்கிறது. ஆனால் அவர்கள் எதிர்பாராத நேரத்தில், எந்தவிதமான சலனத்தையும் படை யினர்க்கு ஏற்படுத்தாது பட்டப்பக லில் முகாமை விடுதலைப்புலிகள் சுற்றிவளைத்திருந்தமை திகிலூட்டும் நிகழ்வே. வேவுப்புலிகளின் கணிப் பின்படி பகல் நேரம் உகந்ததாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா அதிரடிப் படைகள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்களில்

**தாக்கியழிக்கப்பட்ட 'பவள்' ரக கவச வாகனம்**






இதுவே மிகப்பெரிய தாக்குதலாக பத்திரிகைகள், செய்தித்தாபனங்கள் மற்றும் இராணுவ ஆய்வாளர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அத்தோடு மட்டக்களப்பு மாவட்டத்தில் நடாத் தப்பட்ட முதலாவது கரும்புலித்தாக் குதலும் இதுவாகும்.

ஆற்றிலும் கடலிலும் தோய்ந்த காற்று ஊமையாய் திரிய, சூரியக் கதிர்களின் வெம்மை சற்றுத்தணிந்த மாலையில் வெடிமருந்து நிரப்பிய வாகனத்துடன் கரும்புலி மேஜர் தினேஸ்குமார் (ரங்கன்), மட்டக் களப்பு மக்களின் துன்பியல் வாழ் விற்கு காரணர்களாக இருந்த கொலைப்படையினரின் முகாமின் உள் வாசற்தடைகளை உடைத்தெ றிந்து கொண்டு முகாமின் இதயப் பகுதியில் தாக்குதலை நடாத்தினார். தாக்குதல் அணியினர் தாக்குதல் தினத்திற்கு முந்திய இரவில் மட்டக் களப்பு வாவியைக் கடந்து பிரதான நிலப்பகுதியில் உறைந்திருக்கிறார்கள். இரவு நேரத்தில் இயந்திரம் பூட்டப் படாத படகில் தான் புலிகள் வாவி யைக் கடந்திருக்க வேண்டும் என சிறிலங்கா படையினர் தெரிவித்துள் ளனர்.

வாவியில் மக்கள் தோணிகளைத் தான் பெரிதும் பயன்படுத்துவார் கள். எனவே தோணிகளைப் பயன் படுத்தியே பெரும் எண்ணிக்கையி லான புலிவீரர்கள் ஒரே இரவில் ஆற்றைக்கடந்து, தமது இலக்கை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நோக்கி நகர்ந்து, உரிய நேரத்திற்கு முன்பாகவே நிலை எடுத்திருக்கிறார்கள். அத்தோடு எந்த நேரத்திலும் இராணுவத்தினரை எதிர்கொள்ளத் தயாராகவும் இருந்திருக்கிறார்கள். புதுக்குடியிருப்பு, கிரான்குளம், செட்டிப்பாளையம், களுதாவளை போன்ற பகுதிகள் அதிரடிப் படையினரால் திடீர் சோதனைக்குட்படும் பகுதிகளாக இருந்திருக்கிறது. ஆயினும் அன்றைய தினம் அவ்வாறு ஏதும் நிகழவில்லை. மேலும் விடுதலைப்புலிகள் அதிரடிப்படை முகாமிற்கு அருகிலுள்ள கட்டிடங்களிற்குள், வீடுகளிற்குள் எவ்வாறு நுழைந்தார்கள் என்பது இராணுவத்திற்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியிருந்தது. அயலவர்களின் ஒத்துழைப்பில்லாமல் தமது முகாமை விடுதலைப்புலிகள் அண்மித்திருக்க முடியாது என்பது படையினர் கருத்தாகும். தமிழ் மக்கள் மத்தியில் தமது முகாங்கள் அமைந்திருப்பது புதைமண்ணில் பாசறை அமைப்பதற்கு ஒப்பாகும் என்ற நிதர்சனத்தையும் காலம் தாழத்தியெனினும் அவர்கள் உணர்ந்து வரவும் செய்கிறார்கள். ஏற்கனவே மட்டக்களப்பில் ஏராளமான இராணுவ முகாம்கள் மூடப்பட்டமையையும் இங்கு அவதானிக்கலாம்.

ஏற்கனவே திட்டமிட்டபடி நிலைகள் எடுத்துக்கொண்ட விடுதலைப் புலிகள், கரும்புலித்தாக்குதல் நடாத்தப்பட்ட சில வினாடிகளில் தமது தாக்குதல்களையும் ஆரம்பித்தனர். தாக்குதல் ஆரம்பித்ததும் தாக்குதலிற்குள்ளாகிக் கொண்டிருந்த புதுக்குடியிருப்பு சிறிலங்கா அதிரடிப் படையினர் அருகிலுள்ள தமது முகாம்களிடம் இருந்து உதவி கோரியதைத் தொடர்ந்து ஆரையம்பதி, செட்டிபாளையம், கல்முனை ஆகிய இடங்களில் இருந்து படையினர் உதவிக்குப் புறப்பட்டனர்.

தாக்குதல் நடந்து கொண்டிருக்கும் போது தாக்கப்பட்டுக்கொண்டிருக்கும் முகாமிற்கு உதவிப்படைகள் வந்து சேராமல் தடுப்பதற்கு விடுதலைப் புலிகளின் இடைமறித்துத் தாக்கும் குழுக்கள் தயாராய் நின்றன. மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியிலும் வேறு சில இடங்களிலும் விசேட தாக்குதல் அணிகளை மேலதிகமாக நிறுத்தியும் இருந்திருக்கிறார்கள்.

முகாம் மீதான தாக்குதலை சிறந்த படைக்கலச் சக்தி கொண்டு தாக்கியிருக்கிறார்கள். மிகக் கடுமையான தாக்குதல் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. எறிகுண்டு செலுத்திகளைக் கொண்டு காவல் நிலைகளைத் தாக்கியும், இலகு இயந்திரத் துப்பாக்கிகள் தானியங்கி துப்பாக்கிகள், கொண்டு படையினரை மூர்க்கமாகத் தாக்கியும் உள்ளனர்.

சுமார் மூன்று மணி நேரம் தொடர்ச்சியாக சிறீலங்கா அதிரடிப் படையினர் விடுதலைப்புலிகளின் அதிரடித்தாக்குதலால் நிலைகுலைந்தும், கட்டளைப்பிறப்பிப்பு நிலையின்றியும், குழப்பான, மோசமான நிலைக்குள் நின்று கொண்டிருந்தமை அவர்கள் மீதான சிறப்புப் பெயருக்கு அவப்பெயரைத் தேடிக் கொடுத்தது.

இந்தத் தாக்குதலில் மூன்று இன்ஸ்பெக்டர்கள், இரண்டு சப் இன்ஸ்பெக்டர்கள் உட்பட பலர் கொல்லப்பட்டுள்ளனர். கல்முனை, செட்டிபாளையம், ஆரையம்பதி ஆகிய இடங்களில் இருந்து வந்த உதவிப் படையினர் மீது விடுதலைப்புலிகளின் தாக்குல் அணியினர் உக்கிரமான தாக்குதலை நடாத்தி அவர்களை மீண்டும் முகாமிற்குள் திரும்ப ஓடவைத்தனர். உதவிக்கு வந்த படையினரை விடுதலைப்புலிகள் அவர்களது முகாம் வாசல் வரை ஓட ஓட துரத்திச் சென்று தாக்கியுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் ஆவேசமான தாக்குதலினால் வீழ்ச்சியுற்ற அதிரடிப்படை முகாமிலிருந்து. பெருமளவு ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். முகாமினுள் இருந்த மூன்று பவல் கவசவாகனங்கள் விடுதலைப் புலிகளால் முற்றாக அழிக்கப்பட்டதுடன் முகாமும் முற்றாகச் சேதமாக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடியை ஏற்றிவிட்டோம் என்று கொழும்பிற்கு அறிவித்த சில மணித்தியாலயங்களில் மட்டக்களப்பில் அதிரடிப்படையினரின் ஒரு முகாம் விடுதலைப்புலிகளின் கரங்களில் வீழ்ந்தது என்ற செய்தியும் சிறிலங்கா அரசிற்கு கிடைத்தது.

விடுதலைப்புலிகள் வீழ்ந்து விடவில்லை. நீண்டகால நோக்கில் பல வெற்றிகளையும், சாதனைகளையும். அற்புதங்களையும் எவ்வாறு நிலைநாட்டுவார்கள் என்பதை அதிரடிப் படை முகாம் வீழ்ச்சி கோடிட்டுக் காட்டுகிறது. யாழ்குடாநாட்டை விட்டு விடுதலைப்புலிகள் பின்வாங்கியமை தோல்வியே அல்ல என்பதையும், எத்தகைய தந்திரோபாய அடிப்படையில் இவை நிகழ்ந்தன என்பதையும் எதிர்காலமே சிறிலங்கா அரசிற்கு வெளிச்சமிட்டுக் காட்டும். யாழ்குடாநாட்டு வெற்றியில் மிதந்து கொண்டிருக்கையில், பட்டாசுகள் கொழுத்தி சந்தோசப் பட்டுக்கொண்டிருக்கையில், அரச ஊதுகுழல்கள் சிங்களம் வென்று விட்டதாக ஓலமிட்டுக்கொண்டிருக்கையில், புதுக்குடியிருப்பு முகாம் வீழ்ந்ததுடன் எல்லோரது பார்வையும் யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கி திரும்பியிருந்தது. ஆயினும் ஏற்கனவே அமுலில் உள்ள பத்திரிகைச் செயதித்தணிக்கையை மீறி பத்திரிகைகளும் செய்தியை பிரசுரிக்க முன்வரவில்லை. அவையும் இருட்டடிப்புச் செய்தன. இருந்தும் விடுதலைப்புலிகள் முகாம் மீதும் உதவிக்கு வந்த படையினர் மீதும் நடாத்திய தாக்குதலில் 60-க்கு மேற்பட்ட படையினர் கொல்லப் பட்டும், 30-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர்.

கரும்புலி தினேஸ்குமார் உட்பட விடுதலைப்புலிகள் தரப்பில் இருபத்தி நான்கு விடுதலைப்போராளிகள் வீரச்சாவடைந்திருக்கிறார்கள். இத் தாக்குதலின் முடிவை ஏற்றுக்கொள்ள முடியாத சிங்களப்படைகள் வீதியால் வந்த வாகனங்களில் சென்றோரையும், அப்பகுதி மக்களையும் ஈவிரக்கமின்றி சுட்டுக் கொன்றுள்ளனர். இதன்போது சுமார் 40 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இக்கொலைகள் நடந்து 48 மணி நேரத்திற்கு பின்னரே அப்பகுதியில் இருந்து இறந்தவர்களது உடல்கள் அகற்றப் பட்டன. அதுவரை, எவருமே அப் பகுதிக்குள் நுழையவோ, வெளியே வரவோ முடியாதவாறு இராணுவத்தால் தடுக்கப்பட்டிருந்தது..

யாழ்ப்பாணத்திலிருந்து விடுதலைப்புலிகள் பின்வாங்கியதும் மக்கள் வெளியேறி வன்னிக்கும் தென்மராட்சிக்கும் இடம்பெயர்ந்ததுமான தற்காலிகப் பின்னடைவுகளை விடுதலைப் போரின் வெற்றிப் பாய்ச்சலாக மாற்றும் திறன் படைத்தவர் எமது தேசியத் தலைவர். மட்டக்களப்பில் துணிகரமாகத் தாக்குதல் நடாத்தியதை தமிழீழத் தனியரசை நோக்கிய பாதையில் ஒரு முக்கிய நகர்வாகவே கொள்ளல் வேண்டும்.

- தருமு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# நேர்காணல்

## சுதர்சன்

*நேர்முகம்*
**கருணாகரன் / இயல்வாணன்**



**"தமிழீழத்திலிருந்து புலம்பெயர்ந்து ஒரு தசாப்தத்துக்கும் மேலாக யேர்மனியில் வாழ்ந்து வரும் திரு. சுதர்சன் தமிழ்ப் பற்றும் தமிழீழம் விடிவுபெற வேண்டுமென்ற அவாவும் கொண்டு இவற்றுக்காக தான் வாழும் நாட்டில் செயற்படுபவர். யேர்மனியில் இன்று வளர்ந்துவரும் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ்க் கலைகளின் உயர்ச்சிக்குமான மூலவர்கள் சிலரில் இவரும் முக்கியமானவர். பத்தாண்டுகளாக யேர்மனியில் வாழ்கின்ற போதும் எம் மண்ணின் மீது வேரறுந்து போகாத பற்றுடையவர். கலை, இலக்கியம் மற்றும் சமூகவியல் சார்ந்த அக்கறையும் அறிவும் மிக்கவர். அண்மையில் இவர் தமிழீழம் சென்றிருந்தபோது வெளிச்சம் மாத இதழுக்கு வழங்கிய நேர்காணலை இங்கே தருகிறோம்.**

**⌧ புலம்பெயர்ந்த நாடொன்றில் எமது கலை, பண்பாட்டு வளர்ச்சிக்கு அமைப்பு ரீதியாகப் பணி புரிபவராக இருக்கிறீர்கள். அங்கு (யேர்மனியில்) நடைபெறும் இத்தகைய செயற்பாடுகள் பற்றிக் கூறுங்கள்?**

➲ வேறுபட்ட பண்பாட்டைக் கொண்ட ஒரு நாட்டில் வாழ்கின்ற காரணத்தால் நமது பண்பாட்டை அங்கு வாழும் தமிழ் மக்களிடையே - குறிப்பாக இளம் சமுதாயத்தினரிடையே - நிலைநிறுத்தும் ஒரு பெரிய பணி கலை, பண்பாட்டுத்துறையில் பணியாற்றுபவர்களுக்கு இருப்பதாக நாம் உணருகிறோம். அதேவேளை மண்பற்றோடும் இன உணர்வோடும் கூடிய எதிர்கால சமுதாயத்தை கலை என்னும் கருவியின் துணையோடு உருவாக்க ஆவன செய்கிறோம். தமிழீழ விடுதலைப் போராட்ட நெருப்பின் அனலை அரங்குகளில் தோற்றுவித்து, அந்நியப்பட்டு விடாமல் அங்கு வாழும் தமிழர்களைத் தமிழீழத்துக்கு அருகிலேயே வைத்திருக்கிறோம். நுண்கலைக் கல்லூரிகளை நடத்துகிறோம்; நடனம், தமிழிசை, வயலின், மிருதங்கம், வீணை ஆகியவற்றைப் போதிக்கிறோம். கேணல் கிட்டு, தியாகி திலீபன், அன்னை பூபதி மற்றும் கரும்புலிகள் நினைவாக நினைவுப் போட்டிகளை நடாத்தி கட்டுரை, கவிதை, பேச்சு, ஓவியம் ஆகிய துறைகளில் பரிசுகளை வழங்கி, இளைய - புதிய - திறமையாளர்களை வெளிக்கொணர்கிறோம். ஒவ்வொரு வருடமும் எட்டிற்கும் மேற்பட்ட சிறந்த கலைநிகழ்ச்சிகளை நடாத்தி நமது பராம்பரியக் கலைகளையும் புதிய படைப்புக்களையும் மேடையேற்றி, தமிழர் கலைகளை, கலைஞர்களை ஊக்குவிக்கின்றோம். யேர்மனியர் மத்தியில் எமது கலை வடிவங்களை அறிமுகப்படுத்துகிறோம். அனைத்து முயற்சியிலும் மண்ணின் விடிவை முன்வைத்தே பணியாற்றுகிறோம்.

**⌧ அங்கு இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது எவ்வாறான பிரச்சனைகளை எதிர்கொள்கிறீர்கள்?**

➲ பிரச்சினைகள் பல வடிவங்களில் உள்ளன. இயந்திரமயமான அந்த வாழ்வில் கலையில் ஆர்வங்கொண்டு அதற்கென நேரமொதுக்கிச் செயலாற்றும் கலைஞர்களைக் கண்டுபிடித்தல், அப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட கலைஞர்கள் இனவிடுதலை உணர்வோடு செயற்பட ஆயத்தமாய் உள்ளனரா என அறிதல் ஆகிய பிரச்சினைகள் ஆரம்பத்தில் இருந்தபோதும் தற்போது நாம் அவற்றை வென்றுவிட்டோம்.

இங்கு நடைபெறும் புனிதப்போர், மாவீரர் வீரகாவியம், தொடரான வெற்றிகள் போன்றவை அங்கு கலைஞர்களிடையே ஒரு பெரிய மாற்றத்தை எற்படுத்தி அமையப் போகும் தமிழீழத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கையை உண்டு பண்ணி விட்டது. ஏற்கனவே விடுதலை உணர்வோடு பணியாற்றிய கலைஞர்களோடு இணைந்து கொண்ட புதிய கலைஞர்களின் செயற்பாடும் நம்பிக்கையூட்டுகிறது. அதேவேளை பரந்த ஒரு பரப்பாக யேர்மனி இருப்பதால் கலைஞர்களை ஒன்றிணைத்து ஒரு ஆக்கத்தை வெளிப்படுத்துவது சிரமமான ஒன்றாக உள்ளது. துரோகக் குழுக்குள் மக்கள் முன் தமது கொள்கைகளைக் கூறிக் குழப்பமுடியாத நிலையில், யேர்மனியின் பொதுநல அமைப்புக்கள், அரசநிறுவனங்களை அணுகி, எம்மைப் பற்றிய தவறான கருத்துக்களைத் திணித்து விடுவதால் ஏற்படும் சிரமங்களையே குறிப்பிடத்தக்க பிரச்சினையாகக் கூறலாம்.

**⌧ எமது பண்பாட்டு அடையாளங்களைப் பேணுவதிலும் எமது கலைகளை வளர்க்கும் முயற்சிகளிலும் அங்குள்ள தமிழ் மக்கள் எவ்வளவுக்கு ஆர்வம் காட்டுகிறார்கள்?**

➲ ஒரு காலத்தில், 'எனது பிள்ளைக்குத் தமிழ் தெரியாது' என்று கூறுவதில் பெருமைப்பட்ட பெற்றோரும் அங்கு இருந்தார்கள். ஆனால் பல அந்நிய நாட்டுப் பிள்ளைகள் சேர்ந்து கல்வி கற்கும் யேர்மனியப் பாடசாலைகளில் ஒவ்வொரு நாட்டின் பிள்ளையும் தனது மொழி, தனது தனித்துவமான இசை, தனது நடனம் என்று கூறிப் பெருமைப்படும் போது தமிழ்க் குழந்தை தனது மொழி, தனது கலை, பண்பாடு என்பதைத் தேடும் ஒரு ஏக்க நிலை உருவானது. யேர்மனிய மொழியும் கலையும் என்னுடையது என்று சொல்ல எந்தக் காலத்திலும் முடியாது என்பதைப் பிள்ளை உணர்ந்த போது பெற்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

றோரை நெருக்கடிக்குள்ளாக்கினார்கள். தவிர தமது பண்பாட்டு அம்சங்களால் கவரப்பட்டார்கள்.

உலகத் தமிழர் இயக்கம் யேர்மனி முழுவதும் 78 தமிழாலயங்களை நடாத்தி இன உணர்வோடு கூடிய நமது தனித்துவத்தைப் பேணுகிறது. நடனக்கலை (பரதம்) ஒரு வருமானம் மிக்க தொழிலாகவே பயிற்றுவிக்கப்படுவது கூட நமது மக்கள் நமது கலையில் கொண்டுள்ள ஆர்வத்தைக் காட்டுகிறது. பல கலை மன்றங்களும், புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் சஞ்சிகைகளும் தமிழை மறவாத தமிழர்களின் ஆர்வம் மிக்க செயற்பாடுகளை நிரூபிக்கின்றன.

**⌧ புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழர்கள் எதிர்கொள்ளும் வாழ்க்கை நெருக்கடி, கலாச்சார நெருக்கடிகளுக்கு எவ்வாறு முகம் கொடுக்கிறார்கள்?**

➲ புலம்பெயர்ந்து ஐரோப்பாவில் வாழும் தமிழருக்கு பொருளாதார நெருக்கடி இருக்க நியாயமில்லை. ஆனால் இருவேறுபட்ட பண்பாடுகளுடன் உண்டான முரண்பாடு ஒரு நெருக்கடி என்றே சொல்ல வேண்டும். வெளிநாட்டவரின் வருகை 'தமது சுபீட்சமான வாழ்வுக்கு இடைஞ்சலாக தமது சுகங்களைப் பங்கு போட்டுக் கொள்ள' என்ற அபிப்பிராயம் யேர்மனியரிடம் நிலவுகிறது. புலம் பெயர்ந்தோர் வாழ்க்கையில் இது பெரிய தாக்கத்தை உண்டுபண்ணுகிறது. புலம் பெயர்ந்தோர் தமது எதிரி எனச் சில யேர்மனியர் கருதுவதற்கு இதுவே காரணம்.

சிங்கள இனவாத அரசின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்குப் பயந்து அங்கு சென்றவரே நாம் என்பதையும், நமது பிரச்சினை தீர்ந்து சுபீட்சம் நிலவும்போது திரும்பி விடுவோம் என்பதையும் விளக்கும் பட்சத்தில் அயலவருடன் நட்பாகப் பழக வாய்ப்புண்டு. மனித நேயத்தை நாகரிகமாகக் கருதும் யேர்மனியப் பண்பாளர்களால் இந் நெருக்கடி தீர்க்கப்படுகிறது. பண்பாட்டு நெருக்கடி என்று கூறும் போது நமது (தமிழரின்) இறுக்கமான ஒழுக்கநெறி பண்பாட்டுச் சிதைவுக்கு எதிராகத் தாக்குப் பிடிக்கக் கூடிய பெரிய கவசம் என்றே சொல்லலாம். இருந்தும் ஆங்காங்கே பண்பாட்டு அரிப்புக்கள் நிகழத்தான் செய்கின்றன. புலம் பெயர்ந்த தமிழரின் ஒரு சிறிய வட்டம் மேலைத்தேய பண்பாட்டில் சீர்கேடானவற்றை இலகுவில் ஏற்று, சீரழிவதைக் காணக்கூடியதாகவுள்ளது. இதை உணர்ந்த பெற்றோர் மண்பற்றோடு கூடிய எமது பண்பாட்டு நிகழ்ச்சிகளில் பிள்ளைகளை ஈடுபடச் செய்து, அதன் மூலம் நல்ல வழியைத் தோற்றுவிப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

**⌧ நவநாஸிகள் அடிப்படைவாதிகள் போன்றோரால் வெளிநாட்டவர்கள் தாக்கப்படுவதாக அறிகிறோம். வெளிநாட்டு அகதிகள் தொடர்பாக அதிகமான மேற்குலக மக்களின் மனோபாவம் எப்படியிருக்கிறது?**

➲ எனது பார்வையில் மேற்குலகத்தினர் அகதிகளில் அன்பு காட்ட வேண்டும் என்பதைவிட, தாங்கள் நாகரிகமானவர்கள் - மனித நேயமிக்கவர்கள் - இனவாதம் அற்றவர்கள் எனப் பிரச்சாரம் செய்யவே முனைகிறார்கள். அதற்காகவே அகதிகளை அரவணைக்கிறார்கள். இதனை மீறி இனவாதிகள் (நாசிகள்) செயற்படும் போதெல்லாம் பிரச்சார சாதனங்களின் மூலம் அவற்றை மூடிமறைத்து மழுங்கடிக்கின்றது அரசு. யேர்மனியைப் பொறுத்தவரை தொலைக் காட்சிகளில் இன, நிற, மத வெறிக்கு எதிராக விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. அதேவேளை புலம்பெயர்ந்தோர் வதிவிட உரிமை பெறுவதில் பல சிக்கல்கள் உள்ளன. யேர்மனிய மக்களைப் பொறுத்தவரை ஒரு 'வேண்டத் தகாத விருந்தாளிகளே' புலம் பெயர்ந்தோர்.

**⌧ நாஸிகள், அடிப்படைவாதிகளின் நடத்தைகள், நடவடிக்கைகள் மனிதாபிமானவற்றையே. ஆனால் அந்நாடுகளின் இனக்குழுமங்கள் தங்கள் தனித்துவமும் தேசிய உரிமங்களும் சிதைந்து போகலாம் என்ற அச்சத்தில் அகதிகள் மீது எதிர்ப்புணர்வைக் காட்டுவது நியாயம் என்று கூறப்படுகிறது. இது பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

➲ எமது கொள்கையும் பிரச்சாரமும் இதையே தான் வலியுறுத்துகின்றன. "இது எமது சொந்த பூமியல்ல; என்றோ ஒரு நாள் எமது நாட்டிற்குத் திரும்ப வேண்டியவர்களே நாம்" என்றே கூறி வருகிறோம். அவர்கள் கருதும் தனித்துவச் சிதைவுக்கான பயம் நியாயமானதே. ஆனால் நாஸிகளின் நடவடிக்கை அநாகரிகமானது. பத்து வயதுத் துருக்கிய குழந்தையைக் கொன்று விடுவது கொடுமையானது தானே.

**⌧ ஈழத்தமிழ் அகதிகள் தொடர்பான மேற்கு நாட்டவரின் பொதுவான கணிப்பீடு என்னவாக இருக்கிறது?**

➲ அவர்கள் எம்மை விளங்கிக் கொள்ளவில்லை என்று சொல்வதை விட, புரிந்து கொள்ளாதவர் போல் பாசாங்கு செய்கிறார்கள் என்றே கூற விரும்புகிறேன்.

**⌧ புலம்பெயர்ந்து, அந்த நாடுகளிலே தமது வாழ்வை அமைத்துக்கொண்ட தமிழர்களின் அடுத்த தலைமுறையினரை, தமது மொழியையும், பண்பாட்டையும், இனத் தனித்துவத்தையும் தொலைத்த 'தொலைந்த தலைமுறைகள்' எனக் கூறலாமா?**

➲ புலம்பெயர்ந்த தமிழரை மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, மண் பற்றோடு வாழும் தேசாபிமானிகள். இது பெரியளவிலானது என்பது என் கருத்து. இவர்கள் பண்பாட்டையும், மொழியையும் தொலைக்க விரும்பாதவர்கள். இரண்டு, கடின உழைப்போடு பணம் சேர்த்து செல்வந்தராவதில் மட்டுமே குறியாக உள்ளவர். இவர்களும் எப்படியும் நாடு திரும்பும் எண்ணத்துடனேயே வாழ்கின்றனர். காரணம் தமது செல்வச் செழிப்பைக் காட்டிப் பெருமைப்பட (மற்றவரைப் பொறாமைப்படச் செய்ய) அங்கு யாரும் இல்லை என்ற நிலை. மிகக் குறைவான ஒரு பகுதியினரை மூன்றாவதாகக் கூறலாம். இவர்கள் மேலைத்தேய பண்பாட்டுக் குறைகளை மட்டும் நாகரிகம் என எண்ணிச் சீரழிந்து கொண்டிருப்பவர்கள். இவர்களால் தனித்துவத்தைத் தொலைக்க மட்டுமே முடியும். இவர்களை உங்கள் கேள்வியின் நாயகர்களாகக் கொள்ளலாம்.

**⌧ இதனைத் தடுக்கும் நடவடிக்கைகள் எவ்வெவ் வழிகளில் முன்னெடுக்கப்படுகின்றன?**

➲ பல தனிப்பட்ட சஞ்சிகைகள், கழகங்கள் கணிசமான அளவில் பண்பாட்டைப் பேண ஆவன செய்கின்ற போதும் விடுதலைப்புலிகள் இயக்க உப அமைப்புக்களும் பெருமளவு திட்டமிட்ட செயற்பாடுக

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


ளைச் செய்கின்றன. நாங்கள் கலைஞர்கள் மூலம் மேடையைக் கருவியாகக் கொண்டு பணியாற்றுகின்றோம். புனர்வாழ்வுக் கழகம், விழாக்கள் மூலம் இதனை முன்னெடுக்கின்றது. உலகத் தமிழர் இயக்கம் 78 பாடசாலைகளை நிறுவி கற்பித்தல் மூலம் செயற்படுகின்றது. மாணவர் அமைப்பு நேரடி மாணவர் தொடர்புகள் மூலம் இந்தப் பணியைச் செய்கின்றது.

**⌧ எங்களுடைய போராட்டத்தையும், எழுச்சியையும் சித்தரிக்கும் கலை, இலக்கிய வடிவங்களை எம்மவர்கள் யேர்மன் மொழியினூடாக வழங்கும் போது அந்நாட்டினருக்கு எமது பிரச்சினையைப் புரியவைக்கும் சாத்தியமுண்டல்லவா? இவ்வாறான முயற்சிகளேதும் குறிப்பிடப் படும்படியாக உண்டா?**

➲ சுமார் பத்து வருடங்களுக்கு முன் என்று நினைக்கிறேன். ஒரு கலைஞர், WARUM ICH HIER BINCH? (நான் ஏன் இங்கே) என்ற ஒரு படைப்பைச் செய்து மேடையேற்றினார். இது யேர்மனியரால் ரசிக்கப்பட்டது. பின்னர் பல பிரச்சார வேலைகளை யேர்மன் மொழியூடு நாம் செய்திருக்கின்றோம். கலை வடிவங்கள் மூலம் குறிப்பிடத்தக்க பெரிய முயற்சியேதும் செய்யவில்லை. அதேவேளை எமது தனித்துவத்தையும் நாகரிகத் தன்மையையும் வெளிக்காட்ட யேர்மனியர் மத்தியில் நடன, இசை நிகழ்ச்சிகள் செய்துவருகிறோம். அவற்றினூடு விடுதலை நோக்கை வெளிப்படுத்துகிறோம்.

**⌧ யேர்மன் மொழியில் நமது விடுதலைப் போராட்ட ஆக்க இலக்கியங்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதா?**

➲ இந்த முயற்சியில் இன்னும் இறங்கவில்லை. உங்கள் கேள்வியிலுள்ள அவசியத்தை உணர்கிறேன். அதனைச் செயற்படுத்த ஆவன செய்வோம்.

**⌧ உலக விடுதலைப் போராட்டங்களுக்கும் எமது விடுதலைப் போராட்டத்துக்குமிடையில் நீங்கள் கண்ட வித்தியாசமென்ன?**

➲ உலக விடுதலைப் போராட்டங்கள் அனைத்திலுமே சுதந்திரப் பிரகடனம் செய்யும் இறுதி வேளை வரை நாடு அழிவை மட்டுமே சந்தித்தபடி இருந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டக் காலத்திலேயே, தமிழீழம் கட்டி எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது நமது தலைவரின் வழிநடத்தலில் நாம் கண்ட சாதனை.

**⌧ புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் எமது மக்கள் என்றைக்காவது தாங்கள் தாயகம் திரும்ப வேண்டுமென்ற எண்ணப்பாட்டுடன் உள்ளனரா? அத்துடன் போராட்டம் வெற்றி பெறவேண்டும் என்ற எண்ணத்துடனான பங்களிப்பைச் செய்து வருகின்றனரா?**

➲ ஆம்! ஒரு சிறு பிரிவினர் தவிர ஏனையோர் தமது பரம்பரை தமிழீழ மண்ணிற் தான் என்பதில் உறுதியாக உள்ளனர். மேலைநாட்டு மோகம் அங்கு சலித்து விட்ட நிலையில் பின்தள்ளப்பட்டு விட்டது. இங்கு வந்து திரும்பும் தமிழர் இந்தத் தேசத்தை சொர்க்க பூமியாகக் கூறிப் பெருமைப்படுவது அங்கு ஒரு பெரிய மாற்றத்தை உண்டு பண்ணியுள்ளது. பங்களிப்புக்கள் அதிகரித்துள்ளன. அதற்கு எமது பிரச்சாரமும் ஒரு காரணமென்றாலும் கூட, இங்கு நடைபெறும் வீரப் போர், மக்களை நேசித்து மக்களால் நேசிக்கப்பட்டு தமிழீழத்தில் நிகழும் தியாகங்கள் எல்லாமே இதற்கான காரணமென்பேன். ★

## பிரிட்டிஸ் ஆட்சிக்காலத்தில் தன்னிறைவு கண்ட தமிழீழப் பொருளாதாரம்

**இப்போது நாம் எதற்கெடுத்தாலும் சிறிலங்காவையே நம்பியிருக்கிறோம். தங்குநிலைப் பொருளாதாரத்திலேயே வாழ்ந்து வருகிறோம். சிறிலங்கா அரசு பொருளாதாரத்தடை விதித்ததும் யாழ்ப்பாணத்தில் பொருட்கள் யாவும் ஆனை விலை, குதிரை விலையில் விற்கப்பட்டன. ஆனால் பிரிட்டிஸ் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் வடகிழக்கு மாகாணத்தின் பொருளாதார நிலைமை எவ்வாறு காணப்பட்டது என்பதை S.E.N. Nicholas என்பவர் தனது 'Commercial Ceylon' என்ற நூலில் விளக்கியுள்ளார். "ரைம்ஸ் ஒவ் சிலோன்" நிறுவனம் இந்நூலை 1983-ம் ஆண்டு வெளியிட்டுள்ளது.**

**இந் நூலிலிருந்து சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன. இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களில் 80,000 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. இதிலிருந்து கிடைத்த அரிசியின் மூலம் வடகிழக்கு மாகாண மக்கள் தமது அரிசித் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டார்கள். Pedno bank என்ற நிறுவனம் பாரியளவு மீன் உற்பத்தியில் ஈடுபட்டு வந்தது. இதைவிட குளங்களிலும் மீன்பிடித் தொழில் நடைபெற்று வந்தது. யாழ்ப்பாணத்தின் தீவுப்பகுதிகளில் சங்கு, அட்டை, சிப்பி போன்றவை உற்பத்தி செய்யப்பட்டன. தம்பலகாமத்தில் விளைந்த ருசியான சிப்பி யப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.**

**உப்பு உற்பத்தியில் தமிழீழம் மிகவும் சிறந்து விளங்கியது. 50000 சாக்கு உப்பு தமிழீழத்தில் இக்காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனையிறவு, பாலாவி, நிலாவெளி போன்ற இடங்களில் காணப்பட்ட உப்பளங்களிலிருந்து மக்னீசியம் குளோரைட், சோடியம் குளோரைட்டு போன்ற உப்புக்களான உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. பனையைக் கற்பகதரு என மக்கள் வர்ணித்தனர். பனையிலிருந்து 800 வகையான உற்பத்திகள் பெறப்பட்டன. இந்தியாவில் பனை உற்பத்திப் பொருட்களுக்கு கூடுதலான மவுசு காணப்பட்டது. பனம் உற்பத்திப்பொருட்கள் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.**

**தென்னை உற்பத்தியும் பாரிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தேங்காய் எண்ணெய், கொப்பறா போன்றன வெளிநாடுகளுக்கு பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன. தென்னந்தும்பு வடபகுதியிலிருந்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. தோடை, முந்திரிகை, மாம்பழம் போன்றவற்றின் உற்பத்தியும் சிறப்பான முறையில் நடைபெற்றது. மாம்பழங்களில் பல்வேறு வகையான மாம்பழங்கள் காணப்பட்டன. இவற்றுக்கு இலங்கையின் ஏனைய பாகங்களில் பெருமளவு கிராக்கி காணப்பட்டது.**

**புகையிலை உற்பத்தியும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வந்தது. யாழ்ப்பாணச் சுருட்டு வெளிநாடுகளில் பிரபலமாக இருந்தது. யாழ்ப்பாணப் புகையிலையும் (சுங்கான் புகையிலை) வெளிநாடுகளில் நல்ல வரவேற்பை பெற்றிருந்தது. இவற்றைவிட மிளகாய், வெங்காயம், தக்காளி என்பனவும் வடகிழக்கு மாகாணங்களில் பெருமளவு உற்பத்தி செய்யப்பட்டது. இவ்வாறு பல்வேறு துறைகளில் தன்னிறைவு பெற்று விளங்கியது.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



இத்தாலி





நோர்வே



# புலம்பெயர் நாடுகளில் மாவீரர்நாள் நிகழ்வுகள்



சுவிஸ்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தமிழகத்திலிருந்து வருகைதந்து
ஐரோப்பிய நாடுகளெங்கும்
நடைபெற்ற மாவீரர்நாள்
நிகழ்வுகளில் சிறப்புரையாற்றிய
அருட்தந்தை அருள்ராஜா அவர்கள்






அமெரிக்கா





சுவீடன்






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சீதனம் ஒரு சமூகச் சிறுமை

ஏழாலையூர் இ. பரமகுரு

உலகின் உயிரினம் தோற்றம் பெற்ற காலம் முதல் அதன் பரிணாம வளர்ச்சியின் ஓர் அங்கமாக "சேமிப்பு" என்னும் பழக்கம் இயற்கையாக இயற்கை அன்னையால் உயிரினங்களுக்கு வழங்கப் பட்ட ஒரு வழக்கமாகும். இதனை நாம் உயிரினத்தோற்றுவாயின் முதல் படியில் உள்ள மரங்கள் தொட்டு ஏனைய ஊர்வன வரையான உயிரினங்களிடம் ஆங்காங்கே காணக் கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக, ஒரு மரத்தினை எடுத்துக் கொண்டால் அது மாரி காலத்தில் தனக்குத் தேவையான நீரை தன்னகத்தே சேமித்து வைத்து கோடையில் பயன்படுத்துகின்றது.

இதே போன்று எறும்பு தொடக்கம் பல்வேறு விலங்கினங்களிடையே, தமது நாளைய தேவைக்கான சேமிப்பைத் தம்மகத்தே சேமித்து வைக்கும் பழக்கத்தினை காணக்கூடியதாக இருக்கிறது. இது அன்றாட வாழ்க்கையில் சகல உயிரினத்திலும் இயற்கையான வழக்கமாகி இருந்து வருவதை நாம் கூர்ந்து நோக்கினால் கண்டுகொள்ளலாம். (உதாரணமாக: எறும்பு, எலிவர்க்கம் போன்றவை) இச் சேமிப்புப் பழக்கமானது, மனித இனத்தைப் பொறுத்தவரையில் தனது எதிர்கால "வாரிசுக்கான சேமிப்பு" ஆக தோற்றம் பெற்றது. ஆனால் இந்நடைமுறையில் காலப் போக்கில் புறச்சூழல்களும் அந்நிய நாகரிக ஊடுருவலும், போலிக் கௌரவமும், சனப்பெருக்கமும் பெரும் தாக்கத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளமை இங்கே நோக்கற்பாலது.

ஆரம்பத்தில் மனிதன் நாடோடியாக மரநிழலிலும், குகையிலும் வாழ்ந்த போது 'சேமிப்பு' அவனை பெரியளவில் கவரவில்லை. மனித வாழ்க்கையானது நாடோடி வாழ்க்கையிலிருந்தும் மாற்றம் பெற்று ஓரிடத்தில் நிலைத்து கூட்டு வாழ்வாகப் பரிணாமம் பெற்ற பின்பே 'சேமிப்பு' மனிதனுடன் குடிபுகுந்தது. படிப்படியாகக் குடும்ப வாழ்க்கையாகி, கிராம வாழ்வை நோக்கி, நகர வாழ்வைக் கண்டு, மாநகர வாழ்வுக்கு காலடி வைத்து பரந்து உலகளாவிய வாழ்வாக மாற்றம் பெற்று வரும் முறைவளர்ச்சியின் போது இச்சேமிப்புத் திட்டம், 'சீதனம்' என்னும் பெயர் மாற்றம் பெற்று மானிடத்தை சீண்டத் தொடங்கியது.

இம்முறையானது ஆரம்பத்தில் பெற்றோர் தமது பிள்ளைகள் எதிர் காலத்தில் பசி பட்டினியின்றி சீரும் சிறப்புமாகத் துன்பமின்றி வாழ வேண்டும் என்ற நன்னோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட ஒன்றாகி, காலப் போக்கில் தனிக்குடும்பமாக வாழப் போகும் புதுமணத்தம்பதியர்க்கு தமது சேமிப்பில் ஒரு பகுதியை வழங்கி அவர்களின் புது வாழ்வில் மகிழ்ச்சி கண்டனர். இவ்வேளை புதுமணத்தம்பதியினர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவோ அல்லது ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்களாகவோ இருந்து வந்தனர். இவ் வாழ்க்கை முறையில் அவர்கள், இன்பமான வாழ்வையே கண்டனர். இம்முறையான வளர்ச்சிப் போக்கில் அந்நிய ஊடுருவல்கள், அந்நிய நாகரிகங்கள், போலி கௌரவங்கள் ஊடுருவியதன் பயனாக "வாரிசு சேமிப்புத் திட்டம்" தவிடு பொடியாகி மதிப்பற்று, மருவி 'சீதனம்' என்னும் (அநாகரிக), பெயர் மாற்றம் பெற்றது. இத்திட்டமானது, பெண்களை மையமாக வைத்து தனது கோரப்பற்களை நீட்ட ஆரம்பித்தது. இக்கொடூரத்திற்கு பாவையரே முற்றுமுழுதாக பலியாகின்றனர். இது சமூகத்திற்கு நீங்காத ஒரு சிறுமையை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், பெண்பிள்ளைகளைப் பெற்ற பெற்றார்க்கு நீங்காச்சுமையாக ஏறி அமுக்குகின்றது. வாரிசுச் சேமிப்புப் பரிமாற்றம் இருந்த காலத்தில் சொந்த மாமன் வீட்டிலேயே மணச்சோடி பரிமாற்றம் பெற்றது. ஆனால் இன்று கூடிய சீதனத்திற்காக அயலூரில் மணச் சோடி தேடும் காலம் புகுந்து எல்லோர் மனதிலும் கயிறு மாட்டி கழுத்தை நெரித்துக்கொண்டு இருக்கின்றது. இது ஒருமுகமாக ஒரு சாராரின் குறைபாடன்று. அன்று சொந்த மாமன் மகனுக்கு கழுத்து நீட்டிய மணப்பெண்களும் அவர் தம் பெற்றோர்களும் 'சீதனத்திற்கு இவரா? அதுவும் இந்த ஏழை விவசாயியா?' என்ற கேள்வியை தம் முன் வைத்தனர். "கோமணாண்டி வேண்டாம், கோழி மேய்ப்பவனாயிருந்தாலும் கோறணமேந்திலை மேய்ப்பவனாக இருக்க வேண்டும்" என்று அடம்பிடிக்கும் சமுதாயம் மாறியதன் காரணத்தால் எஞ்சினியர், டாக்டர், உபாத்தியாயர், கிளாக்கர் என்ற மனப்பாங்கு இந்த கொடுமைக்கு நீருற்றி வளர்த்தது; வளர்த்துக் கொண்டே வருகிறது. இதனால் பெண்பிள்ளைகளின் பெற்றோர்கள் முதுகில் சுமை ஏறி அமுக்கப் பெற்றார், சேற்றில் புதைத்த பார வண்டியை முழி பிதுங்க முக்கி முக்கி இழுக்கும் எருதுகளைப் போன்று குடும்பப் பாரத்தை இழுக்க மாட்டாது தேம்பித் தவிக்கின்ற பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

**தமிழீழச்சட்டம் தனது பங்களிப்பை முனைப்புடன் செய்ய முன்வர வேண்டும். புற்றுநோய் போன்ற இக் கொடிய நோயைத் தீர்க்க இளம் வயதினரிடையே அதாவது அவர்கள் கல்வி பயிலும் போதனா நிலையங்கள் அனைத்திலும், இக் கொடுமையைத் தாங்க முடியாது தம்மையை அழிக்கும் கன்னியரைக் கருத்தில் கொண்டு, இதன் அநாகரிகம், தாக்கம், இது எவ்வாறு மானுடத்தை வஞ்சிக்கிறது என்பன போன்ற உண்மை வரலாறுகள் போதிக்கப்படல் வேண்டும்.**

கிராமத்து இளம் காளை ஒருவன் வீறுமிக்க காளையைப் போட்டியில் அடக்கி தனது ஆண்மையின் பெருமையைக் காட்டும் போது அவ் வீரனுக்கு மாலையிட்டாள் அன்றைய நங்கை. இன்றைய நங்கையோ அந்தோ பரிதாபம் இல்லத்திலே தன் வருங்கால மைத்துனிக்கு மணாளன் பாவனை கொடுத்து மாலையிட்டு உற்றார் உறவினர் புடைசூழ வீடியோப் படமெடுத்து ஊர்சுற்றி வந்த பின் தாலியுடன் தன்னந் தனியாளாக கிளாலிப் பாதை தாண்டி முன்பின் தெரியாத மணாளனைத் தேடி சுவிசுக்கும், பிரான்சுக்கும்,

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


ஜெர்மெனிக்கும் தனிப்பயணம் மேற்கொள்ளும் பரிதாப நிலை. இங்கு சீதனக் கொடுமை லக்ஷனாவை மட்டும் வஞ்சிக்கவில்லை. பக்கத்து வீட்டு பாமாவையும் அல்லவா சீண்டிவிட்டு நிற்கின்றது. "பக்கத்து வீட்டு லக்ஸ்சனா லண்டனுக்கு போகின்றா திருமணத்துக்கு; எம் மகள் பாமா என்ன அழகில்லையா, சங்கையில்லையா? தராதரம் இல்லையா, கனடா செல்வதற்கு?" என்று விசும்பு பேசி, இருக்கும் நிலபுலன்களை விற்று அயல் நாட்டுக்கு அனுப்பிவிட்டு வாழ்க்கை பூராகவும் கண்ணீர்க் கதைபேசும் பெற்றார் ஒருபுறம். மறுபுறம் சீதனக் கொடுமையின் உச்ச நிலைபாடாக, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒரே நாளில் ஒரே வேளையில் மூன்று அப்பாவிகள் "இறப்புத்தான் எமக்கு விடுதலை அளிக்கும்" எனக் கருதி தம் கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்ட பரிதாபக் காட்சி ஒன்று பஞ்ச சீலர் கண்ட பாரதபூமியில் நடைபெற்றுள்ளது. (ஆதாரம்: சண்டே ரைம்ஸ் மார்ச் 1995) இவற்றுக்கெல்லாம் மூலகாரணம் மஞ்சள் நூலில் போட்ட மூன்று முடிச்சு. பத்துக்கு மேற்பட்ட மாற்றுத் தங்கத்திலான, தங்கவடத்திற்குதான் எம் கழுத்து நீட்டப்படும் என்ற போலிக் கௌரவம். இப்போலிக் கௌரவத்தின் உச்சக்கட்டமாக கடந்த மாதம் பாரிஸ் நகரில் ஈழத்தமிழர் ஒருவரின் சாதனை ஒன்று, "87 கிலோ எடை கொண்ட மாப்பிள்ளை ஒருவர் தனது எடைக்கு சமனான 87 பவுணில் தாலி கட்டிய நிகழ்ச்சி." (ஆதாரம் உதயன் 14-06-1995) இவ்வகையான போலிக்கௌரவத்தின் பலாபலன், தங்க வடத்திற்கும் பெண் வீட்டாரின் கையை எதிர்பார்க்கும் மாப்பிள்ளை வீட்டாரின் பரிதாப நிலை. இது மட்டுமல்ல மாப்பிள்ளையின் பெற்றாரின் பின்வாழ்க்கைக்கு வாழ்க்கைப்படி. அத்துடன் மாப்பிள்ளையின் சகோதரிக்கு நன்கொடை.

இவற்றுக்கெல்லாம் சிகரம் கட்டினால் போன்று தற்போது நடைமுறையில் இருக்கும் கல்விமுறையானது மேலும் சிறுமைத் தன்மையை வளர்ப்பதற்காக பின்வரும் குறுகிய வட்டத்தில் சுழற்சி பெறும் ஒன்றாக உள்ளது. இம் முறைமை பூரணமாக ஒழிக்கப்பட்டு சிறந்த தொழிற்கல்வி முறை புகட்டப்படல் வேண்டும்.

தற்போதைய நடைமுறை ஏடு பின்வருமாறு அமைகின்றது.

உயர்படிப்பு = வசதியான உத்தியோகம்

இலட்சம் சீதனம்

குடும்ப வாழ்க்கை ஆரம்பம்.

மீண்டும் அதே தொடர் பல்லவி

இச்சீரழிவின் பிடியில் இருந்து மானுடம் பிழைக்க வேண்டும். கோரப்பிடியில் இருந்தும் தப்பிப் பிழைப்பதற்காக உலகளாவிய ரீதியில் ஆங்காங்கே அவ்வப்போது படு பயங்கரமான தற்கொலை நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றமையை மேலே கண்டு கொண்டோம். அதே வேளை இதற்கு, எதிரான சோக நிகழ்வுகளும் இடம்பெற்று வரத் தவறவில்லை. உதாரணம்: இந்தியாவில் சீதனம் கேட்கும் மாப்பிள்ளை வீட்டாரின் அக்கிரமத்திற்குச் சவுக்கடி கொடுத்தாள் ஒரு வீரமங்கை. அதாவது பேச்சு முற்றுபெற்று திருமணம் நிகழ உள்ள சில தினங்களுக்கு முன் மீண்டும் சீதனம் கூடுதலாக கோரிய மாப்பிள்ளை வீட்டாருக்கு திருமணத்தினத்தன்று திருமணம் நடைபெறவுள்ள திருமணப் பந்தலின் முன் "சீதனக் கொடுமையால் திருமணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது; சிரமத்திற்கு மன்னிக்கவும்" என்னும் விளம்பரமிட்டு திருமணத்தைத் தடுத்தாள் அந்த நங்கை.

இச் சிறுமைகளுக்கு எதிராக இது மட்டுமல்ல இன்னும் தீவிரமான செயற்பாடுகளை மானிடம் செயற்படுத்த வேண்டும்.

முக்கியமாக "சீதனம் கோரும் ஆடவனை திருமணம் செய்வதில்லை" என்று திடசங்கற்பம் கொண்டு எழுதல் வேண்டும். தன் சொந்தச் சேமிப்பில் தாலிகட்ட இயலாத மணாளனைப் புறந்தள்ள வேண்டும். சட்டமூலம் சீதனம் கொடுப்போரும் வாங்குவோரும், மாப்பிள்ளைச் சந்தையை கிராக்கி கொண்டதாக மாற்றுவதற்கு முன்னோடியாகச் செயல்பட்டு வரும் இடைத்தரகர்களும் ஒருநிலைப்படுத்தப்பட்ட தண்டனைக்கு உட்படுத்தப்படல்வேண்டும். திருமணம் செய்து புதுப்பொலிவுடன் வாழ எத்தனிக்கும் மணப்பெண்ணை மரண வாயிலுக்கு இட்டுச் செல்லும் மரண தூதனாகச் செயற்படும் இச்சிறுமை, சமுதாயத்தில் மூலவேருடன் அறுத்தெறியப்படல் வேண்டும். சட்டத்தால் "குடும்பச் சேமிப்பினை வழங்கல்" எல்லை நிர்ணயிக்கப்படல்வேண்டும்.

இவை யாவற்றுக்கும் மேலாக திருமணம் செய்யப்போகும் ஆணும் பெண்ணும் அந்தஸ்து, போலிக் கௌரவம், வேண்டாத ஆடம்பரங்களில் தம்மை உட்படுத்தாது அமைதியான சிக்கன வாழ்வை அமைக்க, வள்ளுவன் காட்டிய நல்லற வாழ்க்கையை ஏற்று அதன் வழி நடக்க முன்வர வேண்டும். அப்போது இதுவரை எம்மீது ஏறி "கழுதை முதுகில் ஏற்பட்ட சுமை போன்று" மானுடத்தை வருத்திவரும் இச்சமூகச் சுமை விடை பெறுவது திண்ணம். இதேவேளை எதிர்காலப் புதுமணத் தம்பதியரின் தாரக மந்திரமாக,

**"வள்ளுவன் கண்ட நல்லற வாழ்வினை**
**சீதனமில்லாப் புதுமணம் கொண்டு**
**சீரிய உலகினை**
**சிறப்புடன் அமைப்போம்"**

என்பது அமைதல் வேண்டும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# இனியும் துயிலோம்

- வவுனியா திலீபன்

அழும் வாழ்க்கை
தொழும் வாழ்க்கை
எமக்கினி
வேண்டாம்!
கட்டற்ற
சுதந்திரவாழ்க்கையே
வேண்டும்!

எழுவோம்
தேசத்தின் பரப்பெங்கும்
தீயாய்
பரவுவோம்.

எமக்கெதிரே
போடப்படும்
தடைகளை
உடைப்போம்

இது-
எமது மண்
என
சபதமிடுவோம்!

எமதங்கங்கள்
ஆயிரம்
இங்கு வீழ்ந்து போகட்டும்!
ஏன்? ஏன்?
உயிர்த் தளிர்கூட
உதிர்ந்து போகட்டும்

ஆனால்-
இம்மண்ணின்
மனித வாழ்க்கை
மகிமையாய் இருக்கட்டும்!

நாம் புயலுடனும்
தீயுடனும்
வாழுவோம்; ஆனால்-
புனிதமாக
வாழுவோம்.

இந்தத் தேசம்
எமது
கரங்களில் வீழும்
நாள்-
பெருநாள்:
ரத்தத்தின்
அர்த்தத்தைச்
சொல்லும் நாள்!

நம்-
மண்ணில்
பூக்கள்
சிரிக்கும் நாள்!

சூரியன்
எம்மண்ணைச்
சுகமாகச்
சுடும்நாள்!

சலசலத்து
இலைகள்
சங்கீதம்
பாடும் நாள்!

நிரந்தர வெளிச்சம்
வேண்டும்.
இருட்டுக்குள்
உறக்கத்தைக்
கலைப்போம்!

இனியும்
துயிலோம் என
சத்தியம் செய்வோம்!

சத்தியத்தினூடே
சபதம்
எடுப்போம்!

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இந்தளவே தான் நான்

- புதுவை இரத்தினதுரை

இன்றாகவும் நாளையாகவும் இருக்கலாம்.
இல்லையெனில்
இன்னும் சில நாட்களின் பின்னராவது
இது நடக்கும்
அன்று மூச்சைத் துறந்து முடங்கிப் போவேன்.
கட்டிலில் வளர்த்திக் கதறி
சுற்றம் அழும்
தெரிந்த சிலர் கூடியிருந்து
கற்பனைக்குத் தக்கபடி கதைப்பர்
கோயிற் கொலுதுறந்து வந்து
என் சீமாட்டி சூலில் உருவெடுத்த 'சூட்டி'மகள்
துடிப்பாள்
அடைவைப்பின் கடைக்குஞ்சு
அப்பா எனக் கத்தும்
கொள்ளிக்கு நான் வளர்க்கும் பிள்ளை
ஊருருகி ஒழுக அழுதபடி
என் சிதைக்கு தீயிடுவான்
அந்தரித்துப் போவாள் மனைவி
அவள் பாவம்
எந்த நிழலும் இளைப்பாற இருக்காது
அஞ்சாறு நாள் வரைக்கும்
ஆரேனும் பேசுவர்
பின்னர் பெஞ்சாதி வாய் மட்டும் பேசும்
அதுவும் கொஞ்ச நாள் வரையும் தான்
அதன்பிறகு
என்ன நடக்கும்
எதுவும் நடக்காது
கால மழையிற் கரைந்து
என் நாமம் அழிந்து
மெல்ல, மெல்ல இல்லாது போவேன்
மாரி வரும்
பொன்னாவரசும், என்வீட்டுப் பூவரசும்
பூத்துப் பூச்சொரியும்
கோடைவரும்
எல்லாம் ஆடையிழந்து அலங்கோலமாகும்.
முதிர்ந்தவை உதிரும்
புதிய தளிர்கள் பிறந்து பேசும், சிரிக்கும்
என்னையெவரும் நினைவிருத்த மாட்டார்கள்
வந்ததுக்கும்
இருந்ததுக்கும்
போனதுக்கும் கூட
எந்தச் சுவடுமின்றி 'இவன் வாழ்வு' முடியும்
எனக்குத் தெரியும்
இந்தளவே தான் நான்.



# சூரிய நமஸ்காரம்

- சு. வி.

ஒளிக்குருதி வீச்சோடு எழுகின்ற
சூரியனே பார்
இரத்தப் பிடிப்பின்றிச் சோகையுற்றோம்
உன் குருதியை எமக்குள் பாய்ச்சு.

குந்தியீன்ற புத்திரனைப் போல்
எம்மைத் தள்ளி விடாதே
சொல்
பேர் சொல்லியழைக்கவும்
பிள்ளைகளற்றுப் போவாளா எம் தாய்?

தன் உதிரக் கனிகளின்
ஊர் கொள்ளா விளைச்சல்
வீடுவந்து சேர்கவென
ஓயாது புலம்புகிறாள்.
கூவிக் கூவிப் பரவெளியெங்கும்
அலையும் அவள் குரல்
உனது கதிர்களில் ஊடறுத்து
அதிரவில்லையா?

ஒளிக்கனி நாடி உன்னிடத்தே
சிறகடித்த பறவைகளின் சங்கீதத்தை
எரிந்த சாம்பரினின்றும் மீட்டுத்தா
இருள் படிந்த புதைவுகளினின்றும்
புதிய குருதிப்பொலிவோடு
இவள் பிள்ளைகளை எழுப்பித் தா!

வீர்யரின் பூமியாக இது விளங்கட்டும்
சோகையுற்ற வாழ்நிலத்திலும்
சுதந்திரம் வரண்ட தேசத்திலும்
வலம் வருதல் உனக்கு வெட்கமாயிருந்தால்
ஒளிநிறை வாழ்வின்
உன்னதத்தை எமக்குத் தா!

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அறிவு சமிக்கட்டும்

முருகையன்

"அறிஞரின் இதய ஓடை ஆழ நீர் தன்னை மொண்டு" தருவது" பத்திரிகைகளின் பணிகளுக் குள்ளே தலையாயது என்று பாவேந் தர் பாரதிதாசன் தமது பாட்டொன் றில் உணர்த்தியுள்ளார். அறிஞர்க ளுக்கு மட்டுமல்ல; அனைத்து மக்க ளுக்குமே 'இதய ஓடை' உண்டு. இதய ஓடை என்பது தான் என்ன?

'உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம் எண்பது கோடி நினைந்து எண்ணுவான்' என்பது பழம்பாட் டொன்றின் பகுதி. மனிதர் யாவரின் உள்ளந்தோறும் எண்ணங்களும் எழுச்சிகளும் உணர்வுகளும் இடை யறாது ஓடிக்கொண்டிருக்கின்றன. இடைவிடாத திரைப்படமொன்று நமக்குள்ளே நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. விழிப்பு நிலையில் இந் தத் திரைப்படம் தெளிவாய்த் தெரி கிறது; கனவு நிலையிலே படம் மங்கலாகின்றது; ஆழ்ந்த உறக்கத்தில், படத்தின் 'இடைவேளை' விடப்படு கிறது.

இந்த மனத்திரைப் படம் வெறும் ஊமைப்படமல்ல, வசனங்களும் பாட்டுக்களும் கூட இதில் உண்டு. இந்த மனத்திரைப்பட ஓட்டத்தை நாம் 'இதய ஓடை' என்று சொல்ல லாம். அதை 'நனவோடை' என்று குறிப்பிடுவது மேலும் பொருத்தமா கும். நனவோடையில் வரும் வசனங் களும் பாட்டுக்களும் பெரும்பாலும் ஒலிக்கப்படாமல் உள்ளடங்கி மவு னமாய் உள்ளன. அவை பேசாத பேச்சுக்கள்; பாடாத பாட்டுக்கள்; அவைதான் நனவோடையின் மொழி சார்ந்த கூறுகள்.

(2)

நனவோடையின் மொழி சார்ந்த கூறுகளிற் பெரும்பகுதி, ஒருவரின் தாய் மொழியில் அமைவது தான் வழமையாகும். ஒருவரின் பிறப்புத் தொடக்கம் வளர்ச்சிக்காலத்தின் ஊடாக, வாழ்க்கைக் காலமெல்லாம் மிக நெருக்கமாகப் பழகிப் பயிலப் படும் மொழியினையே நாம் தாய் மொழி என்கிறோம்.

நாம் தமிழர்; நமது தாய் மொழி தமிழ். தமிழர்களின் நனவோடை யில் மிகப்பெரும் பகுதி தமிழில் அமைகிறது. தமிழறிஞர்களின் நன வோடையும் அவ்வாறமைவதுதான் இயல்பாகும்.

ஆனால், இன்று நம்மிடையே வாழும் தமிழறிஞர் எனப்படுவோ ரில் மிகச் சிலர் பன்மொழிப் புலமையாளராய் உள்ளனர். வேறும் பலர் தமிழுடன் ஆங்கிலத்தையே னும் பயன்படுத்தும் இருமொழியா ளராய் உள்ளனர். இவர்களின் பேச் சும் எழுத்தும் சில வேளைகளில் தமிழாயும் சிலவேளைகளில் ஆங்கி லமாயும் அமையும். சிலவேளைக ளில் இரண்டும் கலந்தும் அமையும். அவ்வாறே இவர்களின் நனவோடை யும் சில வேளைகளிலே தமிழ் மயமாகவும், சிலவேளைகளில் ஆங் கில மயமாயும் சிலவேளைகளிலே இரண்டும் கலந்து அமையும்.

என்றாலும், ஒருவரது தாய்மொழி நனவோடையே அவருக்கு மிக நெருக்கமானதாக, அந்தரங்க உறவு பூண்ட ஒன்றாக, இருக்கிறது. இது ஒருவரது பண்பாட்டுத் திளைப்பின் 'உயிரியற்கை' என்று கூறலாம்.

எனவே, சிந்தனையாளரோ, அறி ஞரோ, கலைஞரோ, எழுத்தாளரோ எவராயிருந்தாலும் தமது மொழி யைப் பேசும் அல்லது பயன்படுத் தும் மக்களுடன் தாய்மொழியில் பேசுவதும் எழுதுவதும்தான் இயல் பாகும்; அதுவே நயமும் பயனும் தரும்; அதுவே விளைதிறன் மிக்க செயலாயும் இருக்கும்.

இதேவேளை, இன்றைய சூழ் நிலையில், எங்கள் 'தமிழறிஞரிற்' சிலர் தமிழை விட ஆங்கிலத்தில் அதிகம் பேசுவோராயும், எழுதுவோ ராயும், படிப்போராயும் இருப்ப தனை நாம் காணுகிறோம். இத னால், இவர்களின் இதய ஓடை அல்லது நனவோடை ஆங்கிலமய மாக மாறிப்போய் விட்டது என்றும் கருத இடமுண்டு. இவர்களில் சிலர் தம் ஆங்கிலப் புலமைக்கு அதிக முக்கியத்துவம் தருவதனால், தமிழ் மொழி மூலம் சிந்திக்கும் பழக் கத்தை குறைத்துக்கொண்டு விட்ட னரோ என்று கருதவும் இடமுண்டு. அப்படிப்பட்டவர்கள் ஆங்கிலத்தில் (அல்லது பிறமொழியில்) சிந்தித்து தமிழில் எழுதியும் பேசியும் வருகின் றனர்.

இவ்வாறு செய்வது சில சிக்கல் களுக்கும், சிரமங்களுக்கும் காலா கின்றது. அந்தச் சிக்கல்களையும் சிரமங்களையும் விரிவாக எடுத்து நோக்குவது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல.

மாறாக, தமிழ் எழுத்துலகிலே பிறமொழிகளின் வாயிலாக புதுமை யான புற உலகத்துக் கருத்துக்க ளைப் பெற்றுக்கொண்டு தமிழில் அவற்றைத் திறம்பட விளக்கிப் பயன்செய்த முன்னோடிகள் சிலரை சற்றே நினைவுகூருவோம்.

(3)

இந்த நூற்றாண்டின் தொடக்கத் திலிருந்து ஐம்பதுகளின் ஊடாக தொண்ணூறுகளுக்கு நாம் வரும் வழியிலே, பிறநாட்டு நல்லறிஞர் சிந் தனைகளைக் கற்றறிந்த தமிழறிஞர் பலரை நாம் சந்திக்கின்றோம். இவர் களில் பலர், பரந்துபட்ட மக்களின் பால் பரிவும் அக்கறையும் பூண்டு உழைத்தமையையும் நாம் காண்கி றோம். தமது அறிவையும் கருத் துக்களையும் கோட்பாடுகளையும் தம்மைச் சூழ உள்ள மக்களிடை யில் பரப்பும் வேட்கை அவர்களி டம் காணப்பட்டது. இவ்வாறு பரப்ப முற்பட்டபொழுது, இரண்டு விதமான பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியவராய் அவர்கள் இருந்தனர்.

ஒன்று மொழி மாற்றம். ஆங்கி லம் வாயிலாக இவர்கள் கற்றுக் கொண்ட கருத்துக்கள், எண்ணக் கருக்கள், சிந்தனைகள் தமிழ் மொழிக் குப் புதியவை. எனவே அவற்றுக்கு ஈடான சொற்களையும் சொல் வழக்குகளையும் அவர்கள் படைத் துக்கொள்ள வேண்டியோராயினர். அந்த சொல் வழக்குகள் புதியன ஆகையால் அவற்றை விளங்கப் படுத்த வேண்டிய பொறுப்பும் அவர்களையே பெரிதும் சார்ந்தது.

அடுத்த சிக்கல், விடயங்களை எளிமைப்படுத்திக் கொடுத்தல் பற்றி யது. புதிய விடயங்களை இலகு வாய் விளங்க வைக்கும் துணைக் குறிப்புக்களும், உதாரண விளக்கங் களும், உவமைகளும் கூட அவசிய மாயின. கல்வி அறிவு குறைந்தவர்க ளுக்கு ஏற்ற விதத்திலே சிற்சில பகுதிகளை விரித்துரைப்பதும் தேவை யாயிற்று. சில தருணங்களிலே, படிப் போரும் கேட்போரும் ஏற்றுக்கொள் ளக்கூடிய வண்ணம் அடிப்படைக்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


கோட்பாடுகளிலிருந்து எண்ணங்களை வளர்த்தெடுத்துக் கொடுக்க வேண்டிய தேவையும் இருந்தது. ஒரு வகையில் இவ்வாறான மொழிமாற்றம், கணிசமான படைப்பாற்றலையும் வேண்டிநிற்கும் ஒரு பணியாயிற்று. இத்தகைய மொழி மாற்றத்தை 'மறுபடைப்பு' என்று நாம் கூறலாம். இப்படிப்பட்ட 'மறுபடைப்பு' நடைபெறவில்லை என்றால், எந்தவொரு பேச்சும் எழுத்தும் எந்தவிதமான கருத்தையும் பயவாமல், வீணாய் ஒழியும்.

ஆங்கில மொழி, வெளி உலகுடன் தொடர்பினை உண்டாக்கும் 'மூன்றாவது கண்' என்று விதந்து பேசுவது நம்மவரின் வழக்கமாகும். ஆனால் அந்தக் கண் தரும் பார்வை செப்பமாக இருக்கவேண்டுமானால், மக்கள் வழங்கும் மொழியிலும் நமது கருத்துலகத் தலைவர்களுக்கு சிறந்த புலமையும் ஆற்றலும் இருத்தல் வேண்டும். இந்தவிதமான திறமை உடைய எழுத்தாளர்களுக்கும் பேச்சாளர்களுக்கும் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குவோர், திரு. வி. கவும், இராஜாஜியும் எனலாம். திரு. வி. க எனப்பட்ட திருவாரூர் வி. கல்யாணசுந்தர முதலியார், பழந்தமிழ் புலமை வாய்ந்த தொல்லறிஞர்; ஈழத்தவரான மேலைப் புலோலி நா. கதிரவேற்பிள்ளையின் நன்மாணக்கர்; அடிப்படையில் இவர் இலக்கண நெறிப்பட்டு அரும் சொற்கள் விரவிய செந்தமிழிலேயே எழுதியும் பேசியும் வந்த புலமையாளர். ஆயினும் அவர் இந்திய நாட்டு விடுதலை இயக்கத்திலும் தொழிற்சங்க வேலைகளிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ளத் தொடங்கிய பின்னர், பரந்துபட்ட மக்களைச் சென்றடையத்தக்க மொழித்திறனை மிக விரைவிலே ஈட்டிக் கொண்டார். அவர் மேற்கொண்ட பணிகள் மக்கள் மன்றத்துடன் இறுகப் பிணைந்திருந்தமையால், இவ்வாறான எளிமையும் தெளிவும் அவருக்கு இலகுவில் கைகூடிற்று. மக்களுடன் நேரில் உரையாடும் திறன் படைத்த செந்தமிழ் வகையொன்றை உருவாக்குவதில் வெற்றிகண்டார்.

சக்கரவர்த்தி இராஜகோபாலச் சாரியார், சத்தியமூர்த்தி முதலியோரும் இதே வழியிலே தமது கருத்துக்களையும் மொழி நடைகளையும் மக்களுக்கு ஏற்றவிதத்திலே பதப்படுத்திக் காட்டினர். இதனால் தமிழ் மொழி புதுவிதமான நலன்களையும் வளங்களையும் ஈட்டிக்கொண்டது.

ஒருகாலத்தில் புராண இதிகாசங்களையும் காப்பியங்களையும் சமய சாஸ்திரங்களையும் தோத்திரங்களையும் அநாயாசமாகக் கையாளும் ஆற்றலைப் பெற்றிருந்த தமிழ்மொழி, இப்பொழுது நாட்டு விடுதலை, தொழிற்சங்க முயற்சிகள் உட்பட 'பண்பாட்டு அரசியலின்' பல்வேறு புலங்களையும், துறைகளையும் தழுவி நிற்கும் துடிப்பும் துணிவும் பெற்று விரிவடைந்து 'கல்கி' முதலான சனரஞ்சக எழுத்தாளர்கள் தோற்றம் பெற்றனர். மொழிபெயர்ப்புப் பணியில் மும்மரமாக ஈடுபட்ட வே. சாமிநாத சர்மாவின் எழுத்துக்கள், ஐரோப்பிய அறிஞர்களின் நவீன சிந்தனைகளை தமிழாக்கம் செய்து வழங்கின. இவ்வாறான முயற்சிகள் தமிழ் மொழிக்கு புதிய வலுவும் வளமும் சேர்த்தன. புதுப் புது மொழி வளக்காறுகளும் தோன்றி நிலைபெறலாயின. ம. ப. பெரியசாமித் தூரன், தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் என்போரின் பெருமுயற்சியினால், முதலாவது கலைக்களஞ்சியம் தமிழில் உருவாயிற்று. இந்தப் பணிகள் எல்லாம், தமிழ் மொழியின் நுட்பத்திறனையும் பயன்பாட்டையும் விரிவு செய்தன. உயர்கல்வி நிறுவனங்களிலும், பல்கலைக்கழகங்களிலும் புறக்கணிக்கப்பட்டதொரு காலத்திலே, தமிழ் மொழி வீறும் விளைதிறனும் பெறுவதற்கு இந்த முன்னோடிகள் பெரிதும் உதவினர்.

**நனவோடையின் மொழி சார்ந்த கூறுகளிற் பெரும்பகுதி, ஒருவரின் தாய் மொழியில் அமைவது தான் வழமையாகும். ஒருவரின் பிறப்புத் தொடக்கம் வளர்ச்சிக் காலத்தின் ஊடாக, வாழ்க்கைக் காலமெல்லாம் மிக நெருக்கமாகப் பழகிப் பயிலப் படும் மொழியினையே நாம் தாய் மொழி என்கிறோம்**

இங்கு நாம் இதுவரை பார்த்தது, சமூக - அரசியல் தேவைகளின் அடியாக எழுந்த மக்கள் மயப்பட்ட சில முயற்சிகளையே. இவை முறைநெறிப்பட்டவை அல்ல எனலாம். கலை இலக்கிய உலகில் ஈடுபாடு கொண்ட கற்றறிவாளர்களோ, தமது மொழித்திறனைக் கூர்மைப்படுத்தும் முயற்சியிலே பின்தங்கி நின்றார்கள் என்பது வேடியாக்கையானதோர் உண்மையாகும். இலக்கியத் திறனாய்வாளர்கள் முற்போக்கான சில அலுவல்களைச் செய்திருக்கலாம். ஆனால், அவர்களிடையே அசமந்தமும் தயக்கமும் அலட்சியமுமே காணப்பட்டன. சி. சு. செல்லப்பா நடத்திய 'எழுத்து' இலக்கிய விமரிசனத்துக்கு என்றே அர்ப்பணிக்கப்பட்டது. ஆனால் அதில் எழுதியவர்கள் ஆங்கில சொல் வழக்கின் மேலாதிக்கத்திலிருந்து விடுபட முடியாதவர்களாய் ஒரு வகையான கலப்புத் தமிழைக் கையாண்டனர். தமிழ்ப்படுத்திய கூற்றுக்களிலும் கடுமையான சொற்பஞ்சம் தாண்டவமாடிற்று. 'எழுத்து' வட்டத்தினரிடம் ஆர்வம் நிறைந்திருந்த அளவிற்கு ஆற்றல் இருக்கவில்லை. தம் கருத்துக்களை சரிசுத்தமாக சொல்லமுடியாமல் அவர்கள் திண்டாடினார்கள். அவர்கள் தாம் எழுதியவற்றை தாம் மாத்திரமே படிக்குமளவிற்கு குறுகிய தொரு வட்டத்தினுள் அடங்கி அமைந்தனர் என்று சொன்னால் அதில் அதிகம் பிழையிருக்காது.

இந்த நிலைமைக்குப் புறநடையாகவும் சிலர் இருந்தனர் என்பது உண்மையே. இவர்களுள் சி. கனக சபாபதி விதந்து குறிப்பிடத்தக்கவர். இவர் போன்று பண்டைத் தமிழ் பரிச்சயமும் பெற்ற சில திறனாய்வாளர்கள், தமிழின் சொல்வளத்தைப் பெருக்கி, அந்தப் புதிய வழக்குகளை புழக்கத்திற்குக் கொண்டுவர உதவினர். இதனால், பல்வேறு நுண்மைத் தரங்களினூடே சரளமாக ஊடாடும் வலு தமிழ் மொழிக்குக் கிட்டிற்று. படிமம், நடப்பியல், புனைவியல் போன்ற பதங்கள் பல இந்தக் காலகட்டத்திலேதான் அறிமுகமாயின என்பது மனம் கொள்ளத்தக்கது.

பல்கலைக்கழக ஆசிரியர்களும் பேராசிரியர்களும் கூட மேற்சொன்னவாறான புதுமை ஆக்கங்கள் சிலவற்றை மேற்கொண்டனர். பல்வேறு கற்கை நெறிகளையும் தமிழ் வாயிலாக நடத்தவேண்டிய தேவை இந்த முயற்சிக்கு ஊக்கம் தந்தது. ஆரம்ப காலகட்டங்களில், இந்தியத் தமிழர்களை விட ஈழத்தவர்களாகிய நாம் இந்த அலுவலில் முன்னோடியாக இருந்தோம் என்று சொல்லவேண்டும். இந்தியர்களை விட முன்கூட்டியே நாம் தமிழ் மூலம் உயர்கல்வி ஊட்டத் தொடங்கியபடியால் ஈழத்தவராகிய நாம் வழங்கிய மொழி, சில விதங்களிலே, விடயங்களின் அடியாழம் வரை நுழைந்து செல்லும் ஆற்றல் பெற்றதாக விளங்கிற்று எனலாம். இங்கு தனித்த மரபுவழிப்பட்ட தமிழ் வாயிலாக கிடைக்கக்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# குடும்ப ஆலோசனைச் சபை

**எமது தேசியத் தலைவர் 22-10-1994-இல் 'குடும்ப ஆலோசனைச்சபை'யை உருவாக்கி, குடும்ப ஆலோசகர் மூலம் பிரியும் குடும்பங்களை ஒன்று சேர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்ட தமிழீழ நீதிமன்றுகள் ஒவ்வொன்றிலும் குடும்ப ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு கடமை புரிந்து வருகிறார்கள்.**

சமுதாய வளர்ச்சியிலே காலம் காலமாக பெண் அடிமைத் தனத்தை ஆண்வர்க்கம் நிலைநிறுத்த முயற்சித்து அதில் இப்பொழுதும் வெற்றி கண்டுள்ளது. ஆனால் மனித சமூக வளர்ச்சியில் பெண் ஆதிக்கம் இருந்த காலமும் உண்டு. தேன் கூட்டில் ராணி வண்டு எவ்வித ஆதிக்கத்தை செலுத்தியது என்பதை வைத்துக் கொண்டு, கால்மாக்சுடன் சேர்ந்து உலகத்தில் பொதுவுடமை இயக்கத்திற்கு வித்திட்ட 'பிறடேறிக் ஏங்ஞால்ஸ்' தாய்க்குல ஆதிக்கத்தைப் பற்றி பல ஆராய்வுரைகளைப் பிரசுரித்திருந்தார்.

இவ்வாறு ஒரு காலத்தில் தாய்க் குலம் ஆட்சி அதிகாரத்தில் இருந்த போதும் படிப்படியாக ஆரியவாதம் முனைப்பு எடுத்து, பின்னர் தாய்க் குலத்தின் ஆதிக்கத்தை ஒடுக்கி, அவர்களை ஓர் அழகுப் பொருளாகவும், குழந்தைகளை உற்பத்தியாக்கும் இயந்திரங்களாகவும் மட்டம் தட்டியது. அந்த நிலையில் தான் இழிவான சீதனக் கொடுப்பனவு வழக்கமும் ஏற்பட்டது. இந்தச் சீதனத்தின் அடிப்படையில் நடந்த விவாகங்களும் பொதுவாகத் திருமணப் பிணக்குகளை உருவாக்குகின்றன. காதல், அன்பு என்ற அம்சங்களுக்கு இடங்கொடுக்காது அந்தஸ்து, பணம் போன்றவற்றுக்கு முதல் இடங்கொடுக்கப்பட்டு பெண் விற்பனைப் பொருளாக மாற்றப்பட்டாள்.

இன்றைய சமுதாயத்தின் மேற்படி விடயங்கள் பல திருமணப் பிணக்குகளுக்கு காரணங்களாக இருந்தாலும், காதல் திருமணங்கள் கூட அவசரமாகத் தீர்க்கயோசனையுடன் செய்யாது, சிற்றின்ப வேட்கைக்கு மாத்திரம் இடமளித்து நடைபெறுவதால் அவையும் திருமணப் பிணக்குகளை உருவாக்குவதற்குக் காரணிகளாக இருக்கின்றன.

இந்த வேளையில் அதுவும் இப் போராட்ட சூழ்நிலையில் பல திருமணங்கள் அவசரஅவசரமாக நடைபெறுகின்றன. அதே நேரத்தில் பேசிச்செய்த திருமணங்களில் கூட பொருளாதாரத் தேவைகளுக்காக கணவன் அல்லது மனைவி வெளி நாடுகளுக்குத் தொழில் தேடிச் செல்லவேண்டியுள்ளது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தொழிலுக்காகப் பெண்கள் வெளிநாடு செல்வது குறைவு. வெளிநாடு செல்லும் கணவன் தான் சென்ற நாட்டில் உள்ள வசதிகளைப் பாவித்து, தன் சுயநல தேவைகளைப் பூர்த்தி செய்து, தனது சொந்த மனைவிக்குப் பணம் செலுத்தாது அவளை அநாதரவாக்கி விடுகின்றான்.

இப்படியான நிலைகளில் நீதி மன்றுக்கு திருமண விடயங்கள், குடும்ப விடயங்கள் சம்பந்தமான வழக்குகள் வந்து குவிகின்றன. திருமண விடயங்கள், குடும்ப விடயங்கள் ஏனைய குற்றவியல், குடியியல் வழக்குகள் போன்றல்லாது, மன உணர்ச்சிகளின் அடிப்படையில் ஏற்படுகின்றன. ஆகவே நீதிமன்றுகள் இவற்றை ஏனைய வழக்குகள் போல் ஓர் அளவுகோலின் அடிப் படையில் தீர்த்துவைக்க முடியாது. இங்கே தான் குடும்ப ஆலோசகர்களின் தேவையும், அவசியமும் ஏற்படுகின்றது.

குடும்ப ஆலோசகர்கள், தமிழீழ

---

கூடிய ஆற்றலை விட அதிக ஆற்றலை பிறமொழிகளின் சந்திப்பினாலே தமிழ் பெற்றுக்கொண்டது. இந்தச் சாத்தியப்பாடு முன்னர் இருக்கவில்லை என்பதல்ல, இதன் கருத்து. புதுதாகக் கண்டறியப்பட்ட சாத்தியப்பாட்டை நன்கு பயன்படுத்தக் கருதிய புதுவேட்கையும் ஊக்க எழுச்சியும்தான் மேற் சொன்ன ஆற்றல் வளர்ச்சிக்கு ஏதுவாயின.

ஆனால் இலங்கைக் கல்விமான்கள் சிலரிடையே மொழிபெயர்ப்பின் பெறுமதி பற்றி தவறான சில நம்பிக்கைகள் உருவாயின. மொழிபெயர்ப்புக்களைப் படிப்பதனால் மூலமொழி பாடமொன்றின் தேவை முற்றாகவே அற்றுப்போகிறது என்று நம்மில் பலர் நம்புகின்றோம். மூல பாடங்களை மொழிபெயர்ப்புக்களால் பதிலிட்டு விடமுடியாது. மூலத்தின் சிறியதொரு பகுதியே மொழிபெயர்ப்பில் வெளிக்கொணரப்படும். இந்தப் பகுதியின் அளவுகள் மூல பாடத்தின் தன்மைகளுக்கு ஏற்ப வேறுபடும். விஞ்ஞானம், தொழில்நுட்பம், கணிதம் சார்ந்த விடயங்கள் மொழிபெயர்ப்புக்கு நன்கு இடங்கொடுக்கும்; ஆனால், ஆக்க இலக்கியங்களின் பக்கமாக நாம் நகர்ந்து போகப் போக, மொழிபெயர்ப்பின் போது இழக்கப்படாது எஞ்சும் பங்கு குறைந்து குறைந்து செல்கிறது. உண்மையில், கவிதையின் இன்றியமையாப் பண்புகளில் ஒன்று அது மொழிபெயர்க்கப்பட முடியாததாய் இருப்பதுதான் என்று 'இலூஷன் அன்ட் றியாலிற்றி' எனும் நூல் அடித்துக் கூறுகிறது. இது மிகவும் கடுமுனைப்பான கூற்று என்று சிலர் கருதலாம். ஆனால், சில மொழிபெயர்ப்புக்களை மாத்திரம் படித்த அளவில், உலக இலக்கியம் நமது உள்ளங்கைகளில் அடக்கம் என்று நம்மில் பலர் எண்ணிக்கொள்கின்றோம். இது எவ்வளவு அறியாமை.

சில இலக்கியப் படைப்புக்கள் மொழிபெயர்ப்புக்கு ஓரளவு திருப்திகரமாக இடம்தரும் என்பது உண்மையே. அவை உடனயற் சூழலில் அதிகம் அழுந்தி நில்லாமலும் மொழிமரபு விசித்திரங்களில் அதிகம் தோயாமலும் உள்ள படைப்புக்களாகும்.

(4)

படைப்பிலக்கியம் பற்றிய பரிசீலனையை சற்றே நிறுத்திவிட்டு பொருள்விளக்கப் போக்குடைய சொல்லாடல் பற்றி ஒருகணம் சிந்திப்போம். முன்னணிச் சிந்தனையாளர்களின் கருத்துக்கள் பெரும்பாலும் புதுமையான சொற்களிலும் சொல் வழக்குகளிலும் பொதிந்தவையாய் இருக்கும். சிலவேளைகளில் அந்தச் சொற்கள் கூட அந்தத் தருணத்திற்கென்றே படைக்கப்பட்டவையாகவும் இருக்கும். இந்த நுண் சொற்களுக்கு ஏற்ற தோதான சொற்களை நமது மொழியிலே ஆக்கி அவற்றிற்கு விளக்கம் தந்தாலொழிய, எழுந்தமானமாக அல்லது

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


நீதிமன்றுக்களில் தாக்கல் செய்யப்படும் திருமண நீக்கல் வழக்குகள், பராமரிப்பு வழக்குகள், பிள்ளைகளின் பாதுகாப்பு பாரமரிப்புத் தொடர்பான வழக்குகளில் உள்ள பிணக்குகளை, வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படமுன் சமரசமாகவும், சுமுகமாகவும் தீர்த்து வைப்பதற்குத் தம்மாலான முயற்சிகளை எடுப்பர். குடும்ப ஆலோசகர்கள் கணவன், மனைவி, பிள்ளைகள் ஆகியோரைத் தனித்தனியாகவும், ஒருமித்தும் எவ்வித கட்டுப்பாடுமின்றி, தங்களது கருத்துக்களையும், உணர்வுகளையும் மனம் திறந்து வெளிப்படுத்துவதற்கு வசதிகளை உருவாக்குவார்கள். இதைவிட சம்பந்தப்பட்ட குடும்பங்களோடு பிணக்கின் தொடர்புடைய உறவினர்கள், அயலவர்கள் போன்றோரையும் விசாரணை செய்து அவர்களால் ஏற்படும் இடையூறுகளைத் தவிர்க்கும் மாற்றங்களை ஆராய்ந்து பிரிந்த குடும்பங்கள் ஒற்றுமையாவதற்குத் தங்களால் ஆன முயற்சிகளைச் செய்வர். பிணக்குகள், தாம் முயன்றும் தீர்க்கப்படாவிடின், வழக்குகளை மீள நீதிமன்றுக்கு அனுப்பப்படும். அதன் பின் நீதியாளர், ஏனைய வழக்குகள் விளங்குவதுபோல் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையிலும் விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்குவார்.

இந்த விடயத்தில் குடும்ப ஆலோசகர்கள் தாம்பத்திய உறவினால் பிறந்த குழந்தைகளின் நலனையே முக்கியமாகக் கருத்தில் எடுத்து, அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்குப் பங்கம் விளைவிக்காத வண்ணம் தமது ஆலோசனைகளை வழங்கித் தீர்மானங்களை எடுப்பார்கள். இதன் பின்னர் பிள்ளைகளின் பூரணமான உடல் உள வளர்ச்சிக்குப் பெற்றோரின் ஒன்றிணைப்பின் முக்கியத்துவம் ஆலோசகர்களால் அவர்களுக்கு உணர்த்தப்படுகின்றது. அத்துடன் தாய், தந்தையர் ஒவ்வொருவருடனும் பற்றுப் பாசமாகப் பழகுகின்றபோது அச்செயலானது பிள்ளைகளின் மனதில் உற்சாகத்தையும், மனஉறுதியையும், மகிழ்ச்சியையும் கொடுக்கின்றது.

தாய், தந்தையரின் அன்புப் பிணைப்பில் உருவானவர்களே பிள்ளைகள். 'பிள்ளைகள் நாங்கள் பெற்ற செல்வங்கள்' என்ற உணர்வு பெற்றோரிடத்தில் மேலோங்குமானால் அவர்களிடையே உள்ள கோபதாபங்கள் மறைந்து, குடும்ப ஐக்கியம் தானாகவே மலரும். பெற்றோரின் பிரிவினைக்கிடையில் சிக்கித் தவிக்கும் குழந்தைகள், தங்கள் சகபாடிகள் பெற்றோருடன் இணைந்து ஆலயங்களுக்கும், வைபவங்களுக்கும், விழாக்களுக்கும் செல்வதை அவதானிக்கும்போது, அவர்களின் மனதில் எழும் ஏக்கத்தை யாராலும் மதிப்பிட முடியாது. எனவே கணவன், மனைவியை ஒற்றுமையாக்கும் விடயத்தில் பிள்ளைகளின் எதிர்கால முன்னேற்றம் மிக இறுக்கமாக வலியுறுத்தப்படுகின்றது.

இவ்வாறே ஏனைய காரணங்களையும் ஆராய்ந்து, தனித்தனியே அவர்களுடன் கலந்துரையாடி, அவர்களின் மனச்சுமையை இறக்க, அவர்களை ஒரு தெளிவான நிலைக்கு இட்டுச் செல்வது குடும்ப ஆலோசகரது முதற்பணியாகின்றது. பின்னர் அவர்களுடைய ஆரம்ப கால நினைவுகள், செயல்கள் மூலம் அவர்களைப் பழைய நிலைக்குக் கொண்டுவர முயற்சிக்கின்றார். இறுதியில் குடும்பத்தின் எதிர்கால ஒற்றுமைக்குக் குடும்ப ஆலோசகரே பொறுப்பாக நிற்பதால் குடும்பங்கள் ஒற்றுமையை நாடிச் செல்கின்றன. இவ்வாறே பிரிந்துள்ள குடும்பங்கள் எல்லாவற்றையும் குடும்ப ஆலோசகர்களால் ஒற்றுமையாக்க முடியாவிட்டாலும் கூட ஒன்றிணைந்து செல்லும் குடும்பங்களுக்கு 'குடும்ப ஆலோசனைச் சபை' ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளதை யாரும் மறுக்கமுடியாது. இச் சபை ஆரம்பமான பின் ஒற்றுமையாக்கப்பட்ட குடும்பங்கள் எப்போதும் எங்கள் தேசியத் தலைவருக்கு நன்றி உடையவையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

---

கண்டபாட்டிலே செய்யப்படும் மொழிபெயர்ப்புக்கள் பொருளற்று வெறிதே ஒழியும். இப்படித்தான் நம் அறிஞர் பெருமக்கள் சிலர் அள்ளி வீசும் எதேச்சையான சொற்சேர்க்கைகளும் செயற்கையான திடீர் மொழிவுகளும் இருக்கின்றன. இந்த திடீர் மொழிவுகளில் ஈடுபடுவோர் அவற்றின் பொருத்தப்பாடு பற்றியோ பொருள் பயக்கும் தன்மை பற்றியோ அதிகம் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

எண்ணக் கருக்களைக் கற்றுக் கொள்வதற்கு தூலமான மாதிரி உருக்களும் 'இது இத்தகையது' என்றும் 'இது இத்தகையது அல்ல' என்றும் தெளிவாக்கும் எடுத்துக்காட்டுகளும் அவசியம் என்பார். இதனையிட்டு கவனம் செலுத்துவோர் மிகவும் குறைவு.

இவ்வகையான உதாசீனப் போக்கு எங்கு போய் முடிகிறது? ஆவி மயமான ஆசாட்டமான வெறுமைகளையும் குழாம்பல்களையும் நுண்ணிய கருத்துக்கள் என எண்ணி மயங்கும் நிலைக்கு நாம் தள்ளப் படுகின்றோம். இந்த ஆசாட்டங்கள் உள்ளீடான பெறுமதி வாய்ந்தவை என்றும் புனிதமானவை என்றும் கூட பயபக்தியுடன் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

இங்கு அறிஞர் எனப்படுவோர் சிலர் தாமும் குழம்பிப் பிறரையும் குழப்புகின்றனர்; தாமும் மிரண்டு பிறரையும் மிரட்டுகின்றனர்.

(5)

பாக்குநீரிணைக்கு அப்புறத்திலும் இப்புறத்திலும் இந்தப் பரிதாப நிலையினை நாம் அடிக்கடி சந்திக்கின்றோம். நமக்கு இப்பொழுது வேண்டியது சமிபாடு. அறிவுத் தலைமை பூண்டோரின் சிந்தனை ஊட்டங்கள் நன்கு சமிபாடடைய வேண்டும். நம்மை நோக்கி பேசவருகிறவர்கள் தாம் என்ன பேசுகிறோம் என்பதைத் தெளிவாகத் தெளிந்துகொள்ளட்டும். நமக்காக எழுதுவதற்குப் பேனையை எடுப்பவர்கள் என்ன எழுதப்போகிறோம் என்பதைத் திட்டவட்டமாகத் தெளிந்துகொள்ளட்டும். தெரிந்து தெளிந்துகொண்டு பேசத்தொடங்கட்டும்; எழுதத்தொடங்கட்டும்.

"உணவினும் உண்ட(து) அறல் இனிது" என்றார் வள்ளுவர். வயிற்றுச் சாப்பாட்டுக்கு மட்டும் செல்லுபடியாவதில்லை அந்தக் கூற்று. சிந்தனைக்கு உணவாக ஊட்டப்படும் கருத்துகளும் கூட நன்கு சமிபாடைய வேண்டும். அறிவுச் சமிபாடு உடல் நலத்திற்கு இன்றியமையாதது. அதுதான் தெளிவுக்கு நம்மை இட்டுச் செல்லும். 'தெளிவே தெய்வம்' என்றார் பாரதியார். ஆனபடியால், மறவாமல் நினைவில் வைத்துக்கொள்வோம் - அறிவு சமிக்கட்டும்.


அத்துடன், தமிழர்களை நோக்கிச் சொல்லாடும் அறிஞர்களின் இதய ஓடை, அவர்களின் நனவோடை, தமிழ்மயமாக இருக்கட்டும். ★★

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



இத்தாலி



ரொறன்ரோ







# புலம்பெயர்ந்த நாடுகளில் ஆர்ப்பாட்டப்




அமெரிக்கா



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்









நோர்வே

# பேரணிகள்....






சுவீடன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சந்திரிகா அரசின் தமிழ் மக்களுக்கெதிரான படுகொலைகளைக் கண்டித்து மாபெரும் பிரார்த்தனை ஊர்வலம்

சந்திரிகா அரசின் தமிழ் மக்களுக்கெதிரான படுகொலைகளைக் கண்டித்தும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும், இத்தாலி வாழ் தமிழீழ மக்களால் மாபெரும் ஊர்வலம் பலர்மோ மாநகரில் கடந்த 19-11-95 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ஊர்வலம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என அறிவித்து இருந்தாலும், மக்கள் மிகவும் உணர்வுபூர்வமாக காலை 8 மணிக்கே ஊர்வலம் ஆரம்பமாகும் "பொலித்தியாமா சந்தியில்" கூடிவிட்டனர். ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்காக இத்தாலியின் பல பாகங்களில் இருந்தும் ஏராளமான பொதுமக்கள் பேருந்துகளில் வந்திருந்தனர். தமிழீழ மக்கள் மீது பற்று வைத்திருப்பவரும் தமிழீழ ஆதரவாளருமான திரு. பிலிப்போ ஜிகாந்தியும், தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் இத்தாலிக்கிளையில் மிகவும் பொறுப்புணர்வுடன் செயலாற்றி வரும் இத்தாலியப் பெண்மணியான செல்வி. பிரெஞ்செஸ்காவும், ஆபிரிக்க அரச சார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதியான திரு. மதுவும் மற்றும் தமிழீழ ஆதரவாளர்களான பிலிப்பைன்ஸ், ஸ்பெயின், சூடான், பெருநாட்டு மக்களும் ஊர்வலத்தின் ஆரம்பத்திலேயே கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஊர்வலம் சரியாகக் காலை 9 மணிக்கு மௌனஅஞ்சலியுடன் நகரத் தொடங்கியது. ஊர்வலத்தின் ஆரம்பத்தில் தமிழீழ பொதுமகன் ஒருவர் தேசியக் கொடியை நெஞ்சிலே தாங்கிச் செல்ல, அதன் பின்னே மக்கள் அனைவரும் அணி திரண்டு சென்றுகொண்டிருந்தனர். இவ் ஊர்வலத்தில் எட்டு அடி உயரமான தமிழீழத் தேசப்படம் எடுத்துச் செல்லப்பட்டது.

சந்திரிகா அரசை கண்டித்தும் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும் எழுதப்பட்ட சுலோகங்களை தாங்கிய வண்ணம் மக்கள் சென்றனர். "சிங்கள மக்களே, நாங்கள் உங்களுக்கு எதிரானவர்கள் அல்ல. எங்களைத் தாக்கியழிக்கின்ற சிங்கள இனவாத அரசிற்கே எதிரானவர்கள்" என்றும் "இலங்கைத் தீவில், ஒரு தீவு இரு தேசங்கள்" என்று சிங்கள மொழியில் எழுதப்பட்ட வாசகங்களும் இவ் ஊர்வலத்தில் காணப்பட்டன. ஊர்வலம் ஆரம்பித்து அதன் முடிவிடமான 'கர்த்தத்திறாலே' தேவாலயத்திற்கு சென்றடைய முன்பு சிசிலித்தீவின் பிரதம கத்தோலிக்க ஆயரான வணக்கத்திற்குரிய திரு.பப்பலாத்தோ அவர்களும் இவ் ஊர்வலத்தில் இணைந்து கொண்டார். 2500-கும் அதிகமான மக்கள் கலந்துகொண்ட இவ் நீண்ட ஊர்வலம் பலர்மோ நகரில் மிகவும் பிரசித்திபெற்ற தேவாலய முன்றலைச் சென்றடைந்தது. மக்கள் பெருவெள்ளத்தை பலர்மோ மாநகர முதல்வர் திரு. ஓர்லாந்தோ அவர்கள் வரவேற்றார். அதன் பின்பு தேவாலயத்தின் உள்ளே மக்கள் திரண்டிருக்க பிரதம ஆயர் பிரார்த்தனையை நடத்தினார். தமிழ் ஆயர் திரு. ஜெராட் அவர்கள் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்தார். இப் பிரார்த்தனையில் கலந்துகொண்ட அனைத்து நாட்டு மக்களும் தங்கள் தங்கள் கலாச்சார வடிவினூடாக பிரார்த்தனைப் பாடல்களை இணைந்து பாடினார்கள்.

பிரார்த்தனை முடிவில் தமிழீழ மக்களின் கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் பிரதம ஆயரிடமும், திரு. ஓர்லாந்தோ அவர்களிடமும் ஒப்படைக்கப்பட்டன. அம்மனுவில் "சந்திரிகா அரசின், தமிழ்மக்கள் மீதான படுகொலைகளைக் கண்டித்து, அவ்வரசின் மேல் அழுத்தத்தைப் பிரயோகிக்க கோரியும், மற்றும் தற்போதைய சிங்கள இராணுவ நகர்வுகளினால் சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டு, உணவின்றி மருந்தின்றி சொல்லொணாத் துன்பங்களுக்கு மத்தியில் வாழும் எம் தேச மக்களுக்கு மனிதாபிமான உடனடி உதவிகளை செய்யக்கோரியும், மற்றும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும் தமிழீழ மக்களின் உண்மையான பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளை அங்கீகரிக்கக் கோரியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

சிறீலங்கா அரசைக் கண்டித்தும் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்குமாறும் கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் ஏற்கனவே, இத்தாலிய ஜனாதிபதிக்கும், பாப்பரசரிற்கும் இத்தாலிய அரசின் அனைத்து அமைச்சகங்களுக்கும் அனுப்பப்பட்டிருந்தன.

இவ்வூர்வலத்தை இத்தாலிய தொலைக்காட்சிகள் மற்றும் பல பத்திரிகைகள் முக்கிய நிகழ்வாகப் பாராட்டிக் குறிப்பிட்டிருந்தன.

அமைதியான முறையில், அனேகமான தமிழ் மக்களை கலந்துகொள்ள வைத்து, இவ்வூர்வலத்தை ஏற்பாடு செய்திருந்த தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் இத்தாலியக் கிளையை மிகவும் பாராட்டியும் எம் நாட்டின் நிலைமையை விளக்கியும் பல பத்திரிகைகள் நீண்ட கட்டுரைகளை எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# போர் அன்றி வேறேதும் நினையாப் புலிவீரன்

வவுனியா தமிழீழத்தின் கடல் வளம் இல்லாத மாவட்டம். சிறு சிறு குளங்கள் நிறைந்து காணப் படும். அப்படியான குளங்களில் ஒன்றைக் கொண்டதுதான், தமிழீ ழத்தில் எல்லைக்கிராமமான பாவற் குளம். பரந்து விரிந்து கிடக்கும் வயல்வெளிகள் பச்சைப்பசேல் என்று தெரியும். அங்கே, பெருமாள் தம்பதியருக்கு இளைய மகனாகப் பிறந்தவனுக்கு தாய் தந்தையர் அன் பாக வைத்த பெயர்தான் சுந்தரலிங் கம். மிக வறுமையான குடும்பத்தில் தான் பிறந்தான். பெற்றோர் அவனை பாடசாலைக்கு அனுப்பினர். ஆனால் அவன் படிப்பில் சிறிதும் கவனம் எடுக்கவில்லை. தொடர்ந்து பாட சாலை செல்லமுடியாத நிலை. பாட சாலைக்கு மிக அருகில், சிங்களக் கிராமமான பழையவூர். காடையர்க ளின் அடாவடி நடவடிக்கைகள் தொடர்கின்றன. அக் காலகட்டத் தோற்றம், ஒரு மல்யுத்த வீரனைப் போன்றது. பயிற்சி முடிந்தவுடன் ஒவ்வொரு துறைக்குச் சென்று விடு வார்கள். ஜெகன் மட்டும், முகா மிலே விடப்பட்டான். இந்திய இரா ணுவம் முற்று முழுதாகச் சென்று விட்டது. 'இரண்டாம் கட்ட ஈழப் போர்' தொடங்கி விட்ட செய்தி எமக்கு கிடைக்கின்றது. இப்போது முகாம் பொறுப்பாளரிடம் கேட்க தொடங்கி விட்டான் - "நானும் வெளியில் சண்டை அணியுடன் நிற்கப் போறன். என்னைக் கட்டா யம் அனுப்பி விடுங்கோ" நாட்கள் தொடர்கின்றது. சரி என்று கூறுவ தற்கு முன்...

ஒரு நாள், காட்டுக்கு மரம் வெட்டச் சென்ற போது, எதிர்பா ராத வெடிச் சத்தத்தில், நான் என்ன நடந்தென்றே தெரியாமல் ஒரு கணம்...? புகையின் நடுவே ஒரு கறையான் புற்றின் மேல் அவன் ஒன்றாய், இணையும் இரு உள்ளங் கள்.... சில வார்த்தைகளே பேசி னோம்; மீண்டும் பிரிந்துவிட்டோம்; வெவ்வேறு இடம் சென்று விட் டோம். சில நாட்கள் சென்ற பின்....

ஒரு நாள் எமது பொறுப்பாளர் என்னை அழைத்து "30 கலிபர் ஒன்று உள்ளது, அதற்குரிய பயிற்சியை எடுத்துக் கொண்டு வாரும்" எனச் சொன்னார். அப்போதுதான், ஜெக னும் என்னுடன் ஒன்றாய் வருகின் றான் என்று தெரிந்தது. மிக மகிழ்ச் சியோடு இருவரும் ஒன்றாய்ச் சென்று பயிற்சி எடுத்தோம். மீண் டும் வவுனியா வந்தோம். அந்



தில் எமது அமைப்பில் இளைஞர் கள் இணைந்து கொண்டனர். அப் போது அவன் சிறுவன். பாடசாலை யில் இருந்து வெளியேறி தந்தையு டன் வயலில் இறங்கி விட்டான். தொடர்ந்த ஆண்டுகள் அவனை ஒரு திடகாத்திரமான வாலிபனாக் கியது.

ஆமாம், அந்த நாட்களில்தான் அமைதிகாக்க என்று இந்திய இரா ணுவம் எமது தாயகம் வந்து சேர்ந் தது. அமைதிப்படை கொடூரமான யுத்தம் ஒன்றைத் தொடங்கியது. அவர்களுடன் தேசத்துரோகிகளும் சேர்ந்து கொண்டு மனித வேட்டை யாடத் தொடங்கினர். அந்த நாட்க ளில் மிக இன்னல்கள் அடைந்தான். பிள்ளை மீது வைத்த பாசத்தினால், தந்தை அவனைக் கொழும்புக்குக் கொண்டு சென்று அங்கே தங்கி நிற்க விட்டார். சிறிது காலம் மட் டுமே அங்கே இருந்தான். மீண்டும் தாயகம் வந்தவன் 1989-ம் ஆண்டு எமது அமைப்பில் இணைந்து கொண் டான். அவனது இயக்கப் பெயர் தான் ஜெகநாதன்.

பயிற்சியில் மிகத் திறமையாக செயற்பட்டான். அவனுடைய உடற் சரிந்து கிடந்தான். அப்போது தான் மிதி வெடி வெடித்து விட்டதென்று தெரியும்! அவனுடைய இரும்பு போன்ற காலில் சிறு காயங்கள் மட் டுமே இருந்தன. தூக்கிக் கொண்டு முகாம் வந்தோம். உடனே வைத் தியசாலை கொண்டு செல்லவேண் டும் என்பதால் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டான்.

நாட்கள் வேகமாக ஓடிச் சென் றன. அப்போது ஒரு நாள், போர்க் களத்தில் அவனைக் கண்டேன். பிரிந்தவர்களை மீண்டும் களத்தில் அல்லது கல்லறையில் காண்பது, புலிகளுக்கு மட்டுமே உரிய அம் சம்! ஆம், பாவற்குளம் இராணுவ முகாமில் இருந்து பூவரசங்குளம் நோக்கி, 'வன்னி விக்ரம' என்று பெயர் சூட்டி படைகள் வந்தன. கடும் சண்டை. நிலைகொள்ள முடி யாத சிங்களப்படைகள், பின் வாங் கிச் சென்றன. பம்பைமடு சென்ற இராணுவம் அங்கும் நிலைகொள்ள முடியாமல் வந்த வழியே திரும்பிச் சென்றது. களத்தில் கண்ட நாம் கதைக்க முடியாமல் போய்விட்டது. சண்டை முடிந்த உடன் ஒன்று சேர்ந்தோம்; நீண்ட நாட்களின் பின் நாட்களில்தான் மீண்டும் 'வன்னி விக்ரம II' என்று பெயர் சூட்டலு டன்பாவற்குளம் இராணுவ முகா மில் இருந்து மடு அகதி முகாமைப் பிடிக்கப் போகிறோம் என்று இரா ணுவம் நகரத் தொடங்கியது. தொடர்ச்சியான தாக்குதலால் மடு செல்ல முடியாமல் இராணுவம் மீண்டும் முகாம் நோக்கி பின்வாங் கிச் சென்று விட்டது. அச் சண்டை களில் ஜெகன் மிக ஆர்வமாகச் செயற்பட்டான். ஆம் அந்தச் சண் டையில்தான் உலங்கு வானூர்தி ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.

எமது தலைவரால் முதன் முத லில் பெயர் சூட்டப்பட்டு நடத்தப் பட்ட 'ஆ.க.வே. சமர்' இலும் அவன் பங்கு கொண்டு மிக ஆர்வமாகச் செயற்பட்டான். மீண்டும் வவுனியா வந்தவனுக்கு, அவன் வைத்திருந்த ஏ. கே. எல். எம். ஜியைப் பெற்றுக் கொண்டு 'ஜி. பி. எம். ஜி. ஆயுதம் கொடுக்கப்பட்டது. அந்த நாட்களில் தாண்டிக்குளத்தில் ஒரு சண்டை.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அச்சண்டை முடிந்த உடன் தளபதி அவனைக் கட்டாயப்படுத்தி, விடுமுறையில் போகும்படி சொன்னார். அப்போது அவன் சொன்னான், "என்ன மச்சான் வீடு, விடுமுறை. தமிழீழம் தான் எங்கள் வீடு, விடுமுறை எங்களுக்கென்ன விடுமுறை? நாங்கள் என்ன அரசாங்க உத்தியோகம் பார்க்கிறோமா? இருந்தால் ஆறுதலாய் போவம். அதற்கென்று அம்மா, அப்பா, சகோதரம் மீது பாசம் இல்லாமல் இல்லை. எத்தனை பொடியளின் தாய் தந்தையர் தமிழீழத்தை விட்டுச் சென்று விட்டார்கள். அது போல், நானும் இருப்பேன். என்றோ ஓர் நாள் விடியும்; அப்போ எம் உறவுகளைச் சந்திப்போம்"

சில நாட்களின் பின், தாண்டிக்குளம் இராணுவ முகாமில் இருந்து, 'வன்னி விக்ரம 111' என்று பெயர் சூட்டி, இராணுவம் இ.இ. குளம் நோக்கி முன்னேறத் தொடங்கியது. இரண்டாம் நாள் சண்டையில் அவனுடைய (ஜி.பி.எம்.ஜி) உதவியாளன் வீரச்சாவடைந்துவிட்டான். ஜெகனுக்கு அதிக தூரம் ஓடவும் முடியாது; நடப்பது கூடக் கஸ்டம். அவனுடைய ஆயுதத்தை வாங்கி விட்டு, 'ஜி-3 ஒன்றைக் கொடுத்து ஒரு குறூப்பிற்குப் பொறுப்பாய் விட்டனர். பல களம் கண்ட புலிகளில் அவனும் ஒருவன் அல்லவா! இராணுவம் இடையிலே திரும்பி முகாம் சென்று விட்டது. அச்சண்டையில்தான் 'டாங்கி' பயன்படுத்தப்பட்டது என்று, சிறிலங்கா அரசு அறிவித்தது. இரண்டு கவச வண்டிகள் முற்று முழுதாகத் தாக்கி அழிக்கப்பட்டன. இவன் கண்ட களங்கள் என்றால்... வவுனியாவில் நடக்கும் சண்டைகளில் எல்லாம் இவன் இருப்பான்.

இப்படித்தான் ஒரு முறை... வவுனியா மாவட்டத்தில் உள்ளது சிங்களக் கிராமமான பிரப்பமடு. வழமையாக அக்கிராமத்தைச் சுற்றிப் பாதுகாப்பு நடவடிக்கையில், 16 இராணுவத்தினர், காலையில் முகாமில் இருந்து ரோந்து செல்வது வழக்கம். அவர்களுக்கு உதவியாக ஒரு 'பவள்' கவச வண்டி செல்வதுண்டு. திறமையான வேவு; சண்டை நாள் குறிப்பிடப்பட்டது. குறித்த நேரத்தில் சண்டை தொடங்கியது. அந்த இடத்திலேயே 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். உதவிக்கு வந்த 'பவள்' முகாம் நோக்கிப் பின்சென்றது முகாமின் முன் காவலரணுக்கு அருகில் சென்று விட்டது. 'பவளை' விட்டு விட்டு இராணுவத்தான் ஓட முயன்றான். அவனால் தன் உயிரைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது. உடனே ஜெகன், 'பவள்' வண்டியில் ஏறி முகாமை நோக்கி ரவைகளைப் பொழிந்தான். இராணுவம் முகாமையும் விட்டு விட்டு ஓடத் தொடங்கியது. திறமையாக சண்டை செய்து, அதில் பொருத்தப்பட்டிருந்த எல்.3 ஆயுதத்தையும் கழற்றி எடுத்தான். சற்று முன் எதிரி உலா வந்த அந்த இரும்புப் பேய் இப்போது, புலிகளின் கால்களில் செயலற்றுக் கிடக்கிறது. வெற்றியோடு முகாம் திரும்பினான். அச்சண்டையில் 17 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா வானொலி அறிவித்தது. இன்று அந்தக் கிராமம் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. அச் சண்டையில் மிகத் திறமையாகச் செயற்பட்டமைக்கு, எமது தலைவரால் ஜெகன் சிறப்புப் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டான். வண்ணான்குளம் இராணுவ முகாம் தகர்ப்பில் மிகத் திறமையாகச் செயற்பட்டான். அதன் போதும் தலைவர் அவர்களால் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டான். தொடர்ச்சியாக வவுனியாவில் சண்டை நடைபெற்றுக்கொண்டு இருந்த காலம். குறூப் பிரித்தால், எமது ஒவ்வொரு போராளியும், "நான் ஜெகநாதன் அண்ணன் குறூப்பிற்குப் போகப் போறன்" என்று கேட்பார்கள். அப்படி என்னதான் அவனில் இருக்குமோ! எல்லோரையும், எப்படியானவர்களையும், தன் வசம் கவர்ந்து கொள்வான். எல்லாரிடமும் மிக அன்பாய் பழகுவான். அமைதியான மென்மையான சுபாவம் கொண்டவன்.

இறுதியாக வவுனியாவில் இவன் பிடித்த சண்டை நொச்சிமோட்டையில். அச்சண்டைக்கு அவன்தான் தலைமை ஏற்றுச்சென்றான். அச் சண்டையில், ஒரே கையில் தொடர்ச்சியாக மூன்று ரவைகள் துளைத்துச் சென்றன. வரும் வழியில் அவனுடைய அண்ணனைக் கண்டான். "என்ன தம்பி" என்று ஆசையாகக் கேட்டார். "ஒன்றும் இல்லை. நான் வேறு இடம் போகிறேன். வர நாட்கள் செல்லும்" என்று சொல்லி அனுப்பிவிட்டான். ஆனால் தமையனுக்குத் தெரியாது தன் தம்பி காயப்பட்டுள்ளான் என்று. அன்று சென்றவன், யாழ்ப்பாணத்தில் ஒரு 'மெடிக்ஸில்' இருந்தான். சில நாட்களின் பின் ரவி அண்ணன் வரவே, எப்படியோ கேட்டு அவருடன் சென்றுவிட்டான். சென்றவன் அச்சுவேலி என்னும் இடத்தில் நின்றான். அங்கு வன்னிப் போராளிகள் இருந்தனர். அவர்களுடன் ஒன்றாகப் பயிற்சி எடுக்கத் தொடங்கிவிட்டான். காயம் முழுதாக மாறாத நிலை. ஒரு கால், ஒரு கை மட்டுமே ஒழுங்கான நிலையில் செயற்பட்டன. இருப்பினும் மனம் தளராமல் கடலிலும் சரி நிலத்திலும் சரி சோர்வின்றி அவன் பயிற்சி எடுத்தான். அவன் இரண்டு அணிக்குப் பொறுப்பாக விடப்பட்டான். தொடர்ந்து கடும் பயிற்சி. ஒன்றாய் கடலில் பயிற்சி எடுக்கும் போதும், தரையில் எடுக்கும் போதும் "என்ன ஜெகன், கை எப்படி? நீங்கள் இருங்கோ நாங்கள் செய்கிறோம்" என்றால், "ஏன் எனக்கு என்ன?" என்பதே அவனுடைய பதில்!

அந்த நேரம்தான் ஆனையிறவுக் கூட்டுத்தளத்தில் இருந்து 'யாழ்தேவி' யாழ்ப்பாணம் நோக்கி நகரத் தொடங்கியது. புலோப்பளையில் வைத்து புலிகள் வழி மறித்தனர். வந்த 'யாழ்தேவி' எங்கு செல்வதென்று தெரியாமல் தடம் புரண்டோடியது. ஆம் ஒன்றாய்க் களம் சென்ற எம் சோதரர்களை இழந்து மீண்டும் முகாம் (அச்சுவேலி) திரும்பினோம். அப்போ அவனின் முகம் வாடிப்போய் இருந்ததைக் கண்டு கேட்டதற்கு, "நான் வீரச்சாவடைந்திருந்தால் பரவாயில்லை. என்னுடன் வந்த போராளிகள் அல்லவா?"

**எனக்கு இருக்கும் கடைசி ஆசை ஒன்றே ஒன்றுதான். எங்கள் தலைவர் பல்லாண்டு காலம் இந்த மண்ணில் வாழவேண்டும். அப்படி வாழ்ந்தால் நிச்சயமாக எமது இனத்திற்கு அவர் சுதந்திரத் தமிழீழத்தைப் பெற்றுக்கொடுப்பார். அந்த அசையாத நம்பிக்கையோடுதான் நான் இப்போது புறப்படுகிறேன்.**

***- கரும்புலி கப்டன் வாமன்***

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



என்றே கலங்கினான். தன்னைப் பற்றிச் சிறிதும் கவலைகொள்ளாத இதயம்!

மீண்டும் சில நாட்களில் பயிற்சி தொடங்கியது. புது வேகத்துடன் பயிற்சியில் ஈடுபட்டனர். அப்போது மீண்டும் குறூப் பிரிக்கப்பட்டு, இரண்டு அணிகள் கொடுக்கப்பட்டன. நாட்கள் வேகமாக வளர்ந்து சென்றன. சண்டைக்கான எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்றன. தாக்குதலுக்குரிய முகாம், அம்மான் அவர்களால் வரைபடம் மூலம் விளக்கப்பட்டது. இறுதி ஒத்திகையும் முடிவடைந்து, தாக்குதல் நாளும் குறிக்கப்பட்டது. ஒவ்வொரு போராளியும் மிக உற்சாகமாகக் காணப்பட்டனர். இன்று தனங்கிளப்பில் இரவு போக்கஸ் அடிக்கிறான். இன்றுமட்டும் தானே? வடிவாய் அடி நாளை தெரியும்.... ஒவ்வொரு போராளியும் தங்களுக்குள்ளே சொல்லிக்கொள்கிறார்கள். 10-11-93 பின்னேரம்.... நானும் அவனும் ஒன்றாய்ச் சந்திக்கின்றோம். அப்போ அவன் சொன்னான், "மச்சான் நான் சாகலாம், நீ சாகலாம். ஆனால், எமது மக்கள் சுதந்திரமாக அச்சமின்றிச் செல்லவேண்டும். அத்தோடு நாம் மீண்டும் சந்தித்தால், ஒன்றாய் பூநகரிப் பாதையூடாகத்தான் செல்ல வேண்டும். வரும்போது கிளாலியூடாக வந்தம். அப்படி நான் வீரச் சாவடைந்தால் என் அன்பான மக்களை இறுதிச் சுகம் கேட்டதாகச் சொல். அத்தோடு என் சோதரர் களையும் போராளிகளையும் சுகம் கேட்டதாகவும்..." ஆமாம், 11-11-93 அன்று விடிகின்றது. ஆவலுடன் 'வோக்கி'யில் ஜெகனை அழைக்கிறேன். மறுமுனையிலிருந்து ஜெகன்...? ஆம், போரின்றி வேறேதும் நினையாத புலிவீரன். போர்தான் அவனது சிறப்புக் கலை. போரில் அவன் துறைசார்ந்த வல்லுனன். அவனது சண்டை, தெரிந்தவர்களைக் கூட ஆச்சரியப்படுத்தும். எவ்வளவோ ஆற்றல்கள் அவனுள் குவிந்து கிடந்தன. எத்தனையோ திறமைகளுடன் உலா வந்தவன். விடிந்து விட்டது; ஒன்றாய்ச் சென்றவர்களில் யார், யார்? ஜெகனின் குரல் வரவில்லை. மேஜர் ஜெகநாதனும் வெற்றிபெற்றுத் தந்துவிட்டு உயிரற்ற உடலாக... அதே பூநரிப் பாதையூடாக நடந்து செல்கின்றோம் அவனுடைய கனவுகளைச் சுமந்துகொண்டு!

★★★

## எங்கள் தேசத்து நாயகர்

உயிர் தேசத்துக்கு
உடல் தாய் மண்ணிற்கு என்று
உயில் எழுதிய
உன்னத வீரரே
கேளுங்கள்!

எம் தேசத்தை விட
உங்களைத்தான் அதிகமாய்
நேசிக்கின்றோம்.
ஏன் தெரியுமா?
நீவிர் உங்களை விட
தாய் தேசத்தையல்லவா
நேசித்தீர்!

'மாவீரன்'
இவன் நெஞ்சில்
வீரம் வீற்றிருக்கும்
கண்கள் தாய்மண்ணையே
நினைந்து விழித்திருக்கும்
உள்ளமோ உயிராம்
மக்களின் மகிழ்வை
நினைத்திருக்கும்!

தமிழீழ சரித்திரத்தில் ஒரு
தனித்துவமானவன்!
வீசும் காற்றையே
விலங்கிடக் கூடிய
வீர மறவன் அவன்!

மொட்டுக்கள் முகமலர்ந்து,
மலராகி மணம் பரப்பி
சருகாகும் சாவினை கண்டிருக்கிறோம்
மொட்டுக்களே சிதறி
விடுதலைக்கு விதை கொடுக்கும்
விந்தையான வரலாறு
எம் வீரரே..
உங்களால் விளைந்தது தானே!

கண்ணுக்கு மறைந்தாலும் இதோ
நெஞ்சத்துள் வாழும்
ஜீவித புருஷரே
கண்டோமே
சாவுக்கு ஜீவியம் கொடுத்த
சரித்திர நாயகராய் உம்மை!

வீரர்களே...
உங்கள் உடலை தன்னுள்
தாங்கியிருந்தது என்று
எங்கள் மண்ணுக்கு ஒரு
பொன் வரலாறு இருக்கும்!

ஓ மனிதர்களே...
விண்ணுக்குள் தெய்வம்
இருப்பதாய்தானே உங்கள்
வேதங்கள் சொன்னது
இதோ
எம் மண்ணில் இருக்கின்றார்
மாவீரர் வடிவில் என்கிறேன்
மறுக்க முடியுமா உங்களால்?

எங்கள் தேசத்து நாயகரே
நாம் உயிரை பிடித்தபடி
ஓட இடம் தேடி தவித்தோம்
நீங்கள் உயிரை வெடித்து
எமக்கு பாதை காட்டினீர்கள்!

உங்களுக்கே தெரிந்தது
தன் உயிரினை விட
தமிழ் மண்ணில் இருக்கும்
தாற்பரியம்!

இன்னும் கேள் இனிய வீரா
காலதேவதை ஒரு ஓலை
கொண்டு வருவாள்
அதன் மூலை முடுக்கெல்லாம்
உங்கள் வீரவரலாறு வீற்றிருக்கும்!

யாருமே சாதிக்கமுடியாத
சாதனையை
உன் உயிரினை பேசவைத்து
போதித்தவனே இதையும் கேள்...

உங்கள் வீரநினைவுகள்
தேசத்து நெஞ்சில்
விழுப்புண்ணாய் நிறைந்திருக்க
நாளைய சந்ததி
உம்மை வணங்கி
புது நாமம் இடும்
ஆம்
பூமிக்கு வந்தார் - தமிழ்
ஈழத்தை பிறப்பித்த புதிய
பிரமாக்கள் என்று.

பாறையும் பிளந்து
பாதை செய்யும்
வானமும் விரிந்து
வழிசமைக்கும்
இதோ பூமிக்கு வந்தார்
புதிய பிரமாக்கள் என்று
கடலும் தன் உடல் மடக்கும்!!

எம் சந்ததி வாழ
சரித்திரம் படைத்த
சாகா வீரரே...
உங்கள் உளமார்ந்த கொடையை
எம் உயிரினுள் நினைந்து
விழிகளில் திரியிட்டு
வீரவணக்கம் செய்கின்றோம்!!

நீங்கள்,
பூக்களாய் காய்களாய்,
புத்தம் புது
மரங்களாய்,
தென்றலாய் தேன் இருக்கும்
பழங்களாய்,
தமிழ் தேசத்து சோலையில்
எம் கண்கள் காணும்
காமதேனுவாய்
காலமெல்லாம் வாழ்வீர்கள்!!!

- சாந்தினி சந்திரன்.

www.tamileelamarchive.com




பெண்களையும் குழந்தைகளையும் உள்ளடக்கிய அப்பாவி பொது மக்களைக் கொன்று குவிப்பதை உடனடியாக நிறுத்தும்படி இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் மகஜர் ஒன்றை 'சென்பீஸ்' என்னும் மனித உரிமை ஆதரவுக் கழகம் மலேசிய நாட்டிலுள்ள 39 இயக்கங்களின் ஆதரவோடு கடந்த 9-11-95 அன்று மலேசியா நாட்டிலுள்ள மலேசியாவுக்கான இலங்கைத் தூதரிடம் வழங்கியது.

சண்டையை நிறுத்தி விட்டு அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பேச்சு மூலம் தீர்வு காணும்படி அந்த மகஜரில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அறுநூறுக்கும் மேற்பட்ட பொது மக்கள் ஜாலான் அம்பாங்கிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்னர் அன்றைய தினம் காலை பத்து மணியளவில் திரளத்தொடங்கினர். அவர்கள் இலங்கை அரசின் போக்கைக் கண்டிக்கும் வகையில் வாசகங்கள் அமைந்த சுலோக அட்டைகளையும் பதாகைகளையும் பிடித்த வண்ணம் அமைதியாக தங்களின் மன உணர்வினை வெளிப்படுத்தினர்.

சரியாக நண்பகல் மணி 12 மணிக்கு சென்பீஸ் அமைப்பின் நிர்வாக செயலாளர் பான் இயு தெங், மனித உரிமைகளுக்குரிய தமிழர் ஆதரவுக் குழுவின் தலைவர் பசுபதி, யாழ்ப்பாணக் கூட்டுறவு சங்கத் தலைவர் தில்லைநாதன், முன்னாள் தூதன் ஆசிரியர் திரு. பெரு. அ. தமிழ்மணி, ம.தி.க. தேசியத் தலைவர் ரெ. சு. முத்தையா ஆகியோர் கொண்ட குழுவினர் மட்டுமே தூதகரத்தினுள் செல்ல அனுமதி வழங்கப்பட்டனர். பின்னர் இக்குழுவினர் இலங்கை தூதரகத்தின் உயர் பொறுப்பு அதிகாரியான வி. என். செனவீரத்னேயிடம் தாங்கள் கொண்டு வந்திருந்த ஆட்சேப மகஜரை வழங்கினர்.

மகஜரைத் தந்த பின்னர் வெளியே வந்த பான் இயு தெங் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் பொஸ்னியப் பிரச்சினையைவிட இலங்கையில் நடக்கும் படுகொலை மிகவும் மோசமான சம்பவமாகும் என்றும் இதற்கு உலக நாடுகள் ஒன்றும் பேசாதது ஏன் என்றும் கேள்வி எழுப்பியதோடு, 'இத்தனைக்கும் மேலாக இலங்கை உறுப்பியம் பெற்றுள்ள காமன் வெல்த் மன்றம் கூட ஒன்றும் பேசாதது வருந்தத்தக்கதாகும்' என்றார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் ஒன்றும் அறியாத அப்பாவிகளையும் பெண்களையும் குழந்தைகளையும் கொன்று குவிப்பதை இலங்கை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் பான் இயு தெ[ங்] வலியுறுத்தினார்.

சென்பீஸ் வழங்கிய மகஜ[ரில்] கண்டுள்ள அம்சங்கள் வருமாறு:

கொடூரமான ராணுவத்தா[க்கு]தலையும் அழிவையும் தேவைய[ற்ற] நடவடிக்கைகளையும் உடனடிய[ாக] நிறுத்த வேண்டும்.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தி[ல்] விதிக்கப்பட்டுள்ள பொருளாதா[ரத்] தடையை அகற்ற வேண்டும்.

அனைத்துலக செஞ்சிலுவை[ச்] சங்கம் போன்ற தொண்டூழிய நி[று]வனங்கள் மூலமாக பாதிக்கப்பட்[ட] மக்களுக்கு தேவைப்படும் மருந்[து] உணவு முதலியவற்றை உடனடிய[ாக] அனுப்பவேண்டும்.

பத்திரிகைச் செய்திகளுக்கு வி[தி]க்கப்பட்டுள்ள தணிக்கையை அக[ற்ற] வேண்டும்.

மேற்கண்ட அம்சங்களை உள்[ள]டக்கிய மகஜரில் அபிம் எனப்ப[டும்] மலேசிய இஸ்லாமிய இளைஞ[ர்] இயக்கம், எம்.பி.ஏ. எனப்படும் ம[லே]சிய இளைஞர் பேரவை, அனை[த்]துலக இஸ்லாமிய மாணவர் கழ[கங்]களின் சம்மேளனம், மலேசி[ய] தமிழ் எழுத்தாளர் சங்கம், ம[...] மன்றம், ம. தி. க. உட்பட மொத்[தம்] 39 இயக்கங்கள் கையெழுத்திட்[டு]ள்ளன.

தமிழீழ ஆவணக் காப்பகம்
www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இருளிலிருந்து...



வீடு சத்தமில்லாம ஊமையாக் கிடக்கு. அதுக்காக வீட்டில ஒருத்தரும் இல்லையாக்குமெண்டு நினைச்சிடப்படாது. அம்மாவை விட மற்ற எல்லாரும் வீட்டிலதான் இருக்கிறம். காலம வெள்ளாப் போடயே சயிக்கிளில வாழைச்சே னைக்குப் போன அம்மா பதி னொரு மணியாகியும் இன்னும் வரல்ல. அதுதான் எல்லாற்ற முகத் திலயும் யோசினை. ஆனா அப்பா, பெரியண்ணாச்சி, தங்கச்சி எல்லா ரும் வீட்டிலதான் இருக்கிறம்.

அப்ப பெரியண்ணாச்சியும் அப் பாவும் வேலைக்குப் போறேல் லையோ? இல்ல. போகேலா. போனா திரும்பி வரேல்லா. பாழாப்போன ஆமியோ, பொலிசோ, ஊர்காவற் படையோ கொண்டு போவானுகள். கொண்டுபோனாக் கொண்டு போனதுதான். எங்கையெண்டும், எப்பையெண்டுமில்ல. இருக்கோ இல்லையோவெண்டுமில்ல. வீட்டுக் காறர் ஒண்டு இரண்டு வருசத்துக்கு அழுதுபோட்டு பிறகு மனசுக்குள் ளேயே பூட்டிவைச்சுக் குமுறுறத விட வேற ஒண்டுஞ் செய்யேலா.

அதுசரி.... தங்கச்சி ஏன் பள்ளிக் குடம் போறேல்ல? அதையேன் கதைப்பான்? பொம்பிளைப் பிள் ளையளை வெளியால விட்டிட்டு பிறகு அதுகளைக் காணேல்ல எண்டு தேடுறதவிட வீட்டிலேயே வைச்சி ருக்கலாம். அப்ப, அண்ணாச்சியும் அப்பாவும் வேலைக்குப் போகாட்டி வீட்டுப்பாடுகள கவனிக்கிற ஆர்? அதெல்லாம் அம்மாதான். அதுக் குத்தான் அம்மா இப்ப சயிக்கிளில வெளிக்கிட்டிருக்கிறா. காலம வெள் ளாப்போட ராத்திரி உறைய வைச்ச தயிர வாழைச்சேனைப் பக்கத்தில கொண்டுபோய் வித்துப்போட்டு அங்கயிருந்து கடல்மீனை வாங்கி "ஐஸ்" போட்டு பிளாஸ்ரிக் வாளிக் குள்ள எடுத்துக் கொண்டந்து வீடு வீடா வித்துத்தான் அம்மா வீட்டுப் பாட்டைக் கவனிக்கிறா...

எங்கட ஊர் தென் தமிழீழத்தில இருக்கிற எல்லைக் கிராமங்களில ஒண்டு. முல்லை, மருதம் எண்டு சொல்லிற நிலங்கள்தான் எங்கட ஊர். ஊரின்ர ரெண்டு பக்கமும் ஆறு ஓடுது. அதோட குளமும் இருக்கு. இந்தப் பிரச்சினைக்கு முந்தி ஊர், தாயைக் கண்டாச் சிரிக்கிற சின்னப்பிள்ளையள் போல சந்தோ சமாத்தான் இருந்திச்சு. வயல் செய் யிறதும், காட்டில பிரம்பு வெட்டு றதும் ஆத்திலயும் குளத்திலயும் மீன் பிடிக்கிறதும் பட்டிமாடடைக்கிற தும் தான் ஊராக்களின்ர தொழில்.

**பு. சத்தியமூர்த்தி**

வீட்டு ஆம்பிளையள் எல்லாரும் இந்த நாளில ஏதாவது ஒரு தொழி லைச் செய்வினம். இதால வீட்டுக்கு வருவாய் எப்பவுமே பிரச்சினையா இருக்கேல்லை. எங்கட ஊருக்கு இயற்கை தந்த கொடை அது. தொழில் செய்ய ஒரு முதலுமில்லை யெண்டாலும் பிரச்சினையில்ல; ஒரு சின்னக் கத்தியோட பிரம்பு வெட்டுறாக்களோட பிரப்பங்காட் டுக்குப் போனா, வரேக்க ஒரு பெரிய கட்டுப் பிரம்போட வரலாம். கூடை, கதிரை பின்னிற ஆக்களுக்கு அதை வித்தா கையில காசு, வீட்டுச் சீவி யம் தளம்பலில்லாமல் போகும்.

மாடும் கண்டும் எங்கட ஊரின்ர

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கண்மாதிரி. பட்டிக்காறர் காட்டு ஓரத்தில "காலை"யில் மாடுகளை அடைச்சிருப்பினம். வெள்ளாப் போடயே போய் பால் கறந்து போட்டு மாடுகளைச் சாய்ச்சுக் கொண்டு போய் மேயிறதுக்கு விடுவினம். பாலைப் பாற்சாலையில குடுக்கிற. மாதம் முடியக்காசு. பின்னேரம் மாடுகளைச் சாய்ச்சுக் கொண்டு வந்து "காலை"யில அடைச்சுப்போட்டு வீட்ட வந்தா நிம்மதியான சீவியம். இந்த நாம்பன் கண்டுகள் ஒரு கணக்கான பருவம் வந்தோடன காட்டில போயிடுங்கள். இதால அதுகளை கணக்கான வயது வரேக்க ஒண்டில் விப்பினம். அல்லாட்டி கரத்தை மாட்டுக்கு பழக்குவினம்.



ஆத்தங்கரையில வேற ஊராக்கள் வந்து வாடி போட்டுத் தங்கிப் பொயிலை செய்யிறவை. இங்கத்தைப் பொயில சுறுட்டுக்கு வலு திறமானதாம். அதால யாழ்ப்பாணத்துச் சுறுட்டு முதலாளிமார் இங்கை வந்து பொயிலை வாங்க வருவினம். ஊரில் வயல் செய்தாப் பொன் விளையும். ஆத்தங்கரையில இருந்து பாத்தால் கண்பார்வைக்கு ஏலாத தூரம் வரைக்கும் வயல் வெளிதான். வருசத்தில ரெண்டு போகமும் சும்மா பச்சைப்பாய் கணக்கா வயல்வெளி பச்சைப் பசேலெண்டு இருக்கும். வயல் வெட்டி சூடடிச்சு நெல்லை ஏத்திக்கொண்டு வந்து வீடு நிறைய அடுக்கி வைச்ச நெல்லை வித்தா கையில ஆறு இலக்கத்தில காசு வரும். நெல்லு வித்தாப் பிறகு வயல்காறர் வீட்டுக்காறரோட ரவுணுக்குப் போனா கரத்தை பிடிச்சுத்தான் சாமான் ஏத்திக்கொண்டு வருவினம். பிறகு ஊர்க்கோயிலுகளில திருவிழா, தீப் பிழம்பு, கொம்பு விளையாட்டு எண்டு ஒரே கொண்டாட்டந்தான்.

முந்தியே சொன்னான்தானே ஊரின்ர ரெண்டு பக்கமும் ஆறும் குளமும் இருக்கெண்டு. ஊராக்கள் அதில மீன் பிடிக்கிறவை. குளத்தில விரால், யப்பான், சுங்கன் மீனுகள் பிடிபடும். ஆத்தில பெரிய பெரிய செப்பலி மீன் பிடிக்கலாம். தூண்டில் போட்டும் சின்னச்சின்ன தோணியில போயும் மீன் பிடிப்பினம். உந்த மீனை ஊர்கடைத் தெருவில வித்துப்போட்டுப் போனா குடும்பப்பாட்டைக் கவனிக்கலாம். சிலபேர் மீன் பிடிக்கிறதோட பட்டி மாடும் அடைப்பினம். இல்லாட்டி மீன்பிடிக்கிறதோட பிரம்பும் வெட்டுவினம். மீன்பிடிக்கப் போற ஆக்களிட்டச் சொல்லிக் கரையில நிக்கிற சின்னதுகள் தாமரைப்பூப் புடுங்குவிக்குங்கள். நீந்தத் தெரிஞ்சவை கொடிவிலத்திப் போய்ப் பூவும் தாமரை இலையும் புடுங்கி வருவினம். ஊர்க்கோயிலில தாமரைப் பூவாலதான் பூசையாக்குவார் பூசாரியார். தாமரை இலையிலதான் கடையிலயும், சபையளிலயும் சாப்பிடுறது.

இத்தனை தொழில் இருந்தும் ஏன் ஊர் ஆம்பிள்ளையள் தொழிலுக்குப் போறல்ல? ஏன் வீட்டோட இருக்கினம்? ம்... அதையேன் கேட்பான்? இந்தப் பிரச்சினை தொடங்கின பிறகு அவனுகள் எங்களைப் படுத்துற பாடு கொஞ்சமோ? ஊருக்கு நடுவில பொலிஸ் ஸ்ரேசனைக் கொண்டந்திற்றாங்கள். ஒரே குறுக்காலயும் மறுக்காலயும் நடந்து திரிவாங்கள். றோட்டு நீட்டுக்கும் அவனுகளின்ரை ஜீப் ஓடித்திரியும். இரவாகிற்றெண்டா துண்டா வெளிக்கிட ஏலா. வீட்டோட இருந்தாப்போல விடுறாங்களே? இருந்தாப்போல் வந்தானுகளெண்டா கண்ணில காணுற ஆக்களையெல்லாம் அள்ளிக்கொண்டு போயிடுறானுகள். எங்களைக் கடவுள்தான் காப்பத்தவேணும்.

இப்ப பட்டிக்காறர் பாடு பெரிய கஸ்ரம். மாடுகளைக் காட்டுப்பக்கம் தானே மேய்ச்சலுக்குச் சாய்ச்சுக் கொண்டு போற. சில நேரத்தில மாடுகள் காட்டுக்கையும் போகுந்தானே! அந்த மாடுகளைப் பிடிக்கக் காட்டுக்கப் போனா, காட்டுக்கை ஒளிச்சிருக்ற பொடியனுகளோட கதைச்சிற்று வாறமெண்டு சந்தேகத்தில "கொட்டியா சப்போட்" எண்டு சொல்லி இழுத்திற்றுப்போனானுகளெண்டா பிறகு, ஆளே இல்ல. இப்படி எத்தனை பொடியனுகளைக் கொண்டு போயிற்றானுகள். முந்தி எவ்வளவு பெடியனுகள் நிண்டு வேலைசெய்வானுகள். இப்ப பெடியனுகளைக் கண்ணிலயும் காண ஏலா. கொம்பு இழுக்கிறதெண்டா முந்தி எவ்வளவு பொடியனுகள் துள்ளிக்கொண்டு நிப்பானுகள். இப்ப கொம்பிழுக்க ஆக்களும் இல்லை, கொம்பு விளையாட்டும் இல்ல. ஊரில இருக்கிற பொடியளுகளை எண்ணிப் போடலாம். அவ்வளவு ஆக்கள் தான் மிஞ்சியிருகினம். ம்....

பிரம்பு வெட்டுற, மீன்பிடிக்கப் போற ஆக்களின்ரயும் இந்தக் கதைதான். அதுகள் ஆத்துக்கு, குளத்துக்கு பிரப்பங்காட்டுக்கு போனா, அங்க நிற்கிற பெடியனுகளுக்கு சாமான் கொண்டு போய்க் குடுக்கிறதெண்டு சொல்லிப் பிடிச்சிற்றுப் போயிடுவானுகள். அதால மீன்பிடியுங் குறைவு. எந்த நேரம் எந்த இடத்தில ஒழிஞ்சிருந்து சுடுவான்கள், இல்லாட்டி பிடிப்பானுகள் எண்டு தெரியா. எப்பிடியும் ஒவ்வொருநாளும் ஆராவது அவனுகளிட்ட மாட்டுப்படுவினம். அதால மீன்பிடியும் சரியாக் குறைஞ்சு போயிற்று.

வயல் செய்யிறது அடியோட இல்ல. எங்கட வயலுகளில சிங்களவரைக் குடியேத்திப் போட்டாங்கள். ஒரே சிங்கள மயம். மிச்ச வயலையாவது செய்வமெண்டா அவனுகளிட அட்டகாசம்... வயல் செய்தா ஆமியும் ஊர்காவற்படையும் வந்து வயலையும் எரிச்சு ஊராக்களையும் சுட்டு அநியாயமாக்கிப் போடுவானுகள். இப்படி எத்தின தரம் நடந்திருக்கு. இப்ப என்னடாண்டா நாங்கள் வயல் வெட்டி சூடடிச்சா அப்பேக்க வந்து எங்களைச் சுட்டுக் கலைச்சுப் போட்டு எங்கட நெல்லை அவனுகள் அள்ளிக்கொண்டு போயிர்றானுகள். வீடு நிறைய நெல்லிருந்த காலம் போய் இப்ப சோத்துக்கு அரிசி வாங்கிற நிலமை வந்திற்று.

★★★

அந்தா அம்மா வாறா.... மனிசி செரியா மாஞ்சு போயிற்று. வெள்ளாப்போடயே எழும்பி முப்பது கட்டை சயிக்கிள் மிதிச்சு பிறகு வீடு வீடா மீன் வித்து வாற

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தெண்டா... அம்மா பதினொண்டு, பன்னிரெண்டு மணிக்குத்தான் மீன் கொண்டு வாறதால ஊராக்கள் வாங்கிறதும் குறைவு. அதோட அது களிட்டயும் மீன் வாங்கக் காசி மில்ல. தொழில் செஞ்சாத்தானே காசி. இப்ப ஊர் தொழிலில்லாம சோந்து வாடிப்போய்க் கிடக்கு. அதால அம்மாவுக்கு மீன் விக்கிறதும் பெரியபாடுதான். எண்டாலும் என்னத்தச் செய்யிற. எல்லாம் எங்கட தலையெழுத்தெண்டு தாங்கிறதான்.... முந்தியெண்டா சில நேரத்திலதான் ஊருக்கு கடல் மீன் வரும். மீன் வந்துதெண்டா வந்து அரைமணித்தியாலத்துக்குள்ள முடிஞ்சிடும். கொஞ்சம் பிந்தினா மீன் கிடைக்காது. ஆனா இப்ப வீட்ட கொண்டந்து குடுத்தாலும் வாங்கிறதுக்கு சனத்திற்ற காசில்ல.

எங்கட வீடு றோட்டு ஓரத்தோட இருக்கு. எங்கட வீட்டுக்கு வலது பக்கத்திலதான் பொலிஸ் ஸ்ரேசன். இடது, கொலனிக்குப் போற பாதை. அதில அவனுகளிட சென்றி. சென்றிக்கும் ஸ்ரேசனுக்குமிடையில ஒரே நடந்தும் ஜீப்பிலயும் திரிவானுகள். இரவெண்டா ஒரே அவனிகளிட சத்தந்தான். நாயும் விடாம குலைக்க, கடவுளே.. பகலிலயெண்டா வளவுக்கையும் வருவானுகள்.... பெரிய பயங்கரம்.

அம்மா கொண்டு வந்த காசிக்கு சாமான் வாங்கி சமைச்சு சாப்பிடக்குள்ள பின்னேரமாகிப் பொழுதும் மங்கிற்று. இனி ஒருத்தரும் வெளியில வெளிக்கிட ஏலா. பக்கத்தில வீட்ட கூடப் போகேலா. வீட்டுக்குள்ளேயே இருக்கிறதுதான். எல்லாரும் நேரத்தோடயே படுத்திருவம். படுத்தாலும் உடன நித்திரைக்குப் போக ஏலா. ஒரே அவனுகளின்ர சப்பாத்துச் சத்தம் கேக்கும். வீடு றோட்டுக்குப் பக்கத்தில இருக்கிறதால எங்கட நெஞ்சில நடக்கிற மாதிரி பயங்கரமாக் கேக்கும். நான் காதுக்குள்ள பஞ்சு வைச்சுக்கொண்டு தான் படுக்கிற. இல்லாட்டி நித்திரை கொள்ள ஏலா..

எனக்கு வெளியில போகவேணும் போல இருக்கு. ஆனா வெளியில ஒரே இருட்டாயிருக்கு. அதோட அவனுகள் நிண்டாலும் நிப்பானுகள். வெளியில போகப் பயமாயிருக்கு. அதால பேசாமப் படுத்திறன். இருட்டு விடியத்தானே வேணும்.

★★

# சிறிலங்காவின் இராணுவ செலவீடு

சிறிலங்கா அரசின் இராணுவ செலவீடு வருடத்திற்கு வருடம் கூடிக்கொண்டு போகிறது. அயல் நாடுகளான பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளின் இராணுவ செலவீட்டின் விகிதாசாரத்திலும் பார்க்க சிறிலங்காவின் இராணுவ செலவீட்டு விகிதாசாரமே அதிகமானதாகும். இதே போல் மொத்த வருமானத்தில், இராணுவ செலவீட்டிற்கு பணம் ஒதுக்கும் உலக நாடுகளை விட மிக உயர்வானதாக இருக்கும் சிறிலங்காவின் செலவீடானது உலகில் போரிற்கு செலவிடும் இஸ்ரேல், பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் விகிதாசாரத்திற்கு ஒப்பிடக்கூடியதாக உள்ளது. மேலும் சிறிலங்கா அரசானது உள்நாட்டில் பாவிக்கக் கூடாது என கருதப்படும் கனரக ஆயுதங்களை போரிற்கு பயன்படுத்த தயங்கவில்லை. ஆட்லறிகள், பீரங்கிகள், போர்விமானங்கள் இவற்றை எல்லாம் பெரிய அளவில் பயன்படுத்தி உள்ளது அல்லது பயன்படுத்துகிறது. இதனை யாழ் நகர் மீது சிங்கள இராணுவம் மேற்கொண்ட தாக்குதலிருந்து கணிப்பிட்டுக் கொள்ளலாம். இத் தாக்குதலில் இராணுவம் பயன்படுத்திய ஆட்லறி எறிகணைகள் இதற்கு உதாரணமாகும். இப்போரானது உள்நாட்டுப் போர் என்ற பரிமாணத்திலிருந்து முற்றாக விலகி வேறோரு நாட்டிற்கு எதிரான போர் என்பதை கண்டு கொள்ள முடியும்.

அத்தோடு யாழ் நகர் மீதான தாக்குதல், போரானது இன்னொரு நாட்டின் தலைநகருக்குள் நடாத்திய போராகவே காணப்பட்டது. தற்போது சிங்கள இளைஞர்களை போரிற்கு ஈடுபடுத்த முனையும் நடவடிக்கையிலேயே சந்திரிகா அரசு ஈடுபட உள்ளது. இதற்கான செலவீட்டிற்கு அமைச்சரவை முழு ஒத்துழைப்பையும் வழங்கியுள்ளது.


ஒரு நாட்டிற்கு கட்டாய இராணுவ சேவை என்பது, அந்நாடு இன்னுமொரு நாட்டுடன் போரிற்கு செல்வதற்காகவே தேவாயான ஒன்றாகும். திட்டமிட்டு சந்திரிகா அரசானது கட்டாய இராணுவ சேவை மூலம் போரிற்கு ஆயுதக் கொள்வனவு செய்வதென்பது தமிழினத்தை முழு அளவில் தாக்கி அழிப்பதற்கே ஆகும். அதாவது அண்டைநாடு ஒன்றின் மீது போராட்டத்திற்கு தயாராக்கும் ஒரு அரசின் நடவடிக்கைக்கு ஒப்பாகும். ஆனால் இத்திட்டம் தற்போதைக்கு முடிவிற்கு கொண்டுவரக் கூடியதொன்றல்ல. இது சிறிலங்காவிலுள்ள பலதரப்பினராலும் ஓரளவேனும் உணரப்பட்டுள்ளது.

எதிர்கட்சி தலைவர் ரணில்விக்கிரமசிங்காவும் இதனை உணர்ந்துள்ளார். யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வர பலகாலம் செல்லும் என்பதை நாம் அறிவோம் என சில தினங்களிற்கு முன்னர் கூட அவர் தெரிவித்திருந்தார். அதாவது யுத்தமானதன் வடிவமும், பருமனும் மாறி உள்ளது. இன்று யாழ்ப்பாணத்தை இராணுவம் பிடித்திருப்பதாக கூறுவதாவது புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஒரு பாகத்தை அகற்றுவது போலாகும். இவ்வாறு செய்தாலும் புற்று நோய் மற்றைய இடங்களிற்கும் பரவியே இருப்பதைப்போல யுத்தகளங்களிற்கு அப்பாலும் புலிகள் தாக்குதல்களை நடத்தியே செல்வர் என இராஜதந்திரி ஒருவர் குறிப்பிட்டது முற்றிலும் பொருத்தமானதாகும். அதாவது அரசாங்கம் போரின் அளவையும் பருமானத்தையும் மாற்றி செல்ல புலிகளின் யுக்திகளும், வடிவங்களும் மாறி, மாறியே செல்கின்றது. சிறிலங்கா அரசானது போரை பெரிதளவில் முன்னெடுத்து செல்ல விடுதலைப்புலிகளும் போரை தனியாக வடக்கு, கிழக்கு மட்டுமல்லாது இலங்கை பூராகவும் எடுத்து செல்லக்கூடியதாக இருக்கும். ஒட்டுமொத்தமாக பார்க்கும்போது இன்று இலங்கையில் நடைபெறும் போரானது ஓர் உள்நாட்டுப்போர் என்ற வடிவத்தை முற்றாகவே இழந்துள்ளது. இந்த நிலையானது இரு நாடுகளிற்கு இடையே ஆன போர் என்பதனை தெளிவாக்கி உள்ளது மட்டமல்ல, இது இரு தேசங்களின் முழு பிரதேசமும் போரிற்கு தயாராகி உள்ளது என்பதுமே ஆகும். இது சிறிலங்கா அரசின் போருக்கான செலவீட்டை அதிகரித்தே செல்லும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# முகம் அறியாத உறவிற்கு ஒரு கடிதம்



எனக்காகத் தீக்குளித்த உடன்பிறப்பே, இனத்திற்காய் உயிர் துறந்த உறவே, உன் பெயர் அறியேன், உன் முகம் அறியேன், சரியான உன் முகவரி அதுதானும் அறியேன், ஆயினும் இதை எழுதுகிறேன். இக் கடிதம் உனக்கு வந்துசேராது என்பதுவும் எனக்குத் தெரியும். ஆனாலும் உன் அர்ப் பணிப்பைக் கூறாமல் இருக்க முடியவில்லை. எம் தேசத்தின் இளம் தலைமுறை இன்று புதிய விதத்தில் சிந்திக்கத் தொடங்க வேண்டும் என்பதற்காய் எழுதுகின்றேன்.

நீ தீக்குளித்த செய்தி அறிந்து திகைத்தேன். வேதனையோடு வெட்கத்துள் முகம் புதைத்து அழுதேன். உனக்காக மட்டுமல்ல, என்னையும் எண்ணித்தான். பேர் அறியா உறவே என்னை உனக்குத் தெரியாது, ஆனால் இன்று எனக்கு மட்டுமல்ல உலகத்திற்கே உன்னைத் தெரிந்துவிட்டது. என் மனக் கண்ணில் நீ நடாத்திய யாகம் தெரிகிறது. நீ எழுதிய இறுதி வரிகளும் தெரிகிறது. நீ எரிகிறாய், நெய்யாய் உருகிறாய், புழுவாய் நெளிந்து விழுகிறாய். ஐயனே நீ படும் வேதனையை என்னால் எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை. ஏன் இந்த வேதனை? யாருக்காக இந்தத் தியாகம்? எனக்காகத்தானே, என் உறவுக் காகத்தானே, என் அம்மாவிற்காக, என் அப்பாவிற்காக, அக்காவிற்காக, தம்பி தங்கைக்காக, என் குடும்பத்திற்காக, எங்கிருந்தோ நீ உன்னை வருத்தி உயிரை விட்டாய். ஆனால் நான் மட்டும் இங்கே. என் உறவிற்காக உயிர் நீத்த உத்தமனே, ஏன் இப்படிச் செத்தாயோ? எனக்குப் புரிகிறது. உனக்கும் ஒரு சொந்த நாடு இருந்திருக்குமானால் நீ இப்படி யாசித்து மாண்டிருக்க மாட்டாய். படைதிரட்டி வந்து தமிழன் யார் என்பதைக் காட்டியிருப்பாய். என்ன செய்வது? உலகம் எங்கும் பரந்து வாழும் தமிழனுக்கு ஒரு நாடு இல்லை. சுதந்திரமாய் குந்தி இருக்க ஒரு கூடு இல்லை. தமிழனாகப் பிறந்ததற்காக நிம்மதியான ஒரு வாழ்வு இல்லை. இந்த அவல நிலைமையை மாற்றப்போவது தமிழீழம்தான் என்பதை நீ சரியாகப் புரிந்து கொண்டாய். தமிழன் என்றாலும் உலகில் எந்த மூலையில் வாழ்ந்தாலும் உணர்வால் ஒன்று பட்டவன் என்ற தத்துவதற்திற்கு புத்துயிர் ஊட்டிவிட்டாய். என் இனத்தின் இரத்தமே, உன் தேசத்தில் நீ மூட்டிய நெருப்பு உன்னை மட்டும் எரிக்கவில்லை. தமிழ் உருவத்தில் எதிரிக்கு கொள்ளி கொடுக்கும் கோடரிக் காம்புகளின் போலி முகத் தோலையும் எரித்துவிட்டது. எம் தேசத்தின் இளைஞர், யுவதிகளின் நெஞ்சத்திலே புதிய வேகத்தை ஊட்டிவிட்டது. இனியும் எம் இளம் தலைமுறை உறங்காது. விழித்து எழும். எம்பகை வேருடன் விழும். உன் நினைவு எம் நெஞ்சத்தில் நீங்காது வாழும்.

இப்படிக்கு
தமிழீழத்தின் உடன்பிறப்பு

# தமிழினத் தியாகி அப்துல் ரவுஃப்வுக்கு தலைசாய்த்து அஞ்சலிக்கின்றோம்

நெஞ்சம் கனக்க, முகம் தெரியாத அந்த தியாகியின் உயிர்த்துடிப்பை எம்முள் நிறைத்துக்கொண்டோம். போராளிக்குரிய உறுதி. தியாகத்தின் எல்லையைத் தொட்டு உலுப்பும் கரும்புலிகளை ஒத்த தற்கொடை. தான், தன்வீடு, தன்தேசம் என்ற எல்லை கடந்து அயலில் அழுது துடிக்கும் தன் இனத்துக்காக நெஞ்சு துடித்தவர். ஈழத்தமிழருக்காய் உயிர் கொடுத்த மானத்தமிழன் அப்துல் ரவுஃப். இன்று அவரது பெயர் ஈழத்தமிழர்களின் உள்ளங்களில் உச்சரிக்கப்படுகின்றது. தமிழீழமே திரண்டு அவர் தியாகத்திற்காய் கண்ணீர் வடித்ததே. போராளிகளை அஞ்சலிக்கும் எம் மண்ணில் தமிழகத்தைச் சேர்ந்த தமிழ்த் தியாகி அப்துல் ரவுஃப்புக்கு அஞ்சலி செலுத்த எம் தேசம் திரண்டதே. ஒரு போராளியாய் அந்தத் தூய தமிழ்த்தியாகி எம்முடன் வாழ்வார்.

அவரது இந்த உறுதியான தடம், உணர்வுள்ள தமிழர்களுக்கு பாதையாய் அமையட்டும். நெருப்பில் வெந்து துடிக்கும் உதட்டுக்குள்ளால் "ஈழத்தமிழரைக் காப்பாற்றுங்கள்" என்ற வார்த்தை மட்டுமே வந்ததாம். கேட்டதில் நெஞ்சம் கனதியானோம். மலர்வளையம் வைத்து அஞ்சலிப்பதிலும் பார்க்க உள்ளக் கமலத்தில் உட்கார வைத்துள்ளோம். தமிழ்முத் தமிழரையும், ஈழத்தமிழரையும் பிரித்து வைத்து அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கும் அக்கிரமக்காரர்களின் தலைகளில் ஆயிரம் அப்துல் ரவுஃப்கள் இடியாய் விழுவார்கள்.

வரலாற்றைப் பிரித்துப் போடப் பார்க்கிறார்கள். தொப்புள்கொடி உறவை துண்டாடிவிடப் பார்க்கிறார்கள். தாயிருக்க சேயின் உயிர் பறிக்கத் துடிக்கிறார்கள். கலந்திருக்கும் எங்கள் சுவாசக் காற்றில் நஞ்சைத் தூவக் காத்திருக்கிறார்கள். ஆனால் யாவும் சத்தின்றி சருகாகிப் போகும் என்பதைத்தான் அப்துல் ரவுஃப்பின் தியாகம் எடுத்துரைக்கின்றது. தமிழக மக்களின் உணர்வின் வெளிப் பாடாய், எழுச்சியின் குறியீடாய்த்தான் அவரது தியாக மரணத்தைக் கருதமுடிகிறது. தாய் சேய் உறவைப் பிரித்துப் போடத் துடிக்கும் நாச சக்திகளுக்கு தன்னைக் கொடுத்து ஒரு பாடத்தைப் புகட்டியிருக்கிறார் அப்துல் ரவுஃப். இந்த உலகத்தை விட்டுப்போகும் இறுதித் தறுவாயில் அவர் உரைத்த கடைசி வார்த்தை "இன்று நான் நாளை தமிழகம்"

"வாழ்க அப்துல் ரவுஃப் புகழ்"

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## "அகதியுமென ஆகி"

தம்பி தங்கச்சி....
சந்திரிகாவெனும்
"பேயின்" பிள்ளைகள் -
பெற்றவர் தமக்கு
கட்டிய வீட்டையே
கல்லறையாக்கிப்
போட்டதோ?

அன்பைச் சுமந்தும்
அறிவைச் சுமந்தும்
ஆடிமகிழந்த வீடுபொடிந்து
கண்ணில் ஈரமும்
நெஞ்சில் துக்கமும்
தலையில் பாரமும்
சுமக்கவும் ஆனதோ
கண்ணே!

இழப்பே இருப்பாய்
இருப்போ நெருப்பாய்
எம்மை
ஆள்பவர் ஆக்கிய
கொடுமையை
"நாகரீகம்" பேசும் நாடுகள்
காணாது
நாக்கை எங்கே அடகு
வைத்தன?

வீட்டுக்கு வீடு வைத்த
வேலியை
நாட்டுக்கும் எல்லையில்
நம் முன்னோர்கள்
நாட்டாமல் போனதால்
வந்த வாழ்வது;
வளர்ந்த கேடிது!
இதை....
அசைபோட்டு நடைபோடு
புலியாகிப் போராடு.

கா. செம்மல்
சோலை தமிழ்நாடு


பாவலரேறு பெருஞ்சித்திரனாரால் 'தமிழாகரன்' என்று அழைக்கப்பட்ட நடிகர் மன்சூர் அலிகான், கண்மூடித்தனமாக படுகொலை செய்யப்படும் ஈழத் தமிழர்களை, இங்குள்ள அரசியல் கட்சிகள் பஞ்சாயத்துத் தலைவர் நாற்காலிப் போட்டியில் மறந்து விட்ட நிலையில், தனியொருவராக மத்திய அரசை எதிர்த்து குரலெழுப்பினார். சிங்கள அரசையும் அதன் வல்லாண்மைக்கு துணைபோகும் இந்திய அரசையும் கண்டித்து 25.10.95 அன்று சென்னைக் குறளகம் எதிரில் ஒரு நாள் அடையாளப் பட்டினிப் போராட்டம், நடிகர் மன்சூர் அலிகான் தலைமையில் நடைபெற்றது. மன்சூர் அலிகான் மக்கள் நல மன்றங்கள், தமிழர் தேசிய இயக்கம், அறிவியக்கப் பேரவை, தமிழ் தமிழர் இயக்கம், சைதை தமிழ் இளைஞர் பேரவை, திராவிடர் கழகம், திராவிடர் கழகம் (இரா) உட்பட பல்வேறு அமைப்புக்கள் கலந்துகொண்டன.

சில சினிமா நடிகர்கள் அரசியலுக்கு வரலாமா ? வேண்டாமா ? என்று பிரபல ஜோதிடர்களிடம் 'பலன்' பாரத்துக் கொண்டிருக்கிறார்கள். பலர் தீபாவளிப் படங்களின் வசூல் கணக்கில் மூழ்கிப்போயிருக்கிறார்கள். இன உணர்வு என்பது சினிமாக்காரர்களுக்கு அன்னியமான சொல். ஆனால் மன்சூர் அலிகானோ அவர்களிலிருந்து வித்தியாசமாக தெருவுக்கு வந்து தமிழனுக்காய் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.


அரசியல் கட்சிகள் தொடங்கியிருக்க வேண்டிய பணியைச் சரியான நேரத்தில் தொடங்கியுள்ள மன்சூர் அலிகான் பாராட்டுக்குரியவர்.

இத்தகைய போராட்டங்களை தமிழர் அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் ஆதரிக்க வேண்டியதும், முன்னின்று செய்ய வேண்டியதும் தலையாய கடமை.

பத்தாயிரம் பேர் புலிகளுடன் இணைந்தால்...




பத்தாயிரம் பேர் புலிகளுடன் இணையாவிட்டால்..




www.tamileelamarchive.com




## தமிழ்மண் மீட்பு பிரச்சார இயக்கம்

தமிழர்கள் இழந்த மண்ணைப் பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாகவும், இருக்கும் மண்ணை தமிழர்கள் காப்பாற்றும் முகமாகவும் ஒரு பிரச்சாரப் பயணத்தை தமிழர் தேசிய இயக்கமும் உழைக்கும் மக்கள் விடுதலைக் கழகமும் இணைந்து தமிழகத்தில் மேற்கொண்டன. 1995-ம் ஆண்டு அக்டோபர் 30, 31-ம் திகதிகளில் இந்த பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழகத்தின் தெற்கெல்லையில் தேவகுளம், தீர்மேடு, நெய்யாற்றங்கரை, நெடுமங்காடு, செங்கோட்டையின் வனப்பகுதி ஆகியவற்றையும், வடக்கெல்லையில் திருப்பதி உள்ளிட்ட சந்திரகிரி தாலுகாவும், சித்தூர், திருக்காளத்தி, பாமனேறு, கும்பம் ஜமீன் பகுதிகளும், மேற்கெல்லையில் கோலார்தங்கவயல், பெங்களூர் தண்டுப்பகுதி, கொள்ளைகால் தாலுகாவின் வனப்பகுதி, கொச்சின் சித்தூர் பகுதி, பாலக்காடு பகுதி ஆகியவற்றையும் பறிகொடுத்தோம். கச்சைதீவை இந்திய அரசு இலங்கைக்கு தாரைவார்த்தது. இராசேந்திரசோழன் காலம் முதல் தமிழர் ஆட்சிக்குட்பட்ட

அந்தமான் நிக்கோபர் தீவுகள
இந்தியா அரசு தனது நேரடி அ
கைக்கு எடுத்துக் கொண்டது.
கிரி மாவட்டத்தில் பிழைக்க வ
படுகர்கள் அப்பகுதியை படு
மாநிலமாக ஆக்க வேண்டும் எ
கோரி வருகின்றனர். நீலகிரிபகு
யில் கூடலூர்த் தாலுகாவை
ளத்துடன் சேர்க்க வேண்டும் எ
மலையாளிகள் கோரி வருகின்றன
குமரி மாவட்டத்தை கேரளத்துட
சேர்க்க வேண்டும் என நா
பாதுகாப்பு இயக்கம் தீர்மான
நிறைவேற்றியுள்ளது. இது ஒரு பு
றுக்க, தமிழகத்தின் நகர்ப்பகுதிக
லும் கடற்கரைகளிலும், மலை
தோட்டங்களிலும் மார்வாடிகள
குஜாராத்தி சேட்டுகளும் பெ
பகுதியை வாங்கி வருகின்றன
இருந்த மண்ணை இழந்தோ
இருக்கும் மண்ணையும் தமிழர்
பறிகொடுக்கும் நிலையில் இருக்கி
றோம். இந்நிலையில் கன்னி
குமரி, ராமேஸ்வரம், கோவை, ஓ
திருப்பதி, கூடலூர் ஆகிய
இடங்களில் இருந்து அம்மண்ணை
எடுத்துக் கொண்டு பல்வேறு வ
தடங்களில் பிரச்சாரம் செ
கொண்டு, சென்னையை நோ
இந்த இயக்கம் நடைபெற்றது.
பிரச்சாரத்துடன் தமிழீழத்தில் த
மண்ணைக் காப்பதற்காக



தமிழீழ ஆவணக் காப்பகம்
www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மக்கள், விடுதலைப் புலிகள் தலைமையில் நடத்திவருகிற போராட்டம் எடுத்துக்காட்டாக மக்களுக்கு உணர்த்தப்பட்டது. செல்லும் வழிகளில் எல்லாம் மக்கள் பெருவாரியாக இந்த இயக்கத்திற்கு ஆதரவும் வரவேற்பும அளித்தனர். தாய்மார்கள் இந்த மண்ணுக்கு ஆராத்தி எடுத்து பொட்டு வைத்தனர்.

தமிழக மக்களிடையே தமிழகத் தாயகம் பற்றிய உணர்வை இந்த இயக்கம் எற்படுத்தியுள்ளது எனக் கூறலாம். எடுத்துச் செல்லப்பட்ட மண் தமிழகப் பெருவிழாவில் கொண்டு வரப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. திரண்டு இருந்த



மக்களின் அனைவரும் இழந்த மண்ணை மீட்கவும் இருக்கும் மண்ணை காக்கவும் உறுதி பூண்டனர்.

## தமிழகப் பெருவிழா

தமிழகம் அமைந்திட்ட 1956 நவம்பர் 1-ம் திகதியை முன்னிட்டு முதல் முறையாக தமிழகத்தில் 'தமிழகப்பெருவிழா' என்ற பெயரில் விழா ஒன்று எடுக்கப்பட்டது. நவம்பர் 1 மாலை சென்னையில் நடந்த பேரணியில் 10000-க்கும் அதிக மான மக்கள் கலந்து கொண்டனர். பல்வேறு அமைப்பினரும் கலந்து கொண்ட பேரணிக்கு தமிழறிஞர் சாலைஇளந்திரையன் தலைமை தாங்கினார். தொடர்ந்தும் மறு நாளும் நடந்த கருத்தரங்கில் பல தமிழறிஞர்களும், படைப்பாளி களும், இயக்கவாதிகளும், பலசமயப் பெரியவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர். தமிழ் சான்றோர் பேரவை சார்பாக ஏற்பாடு செய் யப்பட்ட கூட்டத்தில் திரு. சிலம் பொலி செல்லப்பா அவர்கள் தலைமையேற்று அனைத்தையும் வழிநடாத்தினார். 'தமிழகப் பெரு விழா'வில் தமிழ் மற்றும் தமிழர்தம் வாழ்வு பற்றி எடுத்துக்கொண்ட தலைப்புக்கேற்ப பலர் பேசினாலும் தலைப்பை மீறி தமிழீழம் பற்றியும் விடுதலைப்புலிகள் அமைப்புப் பற்றியும் ஈழமக்களின் வீரம் செறிந்த போராட்டம் பற்றியுமான கைதட்ட லால் அரங்கம் அதிர்ந்தது. கொடுக் கப்பட்ட கோசங்களையும் தாண்டி தமிழீழத்திற்கு ஆதரவாக தாங்களா கவே முன்வந்து தமிழர்கள் கோஷம் எழுப்பினர். இக்காலகட்டத்தில் தமி ழகத்தில் நிலவும் தமிழ் உணர்வை இப் பெருவிழா பிரதிபலித்தது.

## தமிழீழப் பிரச்சினை தொடர்பாக தமிழகத்தில் நடாத்தப்பட்ட கூட்டங்கள்

மூன்றாவது ஈழப்போர் தொடங் கிய பிறகு தமிழகம் முழுவதும் அடக்கி வைக்கப்பட்டிருந்த தமி ழின உணர்வு அடங்க மறுத்து கரையறுத்து நிற்பதைக் காணமுடி கிறது. குறிப்பாக தமிழீழ விடுதலை ஆதரவு கூட்டமைப்புச சார்பாக சென்னையில் நடந்த கருத்தரங்கும், 11.11.1995 அன்று நடந்த இலங்கைத் தூதரக முற்றுகையும் குறிப்பிடத் தக்கவை. 30.11.1995 அன்று அனைத் துக்கட்சிகளின் சார்பாக நடந்த பொதுவேலை நிறுத்தும் இலங்கை அரசுக்கும், சிங்கள அரசுக்கும் அச்சத்தை உண்டாக்கி இருந்தது. 6 கோடி தமிழர்கள் பங்கெடுத்த இந்த



நிகழ்ச்சியில் விமான நிலையங்கள் கூட இயங்கவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

தமிழர் தேசிய இயக்கம், உழைக் கும் மக்கள் விடுதலை இயக்கம், திராவிடர் கழகம், தமிழ் தமிழர் இயக்கம், தமிழ்த் தேசிய பொதுவு டமைக் கட்சி, தமிழ் நாடு மார்க்சிய லெனினியக் கட்சி மற்றும் பல அமைப்புக்கள் சென்னை, திருச்சி, கோவை, திண்டுக்கல், மதுரை, ஒசூர், தஞ்சை, கோவை, விழுப்புரம் ணற்றும் தமிழகமெங்கும் நடத்திய கூட்டங்களும், தொடர் முழக்கப் போராட்டங்களும் உண்ணாவிரதப் போராட்டங்களும் சந்திரிகா உருவ எரிப்புக்களும் குறிப்பிடத்தக்கன.

மேலும் தேர்தல் கட்சிகளின் சார்பில் தி.மு.க.வும், ம.தி.மு.க.வும், பா.ம.க.வும் நடாத்திய போராட்டங் கள் மக்களிடடையே நிலவும் உணர்வைப்பிரதி பலிக்கின்றன. அனைத்து போராட்டங்களையும் தாண்டி திருச்சி மாவட்டம் பெரம்பலூரில் அப்துல் ராகூப் எனும் தமிழ் இளைஞர் தமிழ் ஈழ மக்களின் மீதான போரைக்கண் டித்து தீக்குளித்துள்ளார் என்பதும்



அனைவர் நெஞ்சிலும் கொப்பளிக் கும் கோபத்தின் வடிவமாகவே திகழ்கிறது. தமிழர் உள்ளங்களில் நீறு பூத்த நெருப்பாக இருந்த இன உணர்வு பற்றி எரிகின்றது என்பதை அறுதியிட்டுச் சொல்லமுடியும்.

**தொகுப்பு: சுதாகர்**
**தமிழ்நாடு**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

**எரிமலை சிறுகதைப் போட்டிக்காக இதுவரை எமக்குக் கிடைத்த சிறுகதைகளில் தேர்வான சிறுகதைகளை எரிமலையில் தொடர்ந்து பிரசுரிக்கவுள்ளோம். இச்சிறுகதைகளில் 1ம், 2ம், 3ம் இடங்களை வாசகர்களே தேர்வுசெய்து எமக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கின்றோம்.**

# மண்ணை மறப்பதா

வானத்துக்கும் பூமிக்கும் இடையில் மேகங்களோடு மேகமாக பறந்து கொண்டிருக்கும் அந்த விமானத்தில் அமர்ந்திருக்கும் பயணிகளில் அவனும் ஒருவன். தாய் செல்லமாக ‘சத்தியமோனே’ என்று அழைப்பாள். மூன்று தங்கைகளின் செல்ல அண்ணன். அவனுக்கு ஒரு செல்லத் தம்பி. காலங்காலமாக கடலை நம்பி வாழ்ந்த குடும்பம். ஆழ்கடலில் தந்தையோடு தோழனாக சிரித்துப் பேசி வலை இழுத்தவன். நேவிக் கொடுமையால் தந்தை கரைவலையோடு மட்டும் நின்று கொண்டு, இருந்த வள்ளம், தாயின் தாலி, காப்பு, சங்கிலி எல்லாம் விற்று இன்று சத்தியும் விமானம் ஏறிவிட்டான். பயமும் சோகமும் சேர்ந்த அவன் முகம் நிறையவே மாறி இருந்தது. பருத்தித்துறை மண்ணில் கால் புதைய நடந்தவன். சைக்கிளையும் தட்டிவானையும் மட்டும் கண்டு பழகியவனுக்கு விமானம் ஏறும்போதே கால் நடுங்கியது. கட்டுநாயக்கா விமானத்தில் இருந்து விமானம் எழும்பும்போதே தன் இருக்கைகளை இறுக்கிப்பிடித்தவன் தான். இன்னமும் விடவில்லை. அவன் மனமும் சிந்தனையை விடவில்லை. தாய் சொன்ன வார்த்தைகளே மீண்டும் மீண்டும் அவன் காதுகளுக்குள். “மோனே சத்தி சும்மா இஞ்ச இருந்து என்ன செய்யப் போற, கிடக்கிறதை வித்தெண்டாலும் உன்னை ஜெர்மனிக்கு அனுப்பி விடுகிறம். நீ அங்கின போனாத்தான் பெட்டயளை கரை சேர்க்கலாம்”. வேண்டாம் என்று மறுத்தவனை வெளியில் இருந்து வலை பின்னும் தந்தையின் வார்த்தைகள் ஆத்திரமூட்டுகிறது. “ஓ உன்ர மோனுக்கு அதுக்கெங்க நேரம். தெண்டச்சோறு திண்டுபோட்டு நோட்டீஸ் ஒட்டுறதோட சரி”. புலிகளின் வீரச் செயல்களையும் வீர மரணமடைந்தோரின் வீர அஞ்சலிகளையும் ஒட்டுவதில் அவனுக்கு அளவில்லா மகிழ்ச்சி. அதை சில வேளைகளில் காணும் சத்தியனின் தந்தை மாணிக்கத்திற்கு வயிற்றெரிச்சல். அதுவும் பக்கத்து வீட்டு முருகேசர் வீட்டைப்பார்க்கும் போது இன்னும் எரிச்சல். “பார் அந்தா எல்லோ குடுத்து வைச்சது. பெத்தாலும் பெத்துது ரெண்டு பெடியளை, சுவிஸ் போனாங்கள், உழைச்சு அனுப்பினாங்கள்ச் பெட்டயளையும் கரைசேர்த்து கல்வீடும் கலர் ரீவியும் எண்டு இருக்குது.”

இப்படியே தந்தையும் தாயும் சொல்லிச் சொல்லிதான் அவன் மனதை மாற்றி அனுப்பினவர்கள். முக்கியமாக சத்தி தன் தாயின் கெஞ்சலுக்காவும் கூடப்பிறந்த தன் சகோதரிகளுக்காவும்தான் தன் நாட்டையும் தன் நாட்டுக்குச் செய்து கொண்டிருந்த அந்த குட்டிச் சேவைகளையும் மறந்து விட்டு இன்று பறந்து கொண்டிருக்கிறான்.

தியாகி திலீபனின் படத்தை சத்தி வீதியில் வைக்க, அவன் மூத்த தங்கை நந்தினி ஆர்வத்தோடு மாலை கட்டிப் போட்டு விளக்கேற்றியது அவனால் மறக்கமுடியாத சம்பவம். சத்தியை விட நந்தினிதான் புலிகளைபற்றி அதிகம் பேசுவாள்; புகழுவாள். அவளுக்காகத்தான் இன்று அவன் கடல் தாண்டி விட்டான். இப்படியே பலவாறும் சிந்தித்துக் கொண்டிருந்தவனின் அருகே, மயிலுடையோடும் மான்விழியோடும் கிளியழகோடும் ஒரு விமானப் பணிப்பெண் தனது அதிகார மொழியில் கனிவான குரலோடு “யூஸ்பொண்ட” என்றவளைப் பார்த்து, வேண்டாம் என்று சொல்ல நினைத்தவன் ஒரு நிமிடம் யோசித்து, இன்று நாளை என ஏஜன்சி ஏமாத்திய அந்த கொஞ்ச நாட் கொழும்பு வாழ்க்கையில் பொறுக்கிய சிங்களத்தால் “எப்பா” என்று சொல்லிவிட்டு மீண்டும் சிந்திக்கத் தொடங்கினான். “இனி அப்பரும் முருகேசர் மாதிரி தங்கச்சியவையை கரைசேர்த்து கல்வீடும் கலர் ரீவியும் வாங்கலாம்” அவன் சிந்தனையை விட வேகமாக விமானம் போய்ச் சேர்ந்தது. எத்தனையோ தடைகளுக்கு அப்பால் ஜெர்மன் போய் சேர்ந்து விட்டான். அவனைப் போல அனைவரும் தாங்கள் செய்த புண்ணியமே வந்து சேர்ந்து விட்டோம் என்று பேசிக்கொண்டார்கள். நாட்டை விட்டு நாடு வந்து அகதிகளாவதில் அப்படி என்ன மகிழ்ச்சியோ என்று நினைத்தவன் தானும் மனதார மகிழ்ச்சி அடைகிறான். அவனுக்கும் அகதிப் பணம் கிடைத்து விட்டது. ஆழ் கடலில் மீன்பிடித்து வித்த காசை விட இது பெரிய காசு தானே; அதுவும் சும்மா இருக்க வந்த காசு. அப்படி பலவாறும் நினைத்த அவன் மனதில் ஒரு சலனம்: “நாங்கள் அடிமைகள்; அவர்கள் தருவதை கை நீட்டி வாங்கி திண்டு குடித்து வாழும் சிறைக்கைதிகள்.”

இப்படி இரண்டு பிரிவாக அவன் மனம் போராடி, வென்றது பணம் தான். நாளடைவில் தன் மானம் மறந்தான். ஜெர்மனியர் முன் கைகட்டி தலை குனிந்து அவர்கள் பின்னும் முன்னும் ஓடி ஓடி அடிமையாகச் சுழன்றான்.

கரைவலைக்கு செல்வது அவமானம் என்று கருதியவன், இன்று ரோட்டுக் கரைகளைக் கூட்டவும், பாத்திரங்கள், பீங்கான்கள் கழுவவும் நாணவில்லை. தாயின் விற்ற தாலியும் தந்தையின் தொழில் சாதனமும் அடிக்கடி அவன் கண்ணில் தோன்றியது. “விற்றதையெல்லாம் மீண்டும் வாங்க வேண்டும், தங்கைமாரை கரை சேர்க்க வேணும், முருகேசர் மாதிரி வீடு கட்ட வேணும்.”

அடிக்கடி தன் மனதுக்குள் சொல்லிக் கொள்வான். இப்படியே மூன்று வருடங்கள் முடிந்த பின் நந்தினிக்கு திருமணம் பேசுவதாக அம்மா எழுதியிருந்தது அவனுக்கு அளவில்லா மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஆனால் நந்தினி எழுதிய கடிதத்தோடு அந்த மகிழ்ச்சி குறைய ஆரம்பித்தது. “அண்ணா நீ வெளியில் இருப்பதால் என்னைப் பெண் பார்க்க வருவோரெல்லாம் ஐந்து லட்சம், ஆறுலட்சம் கேட்கிறார்கள். அம்மா மூன்று, நான்கு என்று

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சொன்னால் எழுந்து போய்விடுகிறார்கள். அவர்கள் அப்படிப் போவது எனக்கு மகிழ்ச்சி. பெற்ற மகனையே ஆடு, மாடு போல் விலை பேசி விற்க நினைக்கும் பெற்றோர்களை என் மாமன் மாமியாக என்னால் ஏற்க முடியாது. அம்மா சொல்லுவதுதான் சரியென்று தலையாட்டும் அந்த ஆண்மகனை என் கணவர் என்றும் என்னால் ஏற்க முடியாது. அண்ணா இந்த வருடமும் திலீபன் அண்ணாவின் படத்துக்கு மாலை கட்டிக் கொடுத்தேன்." அவள் எழுதிய கடைசி வரிகளால் அவன் மனம் வருத்தப்பட்டதுடன் மகிழ்ச்சியும் கண்டது. இன்றோடு நான்கு வருடங்களாக



தான் மறந்து விட்ட அந்தச் சிறிய தொண்டுகளை தன் தங்கை செய்வதில் அவனுக்கு மகிழ்ச்சிதான். இந்தக் காரியங்களை தன்னால் செய்ய முடியாது போன கவலை அவனுக்குள் எழும். அது ஒரு வெறுப்பையும், கோபத்தையும் அவனில் ஏற்படுத்தியது. இருந்தும் அதை மறந்து சக தோழர்களோடு வேலை, வேலை, பணம், பணம் என்று அலைந்து சேர்த்து பணத்தோடு மீண்டும் தாய்க்கு கடிதம் எழுதினான். "அம்மா எவ்வளவு கொடுத்தென்றாலும் நந்தினியை கட்டிக்கொடுங்கோ"

நந்தினியின் திருமணப் படத்தோடுதான் இனி கடிதம் வருமென காத்திருந்தவனுக்கு கிடைத்தது ஏமாற்றம் மட்டும் அல்ல அவன் வாழ்வில் ஒரு திருப்பு முனையும் தான். இன்னும் ஒரு சில கிழமையில் திருமணப்பந்தலில் குந்த இருந்த நந்தினி வீட்டை விட்டு போய் விட்டாள். எங்கு போனாள் என்று தெரியவில்லை என்று அம்மா எழுதியதைப் பார்த்ததும் அவன் மனம் சொன்னது நந்தினி வேறு எங்கும் போய் இருக்க மாட்டாள். அவள் அடிக்கடி விளையாட்டாக சொல்வது இது தான். "அண்ணா எனக்கொரு ஆசை கடற்புலியாக வேணும். அதுவும் எங்கட கடல்ல உன்னையும் அப்பாவையும் தொழிலுக்கு போக விடாம மறிச்ச அந்த நேவி போட்ட உடைக்க வேணும்." சத்தியும் அடிக்கடி இப்படி கொஞ்ச நாளா பேசுவதைப் பார்க்க கவலையாய் இருக்கும். ஆனால் இது வரை அவன் துணியவில்லை.

ஆனால் பெண் என்று சொல்லி வீட்டுக்குள் பூட்டிப் பூட்டி வைத்த என் தங்கையா?.. அவளுக்காகத் தானே இங்க ஓடி ஓடி உழைத்தேன். இனி எனக்கேன் இந்த அடிமை வாழ்வு? அவன் தன்மான உணர்வு மீண்டும் விழித்துக் கொண்டது. தியாகி திலீபன் மீண்டும் மனக்கண்ணில் வந்து வந்து போக மெல்ல மெல்ல தன் தாய் மண்ணைக் காக்கவும், பார்க்கவும் துடித்தான்; துணியவில்லை. நாட்கள் நகர நகர தாய் தந்தையின் கடிதத்திலும் பல மாற்றங்களைக் கண்டான் "மோன சத்தி, நந்தினி போராடப் போட்டாள். இஞ்சை எத்தனையோ நந்தினி வருகினம். அடுப்பங்கரையையும் பள்ளிக்கூடத்தையும் உலகம் என நம்பி இருந்த நந்தினி இப்ப ஆறு, குளம், காடு, மலை எல்லாம் திரியிறாள். சைக்கிளே ஓடத்தெரியாத அந்த பிஞ்சுக் கால்களால் அனுதினம் கல்லும் முள்ளும் கடக்கிறாள். உன் அப்பரின் கண்பட்டோ என்னவோ முருகேசரின் வீடும் செல் விழுந்து இடிஞ்சு போச்சு. முருகேசரும் மனிசியும் கொழும்புக்கு ஓடிவிட்டினம். நாங்களும் கொஞ்ச நாட்கள் இடம் பெயர்ந்து போய் மீண்டும் இஞ்ச குடி வந்து விட்டோம். நந்தினி போனதோடு கொப்பரும் வீட்டைக் கவனிப்பதில்லை. மாவீரர் நாள் தான் அவருக்கு மங்கள நாள். சின்னவள் மாலைகட்டிக் கொடுக்க சைக்கிளை எடுத்துக்கொண்டு போனால் இரவு தான் வீடு வருவார். இப்படியே பல கடிதங்கள் வருவதால் தாய்நாடு பற்றி எண்ணத் தொடங்கினான். மீண்டும் தாய் மண்ணின் வாசம் அவன் கனவுகளில்.

தாய் நாடு செல்ல சகல அலுவல்களும் செய்யும் வேளையில் தான் நந்தினி எழுதிய கடைசிக் கடிதம் அவன் கைகளில் கிடைத்தது. "அண்ணா இதுவரை கடிதம் எழுதாதற்கு மன்னிக்கவும். இந்த மண்ணில்தான் எங்களுக்கு வாழ்வு உண்டு என்பதை உணர்ந்து நீ எழுதிய கடிதம் கண்டு அளவில்லா மகிழ்ச்சி. நீ நாட்டுக்குத் திரும்பி வருவதாக எழுதியிருந்தாய் அம்மாவுக்குத்தான் எத்தனை சந்தோசம் தெரியுமா அண்ணே! ..... இன்று தலைவரோடு சேர்ந்து உணவு உண்ணும் பெரும் பாக்கியம் கிடைத்தது.... மீண்டும் வாய்ப்பிருந்தால் சந்திப்போம்.

இப்படிக்கு தங்கை நத்தினி"

கடலின் நினைவு, காற்று வந்து பாடும் அலையின் கீதம் காதில் ஒலிப்பது போன்ற அதிர்வு.

தாயகம் நோக்கி அவன் புறப்பட்டான்.

அந்தக் கடற்கரை எங்கும் அவன் திரிந்தான். அலைகளின் மீது கிடந்தான். வெயிலில் காய்ந்தான். எல்லோர் வாயிலும் "எங்கட பிள்ளைகள் எங்களை விட்டுட்டுப் போட்டுதுகள்". ஆழ்கடலை நோக்கி புலிச் சின்னம் பொறித்த படகுகள் மின்னல் வேகத்தில் பறந்து கொண்டிருந்தன.

சத்தியின் தாய் தந்தையர் முகத்தில் மெல்லிய சோகம் படிந்திருந்த போதும் அவர்கள் தளரவில்லை. அவர்களின் மூத்த பெண் நந்தினி கரும்புலியாய் போனதையிட்டு நாளடைவில் ஒரு ஆத்ம திருப்தி.

இப்பொதெல்லாம் சத்தியின் தந்தை சத்திக்கு அடிக்கடி சொல்லுவது "மோன சத்தி முதல்ல எங்களுக்கு ஒரு நாடு வேணும். அதுக்குப் பிறகு தான் மற்றதெல்லாம்."

சத்தி நீண்ட நேரமாக புலி பாய்ந்த கடலை நோக்கியபடி இருந்தான். அவன் காதுகளில் அவன் தந்தை கூறிய வார்த்தைகள் வந்து ஒலித்துக்கொண்டிருந்தன. எங்களுக்கொரு நாடு வேணும். அதுக்குப் பிறகு தான் மற்றதெல்லாம்.

**- ந. கேதீஸ்வரி (குவைத்)**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



Printed by Vasan Litho Printer (London) - 0181-640436

www.tamileelamarchive.com